Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 464 பிலவ வருடம், மாசி மாதம் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை
(25.02.2022) ஹிஜ்ரி - 1443, ரஜப் - 23, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30



# உக்ரைனை தாக்கிய ரஷ்யா!

- தலைநகர் கீவ் உள்ளிட்ட நகரங்கள் மீது தாக்குதல்; பீதியில் மக்கள் வெளியேற்றம்
- நூற்றுக்கணக்கான முக்கிய இணையதளங்கள் முடக்கம்
- உக்ரைன் இராணுவத்தை சரணடையுமாறு ரஷ்ய ஜனாதிபதி புட்டின் கோரிக்கை
- உக்ரைனில் இராணுவச் சட்டம் அமுல் - போரில் பங்கேற்க மக்களுக்கு அழைப்பு
- ரஷ்யா மீது முக்கிய நாடுகள் பொருளாதாரத் தடை

14,15 பக்கம்

# காணி அபகரிப்புக்கு எதிராக தமிழ் எம்.பிக்கள் ஜனாதிபதி செயலகத்தை முற்றுகை!

## அரச புலனாய்வாளர்கள் பகிரங்கமாக படம்பிடிப்பு







02 பக்கம்

## தமிழ் எம்.பிக்கள் வருகை ஜெனீவாவுக்கான ஒன்று

### ஜனாதிபதி செயலகம் அறிவிப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களது வருகை தொடர்பில் எவ்வித முன்னறிவிப்பும் இல்லையென ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று, ஜனாதிபதி அலுவலகத்துக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஜனாதிபதியை சந்தித்து மகஜர் ஒன்றை கையளிக்கவே... 02 பக்கம்

## சஹ்ரானின் மனைவி ஹாதியா மீது தாக்கல்செய்யப்பட்ட வழக்கு விசாரணை மே 27ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

### குற்றப்பத்திரிகையை தமிழில் வழங்கவும் உத்தரவு

11 பக்கம்

## கமெண்ட் கந்தர்..



இனி எரிபொருள் விலைய கூட்டலாம்... இருக்கவே இருக்கிறது உக்ரைன் பிரச்சினை...




## உஷ்

இத்தாலியிலுள்ள இலங்கையர்கள் அனைவரும் எதிர்வரும் ஞாயிறு தினத்தன்று வத்திக்கான் வருமாறு அழைக்கப்பட்டுள்ளனராம்.

தற்போது வத்திக்கானில் தங்கியுள்ள பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை அன்றையதினம் புனித பாப்பரசருடன் இணைந்து விசேட அறிவிப்பொன்றை வெளியிடலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த தகவல் கிடைத்து அரச மேலிடம் அதிர்ச்சி யடைந்துள்ளதாம்.ஜெனீவா மாநாடு நெருங்கியுள்ளமையே இதற்கான காரணமாகும்.

## டீசல் இன்மையால் நுவரெலியா மரக்கறி போக்குவரத்து பாதிப்பு





06 பக்கம்

## டோர்ச் லைட்களுடன் சபைக்குச் சென்ற எதிர்க்கட்சி எம்.பிக்கள்



பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என ஆளுங்கட்சியினர் தெரிவிப்பு

02 பக்கம்

## காணி அபகரிப்பு விடயத்தை ஜனாதிபதி கவனிக்கவில்லை!

### சுமந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு

காணி அபகரிப்பு குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு பல தடவைகள் அறிவித்தபோதிலும் இதுவரையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். 02 பக்கம்





10 years of people friendly banking

THE ASIAN BANKER | ஏசியன் பாங்கர்

STRATEGIC BUSINESS INTELLIGENCE FOR ASIA'S FINANCIAL SERVICES COMMUNITY

அமானா வங்கி

உலகின் சிறந்த 50 இஸ்லாமிய வங்கிகளில் ஒன்றாக தரப்படுத்தப்பட்டுள்ளது

உலகின் தலைசிறந்த 50 இஸ்லாமிய வங்கிகளில் ஒன்றாக தெரிவு செய்யப்பட்டு சர்வதேசத்தின் அதிஉன்னத கௌரவிப்பைப் பெற்றுள்ளது

GLOBAL FINANCE

உலகின் சிறந்த மற்றும் வளர்ந்து வரும் இஸ்லாமிய வங்கி

IFFSA Awards

தெற்காசியாவின் சிறந்த இஸ்லாமிய வங்கி

இலங்கையில் வேகமாக வளரும் நுகர்வோர் வங்கி

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank



சுகயீனமுற்ற நிலையில் காலமான சிரேஷ்ட ஊடகவியலாளர் பந்துல பத்மகுமாரவின் பூதவுடல் பொரளை, கனத்த மயானத்தில் நேற்று மாலை நல்லடக்கம் செய்யப்பட்டது.

(படப்பிடிப்பு: பிரதீப் தம்பரகே)

# யாழ். சிறைச்சாலை கைதிகளின் உறவுகள் 2ஆவது நாளாகவும் உண்ணாவிரதப் போராட்டம்

## பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குமாறும் கோரிக்கை

(யாழ். நிருபர்)

“மனிதாபிமான அடிப்படையில் கைதிகள் விடுவிக்கப்படவேண்டும், பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும்” போன்ற கோரிக்கைகளை முன்வைத்து அரசியல் கைதிகளின் உறவுகள் நேற்று (24) இரண்டாவது நாளாகவும் ஆளுநர் அலுவலகம் முன்பாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப் பட்டுள்ள அரசியல் கைதிகள் மூவர் தொடர் உணவுத் தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற நிலையில், நேற்றைய தினம் அவர்களை சந்தித்த உறவினர்கள், வடமாகாண ஆளுநருடன் இடம்பெற்ற கலந்துரையாடல் தொடர்பாக தெரிவித்ததுடன், உண்ணாவிரத போராட்டத்தை நிறைவுக்கு கொண்டுவருமாறு வலியுறுத்தினர்.

இந்நிலையில், எமக்கு நியாயம் கிடைக்கும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிடமாட்டோம் எனக் கைதிகள் தெரிவித்ததையடுத்து, உறவினர்களும் அவர்களுக்கு ஆதரவாக வடமாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

மனிதாபிமான அடிப்படையில் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும், பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து அரசியல் கைதிகளின் உறவுகள் நேற்று வடமாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக உணவுத் தவிர்ப்பு





போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனிடையே நேற்று தனது அலுவலகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களை தொடர்புகொண்ட வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா போராட்டத்தை கைவிடுமாறு வலியுறுத்தியதுடன், உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுவரும் அரசியல் கைதிகளை சிறையில் சந்திக்கும் வாய்ப்பை ஏற்படுத்தித் தருவதாக வாக்குறுதி கொடுத்தார்.

இந்நிலையில், ஆளுநரின் வாக்குறுதியை உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுவரும் அரசியல் கைதிகளுக்கு தெரிவித்தபோது அதனை ஏற்க மறுத்தவர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபடப்போவதாக தெரிவித்ததையடுத்தே அரசியல் கைதிகளின் உறவுகளும் மீண்டும் வடமாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக வந்து உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இரத்தினசிங்கம் கமலாகரன், வைத்தியலிங்கம் நிர்மலன் மற்றும் பத்மநாதன் ஐங்கரன் ஆகியோரே இவ்வாறு உணவுத் தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

# நாடாளுமன்றத்துக்குள்ளும் தமிழ் எம்.பிக்கள் போராட்டம்!

“பறிக்காதே பறிக்காதே காணிகளைப் பறிக்காதே” என நாடாளுமன்றத்துக்குள் கோஷம் எழுப்பியும் பதாகைகளை ஏந்தியவாறும் நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் நிலங்கள் பறிக்கப்படுவதற்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியவற்றின் எம்.பிக்கள் சபைக்குள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வன ஜீவராசிகள் சட்ட ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தின்போதே தமிழ் எம்.பிக்கள் சபைக்குள் பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த விவாதத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சார்ள்ஸ் நிர்மலநாதன் உரையாற்றிய பின்னரே பதாகைகளுடன் எழுந்த தமிழ் எம்.பிக்கள், “பறிக்காதே பறிக்காதே காணிகளைப் பறிக்காதே”, “தமிழர் நிலங்களைப் பறிக்காதே” என கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், எஸ். வினோநோகராதலிங்கம், எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன், த.கலையரசன் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் விசனமடைந்த விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரான சி.பி. ரத்நாயக்கவும் இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவும் இந்த ஆர்ப்பாட்டத்தை உடனடியாக நிறுத்துமாறு சபைக்குத் தலைமை தாங்கிக்கொண்டிருந்த நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவரான அங்கஜன் இராமநாதனிடம் வலியுறுத்தினர்.

அவரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட எம்.பிக்களைக் கட்டுப்படுத்த முயன்றபோதும் அவர்கள் உரத்த குரலில் கோஷங்களை எழுப்பிக் கொண்டிருந்தனர்.

ஜெனீவா அமர்வுக்காகவே இந்த ஆர்ப்பாட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முன்னெடுக்கின்றனர் எனவும் தமிழ் மக்கள் மீது இவர்களுக்கு எந்த அக்கறையும் கிடையாது எனவும் இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்ற சம்பிரதாயம் தெரியாது விட்டால் சுமந்திரன் எம்.பியிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுமாறும் அவர் கூறினார்.

இதன்பின்னர் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் சி.பி. ரத்நாயக்க, மக்களுக்குச் சொந்தமான காணிகள் சுவீகரிக்கப்படாது என வழங்கிய உறுதிமொழியையடுத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஆர்ப்பாட்டத்தைக் கைவிட்டனர்.

# சேவை நிதியம் செலுத்தாதவர்களுக்கு எதிராக வழக்குகள் தொடர நடவடிக்கை





ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி உள்ளிட்ட சட்ட ரீதியிலான கொடுப்பனவுகளை செலுத்தாத சேவை வழங்குநர்களுக்கு எதிராக 15ஆயிரத்துக்கும் அதிகமான வழக்குகளை தொடர நடவடிக்கை எடுத்துள்ளதாக தொழில் திணைக்களம் தெரிவித்தது.

இதன்போது, நீதிமன்ற நடவடிக்கைகளில் காணப்படும் தாமதத்தை தவிர்ப்பதற்காக, தொழில் நீதிமன்றத்துக்கு நீதிமன்ற அதிகாரத்தை பெற்றுக்கொள்ளும் நோக்கில் புதிய சட்டமூலம் தயாரிக்கப்படுவதாகவும் தொழில் ஆணையாளர் நாயகம் பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்தார்.

# பணி நேரத்தில் விபத்துக்கு ஆளாகும் தொழிலாளரது இழப்பீடு அதிகரிப்பு

## அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் தீர்மானம்



பணியில் இருக்கும்போது தொழிலாளர்கள் விபத்துக்குள்ளானால் அவர்களுக்கு வழங்கப்படும் இழப்பீட்டு தொகையை இருபது இலட்ச ரூபாவாக அதிகரிக்க அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான தொழிலாளர் இழப்பீட்டு (திருத்தம்) சட்டத்தின் இரண்டாம் வாசிப்பை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க அமைச்சுசார் ஆலோசனைக் குழு அனுமதி வழங்கியுள்ளது.

பணியில் இருக்கும்போது விபத்துகளால் பாதிக்கப்படும் ஊழியர்களின் நலனை அதிகரிப்பதற்கான தொழிலாளர் இழப்பீட்டு (திருத்தம்) சட்டத்தின் இரண்டாம் வாசிப்புக்காக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க தொழிலாளர் அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் நேற்று முன்தினம் (23) கலந்துரையாடப்பட்டது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, இராஜாங்க அமைச்சர் பியங்கர ஜயரத்ன ஆகியோர் தலைமையில் ஆலோசனைக் குழு கூடியது. இதில் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன, நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோன் செனவிரத்ன, சாமர சம்பத் தசநாயக்க, சாந்த பண்டார மற்றும் கயஷான் நவனந்த ஆகியோரும் தொழில் அமைச்சின் செயலாளர் மாப்பா பத்திரண மற்றும் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் அரச அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

பணியிலிருக்கும் ஒருவர் விபத்துக்குள்ளாகி உடல் பூரண ஊனமுற்றாலோ அல்லது மரணித்தாலோ அவருக்கு வழங்கப்படும் இழப்பீட்டு தொகையான 05 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை 20 இலட்சம் ரூபாவாக அதிகரிக்கவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.


குறித்த இழப்பீட்டு தொகையை வழங்க தாமதமானால், அவருக்கு வழங்கப்படும் இழப்பீட்டு தொகைக்கு 10 வீதத்திலிருந்து 30 வீத வட்டியுடன் வழங்கும்பொருட்டு சட்டத் திருத்தம் செய்யவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்தின் வருடாந்த அறிக்கைகள் பலவும் இதன்போது மீளாய்வு செய்யப்பட்டன.

# இன்று 5 மணி நேரத்துக்கு அதிகமான மின்வெட்டு

Power Interruption Schedule – 25-02-2022

| Period | Schedule Group |
|---|---|
| 8:30-11:10 | C |
| 11:10-13:50 | A |
| 13:50-16:30 | B |
| 16:30-18:30 | C |
| 18:30-20:30 | A |
| 20:30-22:30 | B |



இன்றைய தினம் ஏ, பி, சி பகுதிகளுக்கு 04 மணி 40 நிமிடங்களும், ஏனைய பகுதிகளுக்கு 05 மணி நேரம் 15 நிமிடங்களும் மின்வெட்டு அமுல்படுத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

### காணி அபகரிப்பு...

காணி அபகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து வடக்கு, கிழக்கு மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பில் நேற்று போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

காணி அபகரிப்பு குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஒரு வருடத்துக்கு முன்பாகவே இரண்டு கடிதங்களை அனுப்பியிருந்தார். எனினும், இதுவரையில் இந்த விடயம் குறித்து ஜனாதிபதியிடமிருந்து எந்தவிதமான பதிலும் கிடைக்கவில்லை.

தொடர்ச்சியாக இந்த விடயம் குறித்து எழுத்து மூலமாக அறிவித்தும் சமல் ராஜபக்ஷவுடன் சந்திப்புகளை மேற்கொண்டும் தொடர்ச்சியாக காணி அபகரிப்பு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன் காரணமாகவே, இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட தீர்மானித்ததாக அவர் தெரிவித்தார்.

### தமிழ் எம்.பிக்கள்...

தாம் வந்ததாக அவர்கள் குறிப்பிட்டனர்.

நேற்று (24) ஜனாதிபதியை சந்திப்பதற்கான எவ்வித முன்னறிவிப்பும் அவர்களால் வழங்கப்படவில்லை. ஜனாதிபதி முற்பகல் ஏற்கனவே திட்டமிட்டிருந்த வேலைத்திட்டம் ஒன்றுக்குச் சென்றிருந்தார்.

இந்நிலையில், பிரதமரைச் சந்திப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளபோதிலும், அவர்கள் அந்தக் கூட்டத்துக்குச் செல்லாமல் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஜனாதிபதி அலுவலகத்தில் இல்லாதபோது வருகைதந்த நிலையில் நடத்தப்பட்ட இந்தப் போராட்டம், ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் அரசாங்கத்தைத் தவறாகப் பிரதிபலிப்பதற்கு திட்டமிட்டுச் செய்யப்பட்ட சதி என்பது தெளிவாகிறது என ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

### டோர்ச் லைட்களுடன்...

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று நாடாளுமன்றத்துக்குள் டோர்ச் லைட்களை எடுத்து வந்ததன் காரணமாக நாடாளுமன்ற அவையில் மீண்டும் அமளி ஏற்பட்டது.

நாட்டில் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் மின்துண்டிப்புக்கு எதிர்ப்பை வெளிக்காட்டும் வகையில், எதிர்க்கட்சியினர் இவ்வாறு டோர்ச் லைட்களை எடுத்து வந்துள்ளனர்.

எதிர்க்கட்சியினரின் இந்த எதிர்ப்புக்கு ஆளும் கட்சியினர் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளதுடன், இது நாடாளுமன்றத்தின் பாதுகாப்புக்கு கடும் அச்சுறுத்தல் என கூறியுள்ளனர்.

இது சம்பந்தமாக சபாநாயகரின் கவனத்துக்கு கொண்டுவர ஆளுங்கட்சியினர் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரியவருகிறது. நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மின் உற்பத்திகள் குறைந்துள்ளதுடன் மின் துண்டிப்பும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

### காணி அபகரிப்புக்கு...

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்படும் காணி அபகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து வடக்கு, கிழக்கு மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பில் நேற்று போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

ஜனாதிபதி செயலக வளாகத்தில் நேற்று (வியாழக்கிழமை) காலை குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 08 நாடாளுமன்ற உறுப்பினர்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும், சி.வி. விக்னேஸ்வரன் மற்றும் மனோ கணேசன் ஆகியோரும் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

தமிழ் எம்.பிக்கள் ஆர்ப்பாட்டம் செய்தபோது புலனாய்வுத்துறையினர் அவர்களை படம் எடுத்ததாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் இதன்போது தெரிவித்தார். ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட முடியவில்லை என்றால், வடக்கு, கிழக்கில் போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் எவ்வாறான அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுப்பார்கள் என்பதை உணர்ந்து கொள்ள முடிகின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், குறித்த போராட்டத்தில் பங்கேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே இரா.சாணக்கியன் மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இதன்போது அங்கு தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், “நேற்றைய தினம் நான் ஊடகங்கள் ஊடாக அரசாங்கத்துக்கு ஒரு செய்தியினை சொல்லியிருந்தேன். அதாவது தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வினை பெற்றுக்கொடுக்க அரசாங்கம் தவறினால் ஜனாதிபதி செயலகத்தினையோ அல்லது ஜனாதிபதியின் வீட்டினையோ முற்றுகையிடுவோம் என தெரிவித்திருந்தேன்.

இன்றைய தினம் (நேற்று) தமிழ் மக்களை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களாக நாம் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக கூடியுள்ளோம். இது ஆரம்பம் மாத்திரமே. எமது கோரிக்கையினை நிறைவேற்ற தவறினால் ஜனாதிபதியின் வீட்டினை முடக்குவோம் என்பதனை கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

அதேபோன்று இங்கு நாம் போராட்டத்தினை முன்னெடுக்கும்போது, ஊடகவியலாளர்கள் அல்லாத சிலர் வந்து எங்களை புகைப்படம் எடுக்கின்றனர். தமிழ் மக்களின் வாக்குகளினால் தெரிவுசெய்யப்பட்டுள்ள எங்களுக்கே இவ்வாறு அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது என்றால், வடக்கு, கிழக்கில் போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் எவ்வாறான அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுப்பார்கள் என்பதை உணர்ந்து கொள்ள முடிகின்றது” எனத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு 01
முதல் 15 வரையிலான
பகுதிகளில் தமிழன்
(தினசரி, வாரஇதழ்),
ஜூனியர் பத்திரிகை
வீடுகளுக்கே விநியோகம்
செய்யப்படும்.
தொடர்பு - சந்திரகுமார்
0777983308

மரண அறிவித்தல்,
நினைவஞ்சலி,
மற்றும் பிறந்தநாள்
விளம்பரங்களை
குறைந்த கட்டணத்தில்
பிரசுரிக்க
வெறும் 1000/=
மட்டுமே...
அழையுங்கள்
0761393805

# இன்றைய ராசி பலன்

25.02.2022 வெள்ளிக்கிழமை மாசி 13

**ஜோதிடர் நற்பவி**

தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141

**நட்சத்திரம்: கேட்டை** பிற்பகல் 12.07 வரை
**மூலம்** பி.ப. 12.07 - 26.02.2022 காலை 10.32 வரை
**யோகம்: வஜ்ரம்** அ.கா. 2.59 - இரவு 12.00
**திதி: அமர பட்ச நவமி** பிற்பகல் 12.57 வரை
**அமர பட்ச தசமி** பி.ப. 12.57 - 26.02.2022 காலை 10.39 வரை
**முற்கரணம்: கரஜம்** அ.கா. 2.02 - பி.ப. 12.57
**பிற்கரணம்: வணிஜம்** பி.ப 12.57 - இரவு 11.49

**சுப நேரங்கள்**
காலை 6.25 - 7.54
மாலை 5.23 - 6.23

**அசுப நேரங்கள்**

**ராகு காலம்**
காலை 10.54 - பி.ப 12.24

**குளிகை காலம்**
காலை 7.55 - 9.24

**எமகண்ட காலம்**
மாலை 3.23 - 4.53

**துர் முகூர்த்தம்**
காலை 8.48 - 9.36
பிற்பகல் 12.48 - 1.35

லோகநாயகி ஸஹஸ்ர சீர்ஷ வதனா அன்னை பிரத்யங்கிராவின் கருணையாலே நற்பவி நற்பவி நற்பவி

**மேஷம்:** சொத்து விற்பனை சம்பந்தப்பட்ட தொழில் இலாபங்கள் உண்டாகலாம். பணியிடங்களில் வேலைகள் தாமதமின்றி நிறைவேறும். சில கடன்களை திரும்ப செலுத்த இயலும் நிலை உருவாகலாம். தொழிலதிபர்களுக்கு சாதகமான நாளாக அமையலாம்.
சந்திராஷ்டமம்: கார்த்திகை நட்சத்திரம் பாதம் 1க்கு காலை 6.29 - பி.ப. 12.07

**ரிஷபம்:** வாழ்க்கைத்துணையின் உடல்நலத்தில் சிறிய கவனம் தேவைப்படலாம். தொழிலில் சில பிரச்சினைகள் உண்டாகலாம். பிறரின் குறைகளை தேடுவதை தவிர்ப்பது நன்மை. இல்லத்திலும் சிறிய மன பிரச்சினைகள் உண்டாகலாம்.
சந்திராஷ்டமம்: கார்த்திகை நட்சத்திரம் பாதம் 2/3/4க்கு பி.ப 12.07 - 26.02.2022 அதிகாலை 4.57வரை ரோகிணி நட்சத்திரத்திற்கு 26.02.2022 அ.கா. 4.57 - 27.02.2022 அ.கா. 3.15 மிருகசீரிடம் நட்சத்திரம் பாதம் 1/2க்கு 27.02.2022 அ.கா. 3.15 - பிற்பகல் 2.22 வரை

**மிதுனம்:** பணியிடங்களில் தாமதமின்றி வேலைகளை நிறைவேற்றுவது நல்லது. குடும்பத்தினரின் ஆலோசனையில் எந்த செயலை செய்வதும் நன்மை. மேலதிகமாக பகுதி நேர தொழில் முயற்சி ஏற்படலாம்.
சந்திராஷ்டமம்: மிருகசீரிடம் நட்சத்திரம் பாதம் 3/4க்கு 27.02.2022 பி.ப. 2.22. 28.02.2022 அ.கா.1.29.

**கடகம்:** தடைப்பட்ட வேலைகள் நிறைவடையும். நிதி ஒப்பந்தங்களில் கவனம் தேவைப்படலாம். புதிய பணிக்கு செல்லும் விருப்பம் நிறைவேறலாம். சிலரால் உங்கள் நல்ல செயல்களும் புறக்கணிக்கப் படலாம்.

**சிம்மம்:** உடல்நலத்தில் கவனம் தேவைப்படலாம். பிறரின் நலனை பாதிக்காத செயல்கள் நல்லது. பயணங்களில் தடை உண்டாகலாம். திருமண வாழ்வில் வெளிப்படைத்தன்மை பயனளிக்கும்.

**கன்னி:** தம்பதியரிடையே மகிழ்ச்சி நிலவும். அரசாங்க சம்பந்தப்பட்ட வேலைகளில் நல்ல நிலை தோன்றலாம். பணியிடங்களில் உங்களுக்கு ஆதிக்கமும், நிர்வாக சிக்கல்கள் உங்களால் தீர்க்கப்படும் நிலையும் உருவாகலாம். வாயுப் பிரச்சினை சிறிய அளவில் உண்டாகலாம்.

**துலாம்:** வியாபார தொடர்புகள் அதிகரிக்கலாம். பங்குச்சந்தை லாபங்கள் கிடைக்கலாம். பணியிடங்களில் மேலதிகாரிகளின் ஆதரவு மேம்படும். வருவாய்க்கான புதிய நல்ல வழி கிடைக்கலாம். இறையருளால் அதிர்ஷ்ட நிலை தோன்றலாம்.

**விருச்சிகம்:** சந்தைப்படுத்தும் வணிக செயல்களில் இலாபங்கள் கிடைக்கலாம். பிள்ளைகளால் பணவரவு ஏற்படலாம். செலவுகள் அதிகரிக்கலாம். சட்டம் சம்பந்தப்பட்ட விடயங்களில் நல்ல நிலை தோன்றலாம்.

**தனுசு:** சில பொறுப்புகள் நிறைவேறலாம். உங்கள் மேலாதிக்க எண்ணத்தால் சக பணியாளர்களால் விமர்சனம் செய்யப்படலாம். உங்கள் சிந்தனைகளால் புதிய மாறுதல் ஏற்படலாம். புதிய முதலீடுகளில் கவனம் தேவைப்படலாம்.

**மகரம்:** கோபத்தையும், ஆணவத்தையும் கட்டுப்பாட்டில் வைப்பது நல்லது. இல்லத்தின் வளங்கள் செழிக்கும். வணிக விற்பனை குறையலாம். காதல் முன்மொழிதல் ஏற்படலாம். அவசரமற்ற தூரப் பயணங்களை தவிர்ப்பது நல்லது.

**கும்பம்:** சில நிறுவனங்களில் பணியில் சம்பள உயர்வு கிடைக்கலாம். சிலரின் மீதான நம்பிக்கையிலும் அவதானம் தேவைப்படலாம். ஆன்மீக தலங்களுக்கு செல்லும் நிலை உருவாகலாம். அறிவார்ந்தவர்களின் நட்பு மேம்படலாம்.

**மீனம்:** வாழ்க்கையின் சில பிரச்சினைகள் நீங்க துவங்கும். வாயு சம்பந்தப்பட்ட சிறிய உடல்நல பிரச்சினைகள் உண்டாகலாம். அரசியல் சம்பந்தப்பட்டவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கலாம். புதிய தொழில் துவங்கப்படலாம்.

# மணிமேகலை பிரசுரத்தின் 45ஆவது புத்தகத் திருவிழா

மணிமேகலை பிரசுரத்தின் 45ஆவது சென்னை புத்தகத் திருவிழாவில் இலக்கிய புரவலர் ஹாசிம் உமர் இந்நூல்களின் 45 முதற் பிரதிகளை பெறுவதற்காக சென்னைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இந்நிகழ்வு எதிர்வரும் (27) ஞாயிற்றுக்கிழமை ஒரு மணிக்கு இடம்பெறவுள்ளது.

நீதியரசர் பா.புகழேந்தி (சென்னை உயர் நீதி மன்றம்) தலைமை தாங்கும் இந்நிகழ்வில், வரவேற்புரையை கலைமாமணி லேனா. தமிழ் வாணன் (தலைவர் மணிமேகலை பிரசுரம்) நிகழ்த்தவுள்ளார்.

இந்நிகழ்வுக்கு, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலை வகிப்பது குறிப்பிடத்தக்கது. சிறப்பு விருந்தினர்களாக பத்மஸ்ரீ டாக்டர் நல்லி குப்புசாமி மற்றும் நடிகை சீதா ஆகியோர் பங்கேற்கின்றனர்.

நூல்களின் வாழ்த்துரையை நடிகர் ராதா ரவி, நடிகை கௌதமி, அனிதா குப்புசாமி (தமிழிசைக் கலைஞர்), நடிகர் திருமுருகன், திரைப்பட இயக்குநர் கஸ்தூரி ராஜா,'பசங்க புகழ்' இயக்குநர் பாண்டிராஜ், நடிகர் மதன்பாப், நகைச்சுவை நடிகர் வையாபுரி ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். இந் நிகழ்ச்சிக்கான ஒருங்கிணைப்பை ரவி தமிழ்வாணன் மேற்கொள்ளவுள்ளார்.

# வடக்கு மாகாண ஆளுநருக்கு எதிராக வேலணை பிரதேச சபையில் கண்டன தீர்மானம்

*(யாழ். செய்தியாளர்)*

யாழ். தீவகப் பெண்கள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ள கருத்து, மிகுந்த மனவேதனையை தந்துள்ளது என சுட்டிக்காட்டியுள்ள வேலணை பிரதேச சபையின் உறுப்பினர்கள், அத்தகைய கருத்தை தாம் வன்மையாக கண்டிப்பதாக தெரிவித்துள்ளதுடன் எழுந்தமானதாகவும் இருக்கின்ற பிரச்சினைகளை விடுத்து புதிய பிரச்சினைகளை தோற்றுவிக்கும் முகமாகவும் கருத்துகளை ஓர் ஆளுநர் தெரிவித்திருப்பதானது அவரது அந்தப் பதவிக்கும் அப்பதவி ஏற்படுத்தியிருக்கும் விம்பத்துக்கும் பொருத்தமாக இருப்பதாக கருதவில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.



வேலணை பிரதேச சபையின் மாதாந்த அமர்வு அதன் தவிசாளர் கருணகரகுருமூர்த்தி தலைமையில் நேற்று (24) நடைபெற்றது.

இதன்போது பிரதேசத்தின் பல்வேறு அபிவிருத்திகள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பில் உறுப்பினர்களால் சுட்டிக்காட்டப்பட்டிருந்ததுடன் அவற்றுக்கான தீர்வுகள் குறித்தும் ஆராயப்பட்டது.

இந்நிலையில், சபையின் உறுப்பினர் மேரி மரில்டா ஆளுநர் தெரிவித்ததாக வெளியான செய்தியை சுட்டிக்காட்டி கண்டன தீர்மானம் ஒன்றை கொண்டுவந்திருந்தார்.

இதன்போதே சபையின் அனைத்து உறுப்பினர்களாலும் ஆளுநரது குறித்த விடயம் கண்டிக்கப்பட்டதுடன், அதற்கு அவர் மன்னிப்பு தெரிவித்து செய்தி வெளியிட வேண்டும் என்ற தீர்மானத்தையும் ஏகமனதாக நிறைவேற்றி அதை ஆளுநருக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறும் தீர்மானித்திருந்தனர்.

இது தொடர்பில் உறுப்பினர்கள் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

ஆளுநரது கருத்தை தீவகம்சார் சபையான எமது வேலணை பிரதேச சபை வன்மையான கண்டனங்களை தெரிவிப்பதுடன், மாவட்ட செயலகம் குறிப்பிட்டாக தெரிவித்திருக்கும் இவ்வாறான பல மாறுபட்ட கருத்துகளை வெளியிடும் முன்னர் ஆளுநர் என்ற பதவியின் பொறுப்பை உணர்ந்து அவ்விடயத்தை ஆராய்ந்து உண்மையை அறிந்து அதன் சாதக பாதகங்களை கருத்திற் கொண்டு கருத்துகளை வெளியிட்டிருக்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டியிருந்தனர்.

மேலும் யுத்தம் ஏற்படுத்தித் தந்த அவலங்களும் அண்மைய கொரோனா தொற்றின் தாண்டவமும் பல பெண்களின் வாழ்வியலை முழுமையாக புரட்டிப்போட்டுள்ளது. அதன் தாக்கத்தால் அவர்களது வாழ்வாதாரத்திற்கான பொருளாதாரத்தில் பின்னடைவு, கைம்பெண்கள் குடும்பம், கல்வியில் பின்னடைவு போன்ற காரணங்களால் தீவகத்தில் மட்டுமல்லாது வடக்கின் பல பாகங்களிலும் பல பெண்கள் தலைமை ஏற்று நடத்தும் குடும்பங்கள் பல்வேறு பாதிப்புகளுக்கு முகங்கொடுத்தும் வந்துகொண்டிருந்கின்றனர்.

அத்துடன், பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் என்பது தீவகத்தில் மட்டுமல்ல, வடக்கில் ஏன் நாடு முழுவதிலும் பெரும்பான்மையான முதன்மை வகிக்கும் ஒரு பிரச்சினையாகவும் காணப்படுகின்றது. இதை ஆளுநர் ஜீவன் தியாகராஜா அறிந்திருக்கவில்லையா என்றும் கேள்வி எழுப்பியிருந்தனர்.

ஆளுநர் என்பவர் அவரது ஆளுமைக்கும் ஆற்றலுக்கும் ஏற்றவகையில் செயற்படுவது அவசியம். அதை அவர் எதிர்காலத்திலாவது செயற்படுத்தி இந்த மாகாணத்தில் காணப்படும் பெண்களின் பிரச்சினைகளை இனங்கண்டு அவர்களது வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கும் பிரச்சினைகளிலிருந்து அவர்களை மீட்டு ஒரு சுய பொருளாதாரத்தை பெற்றுக்கொடுப்பதற்கும் பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் அர்த்தபூர்வமாக எதையாவது சாதித்தால் அவரது பொறுப்புக் காலம் ஒரு பொற்காலமாக அமையும்.

வடக்கின் ஆளுநர் அரச திணைக்களங்கள் கூறிய தகவலை ஆராய்ந்து தெரிந்துகொள்வதில் அக்கறை காட்டுவதை விடுத்து தீவகத்தில் சில பெண்கள் நடவடிக்கைகளில் தொடர்பாக சமூகப்பொறுப்பற்ற கருத்தை வெளியிட்டிருப்பது எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இதை தீவகத்தில் வாழும் எந்த குடிமகனும் ஏற்றுக்கொள்ளப்போவதும் கிடையாது.

இதேநேரம், ஆளுநர் பெண்கள் விடயத்தில் மனசாட்சியுடன் அக்கறை எடுப்பாராக இருந்தால் பெண்கள் சார்பில் நாங்களும் அவருக்கு உதவுவதற்கும் அவர் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தை வெற்றிகொள்ள செய்யவும் தயாராகவே இருக்கின்றோம் எனத் தெரிவித்தனர்.

# ரயில் மோதி இளம்பெண் பலி

## கொக்குவிலில் துயரம்



(யாழ். செய்தியாளர்)

**யாழ்ப்பாணத்தில் ரயில் மோதி இளம் பெண்ணொருவர் நேற்று (24) உயிரிழந்துள்ளார். இச்சம்பவத்தில் ராஜ்குமார் ஜெயந்தினி (வயது 23) எனும் பெண்ணே உயிரிழந்துள்ளாதாக பொலிஸார் தெரிவித்தனர்.**

**கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரிக்கு அருகிலுள்ள பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையை கடக்க முற்பட்டபோதே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.**

# இப்பாகமுவவில் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்





*(இக்பால் அலி)*

இப்பாகமுவ கமநல சேவைப் பிரிவில் நீர்ப்பாசனத் திணைக்கத்திற்குட்பட்ட கும்பலங்க படகெனவெள குளத்திற்கு சொந்தமான காணியை தனியார் ஒருவர் சுவீகரித்துக்கொண்டமைக்கு எதிராக கும்லங்க விவசாயிகள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் நேற்று (24) ஈடுபட்டனர்.

அங்கு 4 ஏக்கரும் ஒரு ரூட் 36 பேர்ச்சஸ் காணியை சுவீகரித்து அதற்கான வேலியினை இரு நாட்களுக்கு முதல் நிர்மாணித்துக்கொண்டமைக்கு எதிராக விவசாயிகள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதோடு, அதற்கு எதிராக கையொப்பம் திரட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இந்த நீர்ப்பாசன குளத்தின் மூலம் 360 ஏக்கர் வேளாண்மை செய்கைபண்ணப்படுவதாகவும் இந்தக் காணி சுவீகரிப்பின் மூலம் பாரியளவு வேளாண்மை செய்கை பாதிக்கப்படுமென தெரிவித்து விவசாயிகள் சுலோகங்களை ஏந்திக்கொண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



இதன்போது குருநாகல் மாவட்ட இப்பாகமுவ பிரதேச சபையின் உறுப்பினரும் குருநாகல் மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர் எம்.எஸ்.எம்.பாஹிம் கலந்துகொண்டு ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு ஆதரவாக கையொப்பமிடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

# தேசிய திட்டத்திற்கு அமைவாக நாடு முழுவதும் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துங்கள்!

## நகர, வீடமைப்பு அமைச்சின் அதிகாரிகளுக்கு பிரதமர் மஹிந்த பணிப்பு

தேசிய திட்டத்திற்கமைவாக கொழும்பு உட்பட நாடு முழுவதும் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நகர மற்றும் வீடமைப்பு அமைச்சின் அதிகாரிகளுக்கு நேற்று முன்தினம் (23) பிற்பகல் அறிவுறுத்தினார்.

அலரி மாளிகையில் நடைபெற்ற நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் செயற்படும் நகர்ப்புற மீளுருவாக்கத் திட்டம் மற்றும் கொழும்பு நகர்ப்புற மறுசீரமைப்பு திட்டத்திற்கான ஆதரவுத் திட்டம் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தின்போதே பிரதமர் இதனைக் குறிப்பிட்டார்.

2024ஆம் ஆண்டுக்குள் நகர்ப்புறத்தில் குறைந்த வசதிகொண்ட குடியிருப்புகளுக்கு பதிலாக 50 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்க எதிர்பார்ப்பதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் கலாநிதி எம்.எம்.எஸ்.எஸ்.பி யாலேகம இதன்போது தெரிவித்தார்.

பிரதானமாக கொழும்பிலுள்ள குறைந்த வசதிகொண்ட குடியிருப்புகளை அடுக்கு மாடி குடியிருப்புகளாக மாற்றுவதே



பிரதான நோக்கமாகும். இதன்படி, 14 ஆயிரத்து 611 வீடுகள் ஏற்கனவே பொதுமக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் மேலும் ஐயாயிரத்து 590 வீடுகள் தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருவதாகவும் கலாநிதி எம்.எம்.எஸ்.எஸ்.பி.யாலேகம பிரதமரிடம் தெரிவித்தார்.

இந்த வேலைத்திட்டங்களின் முதல் காலாண்டின் முன்னேற்றம் மற்றும் எதிர்வரும் காலாண்டுகளுக்கான எதிர்பார்க்கப்படும் முன்னேற்றம் குறித்து நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவரான ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் உதய நாணயக்கார முன்வைத்தார்.

அதற்கமைய, கலிங்க மாவத்தை, அறுநூற்று ஒன்று தோட்டம் (ஸ்டேடியம் கிராமம்) மற்றும் கொலன்னாவ ஆகிய இடங்களில் பூர்த்திசெய்யப்பட்ட வீட்டுத் திட்டங்கள் குறித்தும், கலிங்க மாவத்தை மற்றும் கொலம்பகே மாவத்தையில் இந்த ஆண்டு பூர்த்தி செய்யப்படவுள்ள வீட்டுத்திட்டங்கள் குறித்தும் விளக்கமளித்தார்.

குருநாகல் வில்கொடவில் செயற்படுத்தப்பட்டுவரும் குறைந்த வருமானம் பெறுவோருக்கான 300 வீட்டுத்திட்டப் பணிகள் குறித்து பிரதமர் அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

மேலும், சீன மானியத்தின் கீழ் ஆயிரத்து 996 வீடுகள் கிடைத்துள்ளதாகவும், தெமட்டகொட, பேலியகொட, மொரட்டுவ, மஹரகம மற்றும் கொட்டாவ ஆகிய பகுதிகளில் இந்த வீட்டுத் திட்டங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளதாகவும் உதய நாணயக்கார தெரிவித்தார்.

2024ஆம் ஆண்டுக்குள் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கான இந்தத் திட்டங்கள் அனைத்தையும் நிறைவுசெய்ய திட்டமிடுமாறு நகர்ப்புற அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் என்ற வகையில் பிரதமர் அறிவுறுத்தினார்.

ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் உதவியுடன் கொழும்பில் ஆப்பிள் தோட்டம் மூன்று கட்டங்களின் கீழ் நிர்மாணிக்கப்படும் 400 வீடுகள், கிம்புலாஎலயில் 472 வீடுகள் மற்றும் மஹரகமவில் 600 வீடுகள் நிர்மாணிக்கப்படுதல் உட்பட பல திட்டங்கள் குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

சிரேஷ்ட கலைஞர்களுக்கான வீட்டுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறதா என நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகளிடம் பிரதமர் கேட்டறிந்தார்.

குறித்த திட்டம் கொட்டாவ பழத்துறுவத்த (பழத்தோட்டம்) பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும், கலைஞர்களுக்காக 108 வீடுகள் அங்கு நிர்மாணிக்கப்படுவதாகவும் அதிகாரிகள் பிரதமரிடம் தெரிவித்தனர்.

வீடமைப்புத் திட்டங்களை நடைமுறைப் படுத்தும்போது குத்தகை அடிப்படையில் வாடகை செலுத்தும் குடியிருப்பாளர்களுக்கும் வீடுகள் வழங்கப்பட வேண்டுமென இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.


## பெயர் மாற்றம்

**ஏத்தாளை, திகழியைச் சேர்ந்த அழகய்யா வனஜா ஆகிய நான் கடந்த 1992 ஆம் ஆண்டு முதல் இஸ்லாம் மதத்தை தழுவி எனது பெயரை மொஹமட் நூமான் பாத்திமா றிஹானா (MOHAMED NUMAN FATHIMA RIHANA) என மாற்றியுள்ளேன் என்பதனை இலங்கை ஜனநாயக சோஷலிச குடியுரிமைக்கும் இலங்கை மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.**

எம்.என்.எவ்.றிஹானா

உக்ரைன் மீது இராணுவ நடவடிக்கைக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் உத்தரவிட்டிருப்பது உலக நாடுகளில் பெரும் அதிர்வலைகளை உண்டுபண்ணியிருக்கிறது.

அமெரிக்கா, ஐக்கிய நாடுகள் சபை உட்பட பல்வேறு தரப்புகள் விடுத்த கோரிக்கைகளையெல்லாம் கடாசித்தள்ளிவிட்டு போரைத் தொடங்கியிருக்கிறார் புட்டின். இன்னொரு நாட்டை ஆக்கிரமிக்க வேண்டாம் என்று கூறும் யோக்கியதை எந்தளவு அமெரிக்காவுக்கு இல்லையோ, அந்தளவுக்கு ஐக்கிய நாடுகள் சபைக்கும் மனித உரிமைகளை பற்றி வியாக்கியானம் கொடுக்கும் அருகதை இல்லை. இலங்கையில் போர் நடந்தபோதும், ஈராக்கில் சண்டை நடந்தபோதும் இவர்கள் நடந்துகொண்டவிதம் உலகத்திற்கு தெரியாததல்ல. ஏற்கனவே உலகப் பொருளாதாரம் கொரோனாவால் சீரழிந்து சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கும் நிலையில், இந்தத் தாக்குதல் அதில் மேலும் தாக்கத்தை செலுத்தப்போகிறது.

முன்னதாக உக்ரைன் மீதான இராணுவ நடவடிக்கையை அறிவித்துப் பேசிய ரஷ்ய ஜனாதிபதி புட்டின் ***"உக்ரைன் மீது இராணுவ நடவடிக்கைக்கு உத்தரவிடுகிறேன். இதன் நோக்கம், கடந்த 8 ஆண்டுகளாக உக்ரைன் ஆட்சியாளர்களால் சில மக்கள் இன அழிப்புக்குள்ளாகி வருகின்றனர். அவர்களின் துயரத்துக்கு முடிவு காண தாக்குதலுக்கு உத்தரவிடுகிறேன். உக்ரைனிலிருந்து நேட்டோ ஆதரவுப் படைகள் பின்வாங்க வேண்டும். உக்ரைன், நாசிகளின் கூடாரமாகியுள்ளது. உக்ரைன் வீரர்களே, உங்களின் ஆயுதங்களைக் கீழே போடுங்கள். ரஷ்யா - உக்ரைன் விவகாரத்தில் யாராவது தலையிட நினைத்தாலோ, எங்கள் மக்களுக்கு அச்சுறுத்தலாக மாறினாலோ நாங்கள் உடனடியாக தகுந்த பதிலடி கொடுப்போம். அதன் விளைவுகள் வரலாறு இதுவரை சந்தித்திராததாக இருக்கும்"*** என்று தெரிவித்திருந்தார். இவை இலேசான விடயங்கள் அல்ல.

சோவியத் யூனியன் என்ற அமைப்பிலிருந்த பெரிய நாடுகளில் ஒன்று உக்ரைன். மொழி, கலாசார அடையாளத்தில் ரஷ்யாவுடன் சில பிரதேசங்கள் ஒத்துப்போவதால் உக்ரைனை ரஷ்யா தன்னுடைய அங்கமாகவே கருதுகிறது. ஆனால், அந்த நாட்டு மக்களோ தங்களை ஐரோப்பாவின் பிற நாடுகளுடன் அடையாளப்படுத்த விரும்புகின்றனர். தடையற்ற வர்த்தகம், முதலாளித்துவப் பொருளாதாரம், அதிக ஜனநாயக உரிமைகள், மேற்கத்திய நாடுகளின் நுகர்வுக் கலாசாரம், பொழுதுபோக்குகள் ஆகியவற்றால் ஈர்க்கப்பட்ட அவர்கள் பழைய சோவியத் ஒன்றியத்தின் கட்டுப்பெட்டியான வாழ்க்கை முறையிலிருந்து சுதந்திரமான வாழ்க்கைக்கு ஆசைப்படுகின்றனர். ஒன்றியம் என்ற வார்த்தையே அர்த்தமற்றுப் போன பிறகு மீண்டும் ரஷ்யாவின் பிடிக்குள் வாழ அவர்கள் அஞ்சுகின்றனர்.

பொருளாதாரத்தில் வளரும் நாடு உக்ரைன். மனித ஆற்றல் வளர்ச்சியில் உலகத்தில் 74ஆ-வது இடத்தில் இருக்கிறது. வறுமையும், ஊழலும் அதிகம். வளமான விவசாய நிலம் இருப்பதால் வேளாண் பொருள் ஏற்றுமதியில் முக்கியமான நாடாகத் திகழ்கிறது. இராணுவ பலத்தில் ரஷ்யா, பிரான்ஸுக்கு அடுத்து வருகிறது. குடியரசு நாடு, ஜனாதிபதி தலைமையிலான ஒற்றை ஆட்சிமுறை நிலவுகிறது. நீதித்துறை, அரசு நிர்வாகத்துறை, சட்டம் இயற்றும் நாடாளுமன்றம் ஆகிய மூன்று முக்கிய உறுப்புகளைக்கொண்டிருக்கிறது. ஜனாதிபதி விளாடிமிர் ஜெலன்ஸ்கி. பிரதமர் டெனிஸ் ஷைமிஹால்.

ரஷ்யாவில் ஜனாதிபதி, பிரதமர், மீண்டும் ஜனாதிபதி என்று கடந்த 22 ஆண்டுகளாக ஆட்சிசெய்து வருகிறார் விளாடிமிர் புட்டின். மக்களுக்கு புட்டினின் ஐக்கிய ரஷ்யக் கட்சியின் ஆட்சி அலுத்துவிட்டது. ஆரம்ப காலத்திலிருந்த பொருளாதார வளர்ச்சி

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, பெப்ரவரி 25ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# ரஷ்யாவின் அதிரடி !

இப்போது இல்லை. வறுமையும், வேலையில்லாத் திண்டாட்டமும் அதிகரித்து வருகின்றன. ரஷ்ய அரசில் ஊழலும், வேண்டியவர்களுக்குச் சலுகை காட்டும் போக்கும், சலுகைசார் முதலாளித்துவ ஆதிக்கமும் வளர்ந்து வருகின்றன. ஆட்சியில் தானே தொடர வேண்டும் என்பதற்காக எதிர்க்கட்சிகளையும், எதிர்க்கட்சித் தலைவர்களையும் வெவ்வேறு காரணங்களைக் கூறி ஒடுக்கி வருகிறார் புட்டின்.

மக்களுடைய ஜனநாயக விருப்பங்களுக்கு மேற்கத்திய நாடுகள் தூபம் போடுவதால், நாட்டை பழைய கம்யூனிஸ்ட் ஆட்சிக்காலத்தைபோல் கட்டுக்குள் வைத்திருக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்கிறார். ரஷ்யாவிலேயே இயற்கை எரிவாயு, கச்சா பெற்றோலிய எண்ணெய் கிடைப்பது அரசுக்கு பொருளாதார வளத்தைத் தந்திருக்கிறது. சோவியத்கால இராணுவ பலம் அப்படியே குறையாமல் இருக்கிறது. எனவே, இவற்றைக்கொண்டு தானும் ஒரு வல்லரசுதான் என்று நிரூபிக்க புட்டின் முயல்கிறார். புதிய வல்லரசாகவும், பொருளாதார வலிமைமிக்க நாடாகவும் வளரும் சீனா, ரஷ்யாவை நெருக்கமான நண்பனாகப் பெற்றிருக்கிறது.

ஐரோப்பாவிலிருந்தும், மத்திய ஆசியாவிலிருந்தும் அமெரிக்காவை வெளியேற்றத் துடிக்கும் ரஷ்யாவுக்கும், சீனாவுக்கும் பொதுவான எண்ணமாக அமெரிக்க எதிர்ப்புணர்வு இருப்பதால், இரண்டும் இணைந்து செயற்படுகின்றன. அதனால்தான் நேற்றைய தாக்குதல் தொடர்பில் சீனா எதுவித கண்டனத்தையும் வெளியிடவில்லை.

நெருக்கடி என்றால் சீனா நமக்குத் துணை நிற்கும் என்ற நம்பிக்கையில் அமெரிக்காவைச் சீண்டிப்பார்க்க விரும்புகிறார் புட்டின். ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறிய அமெரிக்கா, இப்போது தன்னுடைய நாட்டு தொழில், வர்த்தகத்துறை மீட்சியில் மட்டுமே அக்கறையாக இருக்கிறது. எனவே, இந்த பலவீனமான நேரத்தில் ஐரோப்பிய நாடுகளை அச்சுறுத்திவைக்க உக்ரைன் விவகாரத்தில் நேரடியாகத் தலையிடுகிறது ரஷ்யா.

இது இராணுவ பலக் கூட்டை அடிப்படையாகக்கொண்ட போட்டியாகவும், ஐரோப்பிய சந்தையை யார் பிடிப்பது என்ற வர்த்தகப் போராகவும் கூட இருக்கிறது. அதைவிட முக்கியம் இரு பெரும் நாடுகளின் தலைவர்கள், தங்களுடைய அரசியல் எதிர்காலம் சூனியமாகிவிடாமலிருக்க, தங்களை செல்வாக்குள்ள தலைவர்களாக காட்டிக்கொள்ளவும் இந்தப் பிரச்சினையைப் பெரிதாக்கி வருகின்றனர்.

முதலிரண்டு உலகப் போர்களைவிட மிகப்பெரிய போருக்கு உக்ரைன் விவகாரம் இட்டுச் செல்லும் என்று ஊடகங்கள் அஞ்சும் அளவுக்கு நிலைமை இருக்கிறது. இதற்கு ஒரே காரணம், உக்ரைன், ரஷ்யா இரண்டுமே அணு ஆயுதங்களைத் தயாரித்து வைத்துள்ளன. மோதல் முற்றி போர் மூண்டால் அணு ஆயுதங்களை இரண்டும் பயன்படுத்தும் என்ற அச்சமும் ஏற்பட்டது. இதனாலேயே உலக நாடுகள் உக்ரைன் விவகாரத்தை கவனமாக கவனித்து வருகின்றன.

கொரோனா பெருந்தொற்று ஓயவில்லை. நோய்க்கிருமிகள் தொடர்ந்து உருமாற்றமடைகின்றன. பல நாடுகளில் ஊரடங்கு உத்தரவுகள் மக்களுடைய அன்றாட வாழ்க்கையை மட்டுமல்லாமல், பொருளாதாரத்தையும் மிக மோசமாகப் பாதித்து வருகின்றன. இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி இராணுவ ரீதியாகவும் எதையாவது சாதித்துவிட வேண்டும் என்று சில நாடுகள் தீவிரம் காட்டுகின்றன.

ரஷ்யாவுக்கு அடுத்து பெரிய நாடு; கிழக்கு ஐரோப்பாவிலுள்ள நாடு உக்ரைன். பரப்பளவில் ரஷ்யாவுக்கு அடுத்த இடம். 6,03,628 சதுர கிலோமீற்றர். மக்கள் தொகை 4.13 கோடி. தலைநகரம் கிவாவ். சோவியத் ஒன்றியம் சிதறியபோது 1991-இல் சுதந்திரம் பெற்றது. இதன் கிழக்கிலும், வட கிழக்கிலும் இருப்பது ரஷ்யா. வடக்கில் பெலாரஸ். மேற்கில் போலந்து, ஸ்லோவாகியா, ஹங்கேரி என்பன உள்ளன. தெற்கில் மோல்டோவியா, ருமேனியா என்பன உள்ளன. ரஷ்யாவுக்கு அடுத்து ஐரோப்பாவில் மிகப்பெரிய இராணுவ நாடு. 1994-இல் நேட்டோவுடன் கூட்டும் வைத்துக்கொண்டது. ஜனாதிபதியாக இருந்த விக்டர் யனுகோவிச் ரஷ்ய சார்புள்ளவர். ஐரோப்பிய ஒன்றியத்துடன் உக்ரைன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை நிறுத்திவைக்க முடிவுசெய்தார். அதை மக்கள் ஏற்கவில்லை. ஆர்ப்பாட்டங்களையும், ஊர்வலங்களையும் நடத்தினர். மக்களுடைய ஐரோப்பிய சார்பு கிளர்ச்சிக்கு 'ஐரோப்பிய மைதான்' என்ற பெயரே ஏற்பட்டது. யனுகோவிச் பதவியிலிருந்து தூக்கி எறியப்பட்டார்.

2014 மார்ச்சில் கிரீமியாவை ரஷ்யா தன்னுடைய நாட்டுடன் சேர்த்துக் கொண்டது. ஐரோப்பிய ஒன்றியத்துடன் ஆழமான - அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிய விரிவான வர்த்தக ஒப்பந்தம் செய்துகொள்ள விரும்புவதாக உக்ரைன் அறிவித்தது. அதை ஐரோப்பிய ஒன்றியம் வரவேற்றது. இவ்வாறு உக்ரைன் ஐரோப்பிய நாடுகள் பக்கம் சாய்வது பின்னாளில் தனக்கு ஆபத்தாகிவிடும் என்று அஞ்சுவதால் ரஷ்யா தீவிரமாகத் தலையிடத் தொடங்கியது. கிரீமியாவை ஆக்கிரமித்து தனது நாட்டுடன் சேர்த்துக் கொண்டதைபோல் உக்ரைனையும் சேர்த்துக்கொள்ளப் பார்க்கிறது. இதனாலேயே ரஷ்யாவுக்கு அமெரிக்காவும், நேட்டோ நாடுகளும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றன. பக்கத்து நாடுகளுடன் தேவையில்லாமல் எல்லைப் பிரச்சினை செய்யும் சீனாவும், ரஷ்யாவும் இப்போது தங்களுடைய வல்லாதிக்கத்தை நிலைநாட்டுவதற்காகவே தேவையின்றி மார்தட்டி வருகின்றன. இப்போதைக்கு இதுதான் உக்ரைன் நெருக்கடிக்கு ஒரே காரணம். இந்தப் பின்னணியில்தான் உக்ரைன் மீது இராணுவ நடவடிக்கைக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் உத்தரவு பிறப்பித்துள்ளார். இலங்கை ஏற்கனவே பொருளாதார விவகாரத்தில் தள்ளாடிக்கொண்டிருக்கிறது. எரிபொருள், தங்கம் உட்பட பொருளாதாரத்தை நிர்ணயிக்கும் விடயங்களில் இப்போதே தாக்கம் ஏற்பட ஆரம்பித்துள்ளது. இலங்கையும் அதன் நெருக்கடிகளை சந்திக்கும். இதில் சந்தேகமில்லை.

# நல்ல தருணம் இது; நழுவவிடக் கூடாது!



பெ.சிதம்பரநாதன்

தமிழக மீனவர்களைக் கைதுசெய்வதும், படகுகளைப் பறிமுதல் செய்வதுமான இலங்கையின் நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதுவரை ஏறக்குறைய 900இற்கும் அதிகமான தமிழக மீனவர்கள் பலியாகியும் உள்ளனர்.

இதேபோல் இலங்கை மீனவர்களை இந்தியக் கடற்படை சுட்டுக் கொன்றதுண்டா? இலங்கைப் படகுகளைப் பறிமுதல் செய்து சென்னை, இராமேஸ்வரம் துறைமுகங்களில் வைத்துள்ளதா? இல்லை என்பது நிஜம் மட்டுமல்ல. இதுபோன்ற இழிவை இந்தியா எப்போதுமே செய்ததில்லை. செய்ய முடிந்தாலும் செய்ததே இல்லை.

இந்தியா, அணுஆயுத பலமுள்ள வல்லரசு நாடு. இந்திய இராணுவத்தின் ஆயுத பலம், சீன தேசத்தையும், பாகிஸ்தானையும் கட்டுப்படுத்தி வைத்திருக்கும் அளவுக்கு இருக்கும் நிலையில், நமது ஏவுகணைகள், போர் விமானங்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள், ஹெலிகொப்டர்களே போதும். இத்தனை பலமுள்ள இந்திய தேசம், அளவில் மிகச்சிறிய, ஆயுதபலமும் இல்லாத, பொருளாதாரத்தில் கடனாளியாகி பிற நாடுகளிடம் கையேந்தி நிற்கும் நாட்டோடு இப்படி நடந்துகொள்வது ஆச்சரியம்தான்.

இந்தியாவின் 8 கோடி தமிழர்களும் பெருமூச்சுவிட்டாலே போதும். இலங்கையில் அது சூறாவளியாகிவிடும். இலங்கைக்கு இந்தத் துணிச்சல் அல்லது ஆணவம் வருவதற்குரிய பின்புலம் என்ன? சீன தேசம் இலங்கையின் கடற்பரப்பில் 1,000 ஹெக்டரை செயற்கையாக நிலப்பகுதியாக்கி ஓர் இராணுவத் தளத்தையே உருவாக்கி வருகிறது. அது நாளை இந்தியாவை மிரட்டுவதற்கு பயன்படுத்தப்படலாம்.

இவ்வாறு, பலவீனமான இலங்கை, யாருக்காகவோ இந்தியாவின் தமிழக மீனவர்களைத் தொடர்ந்து துன்புறுத்தி வருகிறது. இதற்கு ஒரு முடிவுகட்ட வேண்டாமா?

**இலங்கையில் சிங்கள இனம் மட்டும்தான் உள்ளதா?**

இலங்கையின் 2 கோடியே 10 இலட்சம் மக்கள்தொகையில் 16 சதவீத மக்கள் (35 இலட்சம் பேர்) தமிழர்கள். அவர்கள் மத ரீதியில் இந்துக்கள். 7 சதவீதம் முஸ்லிம்கள். 6 சதவீதம் கிறிஸ்தவர்கள். 70 சத வீத மக்கள் சிங்கள பௌத்தர்கள்.

சிங்கள இன அரசு சிறுபான்மைத் தமிழர்களை நடத்திவரும் விதத்தை நாம் நன்கு அறிவோம். இன்னும் தமிழ்நாட்டில் இலங்கை அகதிகள் ஒரு இலட்சம் பேர் இருந்துவருவது இரகசியமல்ல. அவர்களின் நலத்திட்டங்களுக்காக தமிழக அரசு சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ரூ. 317 கோடி ஒதுக்கியுள்ளதற்கு முதல்வருக்கு நன்றி தெரிவித்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், உலகத் தமிழர் பேரவையும் கடிதங்களை எழுதியுள்ளமை நினைவுகூரத்தக்கதாகும்.

இலங்கையின் வடக்குப் பகுதிகளில் மலையகத் தமிழர்கள் உள்ளனர். கிழக்குப் பகுதியில் யாழ். தமிழர்கள் உள்ளனர். சிங்களவரைபோலவே இலங்கையின் யாழ். தமிழர்கள் பூர்வ குடிமக்கள். அவர்கள் வந்தேறிகள் அல்லர்.

ஒருகாலத்தில் இலங்கையின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக தமிழ் இருந்தது. இப்போது இல்லை. இலங்கை இராணுவத்தில் தமிழர்கள் தளபதிகளாகவும் இருந்தனர். இப்போது பொலிஸ் உயர் பதவிகளில்கூட இல்லை. அவர்களின் வசம் தடிகள் மட்டும் தரப்பட்டுள்ளன. துப்பாக்கிகள் இல்லை. உலகத்தின் பல நாடுகளில், குறிப்பாக, இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, ஜேர்மனி ஆகிய நாடுகளில் இலங்கைத் தமிழர்கள் சுமார் 20 ஆண்டுகளாக அகதிகளாகவே வாழ்ந்து வருகின்றனர்.

சிங்களப் பேரினவாதத்தின் கொடுமையால் தமிழர்கள் சொல்லொணாத் துயரத்தில் நீடிக்கின்றனர். அதன் காரணமாக தனிநாடு கேட்டுப் போராடுவதற்கான நிர்ப்பந்தத்திற்கு அவர்கள் தள்ளப்பட்டனர். தமிழ் ஈழம் என்ற பிரிவினைக் கோரிக்கையை வைத்து 1983 முதல் 2009 வரை ஏறக்குறைய 25 ஆண்டுகளாகப் போரிட்டனர்.

தமிழர்களை வெல்ல முடியாத இலங்கை சிங்கள அரசு, பிற நாடுகளின் இரகசிய இராணுவ உதவிகளால் தமிழர்களை அடக்கி ஒடுக்கிவிட்டது மட்டுமல்ல, ஒரு இலட்சத்து 40 ஆயிரம் தமிழர்களை அமைதிப் பிரதேசத்திற்கு ஏமாற்றி வரவழைத்துக் கொன்று குவித்துவிட்டது. வெள்ளைநிற வேன்களில் கொண்டுசெல்லப்பட்ட 20 ஆயிரம் தமிழ் இளைஞர்கள் என்ன ஆனார்கள் என்ற ஐ.நாவின் மனித உரிமைக் கழகத்தின் கேள்விக்குப் பதில் இல்லை.

இலங்கைத் தமிழர்களின் எதிர்காலம் மேலும் இருண்டுபோய்க் கிடக்கிறது. 2 இலட்சத்து 50 ஆயிரம் தமிழக மீனவர்களின் வாழ்வாதாரமும் கேள்விக் குறியாகிவிட்டது.

இந்தியாவின் ஓர் அங்கமாகத்தான் தமிழகம் உள்ளது. 1991இல் தமிழகத்தின் பாக். ஜலசந்தியின் 9 தீவுகளில் ஒன்றான கச்சதீவு 1974இல் இலங்கைக்கு அரசியல் பேரமாகத் தரப்பட்டது. அதனால் தமிழக மீனவர்கள் அந்தத் தீவின் மீதிருந்த சகல உரிமைகளையும் இழந்துவிட்டனர். கச்சதீவில்தான் இராமேஸ்வர மீனவர்கள் தங்களின் மீன்பிடி வலைகளை உலர்த்துவார்கள். இப்போது உள்ளே நுழைய முடியாது. அவ்வளவு ஏன்? கச்சதீவில் ஆண்டுதோறும் நடக்கும் அந்தோனியார் தேவாலயத் திருவிழாவுக்குக்கூட தமிழ்நாட்டு கிறிஸ்தவ மீனவர்களுக்கு அனுமதி தர இலங்கை தாமதிக்கிறது.

கச்சதீவு ஒப்பந்தம் செல்லாதென மத்திய அரசு 2013இல் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளது. இதேபோல சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழக அரசும் வழக்குத் தாக்கல் செய்துள்ளது. 8.7.2014இல் பிரதமர் மோடிக்கு அன்றைய தமிழக முதல்வர் ஜெயலலிதா இதுபற்றி ஒரு கடிதமும் எழுதியுள்ளார்.

1991இல் தமிழக சட்டப்பேரவையில் கச்சதீவை மீட்க வேண்டுமென்று தீர்மானமே நிறைவேற்றப்பட்டது.

இந்த நிலையிலும், இலங்கைக்கு ரூ. 6,700 கோடி கடனுதவி அளிப்பதாக இந்தியா அறிவித்துள்ளதை இலங்கை அரசு நன்றியோடு நினைவுகூரத் தவறிவிட்டது.

இலங்கையில் 13ஆவது சட்டத் திருத்தத்தை அமுல்படுத்த அழுத்தம் தர வேண்டுமென யாழ்ப்பாண எம்.பிக்கள் இந்தியப் பிரதமருக்குக் கோரிக்கையும் விடுத்துள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன், நீதியரசர் விக்னேஸ்வரன் ஆகியோர் இலங்கையின் இந்தியத் தூதரகத்தின் மூலமாக பிரதமருக்கு அக்கடிதத்தை அனுப்பியுள்ளனர்.

கச்சதீவு இராமநாதபுரம் சேதுபதி மன்னர்களுக்குச் சொந்தமான தீவு. 1956 வரை நில அளவை ஆவணங்களில் கச்சதீவு தமிழகத்தின் ஒரு பகுதி என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசும், மத்திய அரசும் கச்சதீவை மீட்கும் நடவடிக்கைகளில் ஈடுபட எந்தத் தடையும் இல்லை. அதற்கு உதாரணமாக உலக அரசியல் அரங்கில் தற்போது நமக்கு உதவிக்கரமாக உருவாகியுள்ள சம்பவங்களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

சோவியத் யூனியன் 1917இல் உருவானபோது, அதில் 30 ஐரோப்பிய நாடுகள் இணைந்தன. பின்னர் 1991இல் சோவியத் யூனியனிலிருந்து எல்லா நாடுகளும் பிரிந்துவிட்டன. அவ்வாறு இணைந்து பின்னர் பிரிந்த நாடுதான் உக்ரைன்.

அதில் கிழக்குப் பகுதியிலுள்ள கிரிமியா என்ற தீவில் வாழ்கிற மக்கள், இனத்தால் ரஷ்யர்கள். அத்தீவு உக்ரைன் ஆட்சியில் இருந்தாலும், அங்கு 10 சத மக்களே உக்ரைனியர்கள். 90 சதவீத மக்கள் ரஷ்யர்கள்.

அம்மக்கள் ரஷ்யாவோடு இணைந்துகொள்ள விரும்புகிறார்களா அல்லது உக்ரைனுடன் இருக்க விரும்புகிறார்களா என ரஷ்யா அங்கு ஒரு வாக்கெடுப்பு நடத்தியது. ரஷ்யாவுடன் இணைவதற்கு 97 சதவீதம் பேர் ஆதரவு தெரிவித்தனர். 2014இல் ரஷ்யா கிரிமியாவை இணைத்துக்கொண்டது. அதன்பின்னர் ரஷ்ய முதலீடுகள் கிரிமியாவுக்குக் கிடைத்து அது வளமாகி வருகிறது. கிரிமியாவை ரஷ்யா தனது இன உணர்வோடுதான் இணைத்துக் கொண்டுவிட்டது.

கிரிமியா இல்லாத உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுக்கலாம் என்ற பதற்றம் நீடிக்கிறது. காரணம், ரஷ்யாவுக்கு எதிராக உருவாக்கப்பட்ட நேட்டோ அணியில் உக்ரைன் சேரலாம் என்று ரஷ்யா சந்தேகப்படுகிறது.

அச்சுறுத்தி அதைத் தடுக்கவே இந்தப் போர் என்கிறது ரஷ்யா.

இந்தச் சம்பவத்தை முன்னுதாரணமாகக் கொண்டு, இலங்கையின் தமிழ் ஈழத்தை உருவாக்க அங்கு ஒரு பொது வாக்கெடுப்பு நடத்த இந்தியா வலியுறுத்த வேண்டும். அதற்கு முன்பாக கச்சதீவை அதிரடியாகவே மீட்கவும் அறிவிப்பு செய்யவேண்டும். உக்ரைன் கிரிமியாவை இனி மீட்டெடுக்க முடியாது. காரணம், அங்குள்ளவர்கள் இனவழியில் ரஷ்யர்கள். 31.1.2021இல் நடந்த ஐ.நா. பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் உக்ரைன் சம்பந்தமான பிரச்சினையில் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாத மூன்று நாடுகளில் இந்தியாவும் ஒன்று. உக்ரைனுக்கு ஆதரவாக வாக்களிக்க கலந்துகொண்ட 10 நாடுகளில் இந்தியா இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். கிரிமியா ரஷ்டயர்களைபோல் இலங்கை தமிழ் மக்கள் உள்ளனர்.

அவர்களின் தனிநாட்டுக் கோரிக்கைக்கு முன்பாக, இலங்கையின் சம உரிமையுள்ளவர்களாக வாழ 13ஆவது சட்டத்திருத்தத்தை செய்ய இந்தியா வலியுறுத்த வேண்டும். அதற்கு இந்திய அரசு தமது பலத்தையும் காட்டலாம். இது சம்பந்தமாக சென்ற ஆண்டு மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தித் திரும்பியுள்ளார். எவ்வகையிலும் இது ஆக்கிரமிப்பு நோக்கம் கொண்டதல்ல. ஒடுக்கப்பட்ட ஈழத் தமிழர்களுக்கான சுதந்திரக் கோரிக்கைக்கான ஆதரவு மட்டுமே ஆகும்.

1971இல் பங்களாதேஷ் விடுதலைக்கு இந்திராகாந்தி உதவியதுபோல், தமிழ் ஈழ விடுதலைக்கு உதவுவது பற்றி பாரதப் பிரதமர் மோடி சிந்திக்கவேண்டிய நல்ல தருணம் இது. இதை நழுவவிடக் கூடாது.

## நக்கல் நமசிவாயம்

**நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைக்குக் காரணம் ரஷ்ய - உக்ரைன் சண்டைதானென்டு இனி சொன்னாலும் சொல்லுவாங்கள்..!**



## இன்றைய நாளில்...

- 1836 – சாமுவேல் கோல்ட் சுழல் துப்பாக்கிக்கான அமெரிக்கக் காப்புரிமத்தைப் பெற்றார்.
- 1932 – ஹிட்லர் ஜேர்மனியின் குடியுரிமையைப் பெற்றார். இதன் மூலம் 1932 அரச தலைவர் தேர்தலில் போட்டியிடத் தகுதி பெற்றார்.
- 1986 – பிலிப்பைன்ஸ் தலைவர் பேர்டினன்ட் மார்க்கோஸ் மக்கள் புரட்சியை அடுத்து தமது 20 ஆண்டுகள் ஆட்சியைக் கைவிட்டு நாட்டை விட்டு வெளியேறினார். கொரசோன் அக்கீனோ அரச தலைவரானார்.
- 2007 – ஈசாவின் ரோசெட்டா விண்கலம் முதன்முதலாக செவ்வாய்க் கிரகத்தை 150 மைல் உயரத்தில் மிக அருகே சுற்றிவந்து அதன் சுழல்வீச்சிற்கு அப்பால் எறியப்பட்டது.

# தாவர, விலங்கினப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டமூலத்தை இரண்டாவது வாசிப்புக்காக முன்வைக்க அனுமதி

## அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் இணக்கம்

- யால தேசிய பூங்காவை பகல் நேரத்தில் 2 மணித்தியாலங்கள் மூடுவதற்குப் பதிலாக ஒரு மணித்தியாலமாகக் குறைக்கத் தீர்மானம்
- சிறுத்தைகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் விசேட நிலையத்தைப் பொலன்னறுவையில் அமைப்பதற்கு நடவடிக்கை
- பொதுமக்களின் பாரம்பரிய காணிகளை கையகப்படுத்துவதிலிருந்து விலகிக்கொள்ளுமாறு அமைச்சர் ஆலோசனை







தாவர, விலங்கினப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டமூலத்தை இரண்டாவது வாசிப்புக்காக முன்வைக்க வனஜீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் கடந்த செவ்வாய்க்கிழமை (22) இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

வனஜீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சர் சீ.பீ.ரத்னாயக்க மற்றும் இராஜாங்க அமைச்சர் விமலவீர திசாநாயக்க ஆகியோரின் தலைமையில் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டம் நாடாளுமன்றத்தில் கூடியது.

இந்தச் சட்டமூலத்தின் ஊடாக ஆபத்துக்கு உட்படக்கூடிய காட்டு விலங்குகளின் சர்வதேச வியாபாரத்தின் மீதான சமவாயத்துக்கு (CITES) பயன்கொடுப்பதற்கு ஒழுங்குவிதிகளைத் தயாரிப்பதற்கு அமைச்சருக்கு அதிகாரம் வழங்கப்படும். ஜீ.எஸ்.பி. சலுகையைப் பெற்றுக்கொள்ளும்போது கவனத்தில் கொள்ளப்படும் இந்தத் திருத்தம் 15 வருட காலமாகக் கலந்துரையாடப்பட்டு வருவதாகவும், இறுதியாக இதனை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கான வாய்ப்புக் கிடைத்திருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிப்பதற்கு சுற்றாடலுக்கு நட்பான சுற்றுலாத்துறையை (Eco tourism) அபிவிருத்தி செய்வது, சுற்றுலாப் பயணிகளை அதிகமாகக் கவரும் இலங்கை சிறுத்தைகளைப் பாதுகாப்பதற்கான வேலைத்திட்டத்தை வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், சுற்றுலாத்துறை அமைச்சுடன் இணைந்து முன்னெடுக்க வேண்டும் என இக்கூட்டத்தில் கலந்துகொண்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சுட்டிக்காட்டினார். இதன்படி பொலன்னறுவை வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பயிற்சி நிலையத்தில் சிறுத்தைகள் ஆய்வுநிலையமொன்றை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் சீ.பீ.ரத்னாயக்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

பல வருடங்களாக சேவையாற்றி இதுவரை நியமிக்கப்படாத தொண்டர் பணியாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டுள்ளார். இதுகுறித்து உடனடியாக ஆய்வுசெய்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

யால தேசிய பூங்கா பகலில் இரண்டு மணித்தியாலங்கள் மூடப்படுவதால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு அசௌகரியம் ஏற்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர். இது தொடர்பில் கவனம் செலுத்திய இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்க, தேசிய பூங்காவை பகல்வேளையில் இரண்டு மணித்தியாலங்கள் மூடுவதை ஒரு மணித்தியாலமாகக் குறைக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். வனவிலங்குகளின் பாதுகாப்பை உறுதிசெய்ய அதிகபட்ச நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

அத்துடன், காணிகளை சுவீகரிக்கும்போது மக்கள் வாழும் பாரம்பரிய காணிகளை வன பாதுகாப்புத் திணைக்களத்துக்குப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டாம் என்றும் அமைச்சர் சீ.பீ.ரத்னாயக்க அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

அதேநேரம், யானை - மனித மோதல்கள், யானைகளுக்கு வேலைகளை அமைத்தல், சரணாலயங்களில் காணப்படும் பிரச்சினைகள் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

இந்த நிகழ்வில் குழுவின் உறுப்பினர்களான கபில அத்துகோரள, சாமர சம்பத் தசநாயக்க, குமாரசிறி ரத்நாயக்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

## 24.02.2022 நாணய மாற்று வீதம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 030 5272 | 036 5 37 |
| கனேடியன் டொலர் | 043 515 | 05 365 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 20 0570 | 21 3225 |
| யூரோ | 112 7543 | 122 3 53 |
| ஜப்பான் யென் | 0 6043 | 0 6684 |
| சிங்கப்பூர் டொலர் | 035 8 33 | 040 5355 |
| ஸ்ரேலிங் பவுன் | 156 2663 | 164 7224 |
| சுவிஸ் பிரான்ங் | 103 63 8 | 111 2188 |
| ஐ.அ.டொலர் | 087 4 7 | 1 1 8881 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 422 5020 |
| குவைட் | குவைட் தினார் | 554 1 24 |
| ஓமான் | ஓமான் றியால் | 411 4556 |
| கட்டார் | கட்டார் றியால் | 43 8388 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 42 5112 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 43 6638 |

# ஊடகத்துறைக்கு அளப்பரிய பங்காற்றியவர் கமல் லியனாரச்சி

## முஸ்லிம் மீடியா போரம் அனுதாபம்

SLMMF



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

நாட்டில் ஊடக சுதந்திரத்தைக் கட்டியெழுப்புவதற்காக பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு மூலம் குறிப்பிடத்தக்க பங்களிப்பினைச் செய்த சிரேஷ்ட ஊடகவியலாளர் கமல் லியனாரச்சியின் மறைவு ஊடகத்துறைக்கு ஒரு பேரிழப்பாகும்.

கமல் லியனாரச்சியின் மறைவு குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் போரம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்செய்தியில் மேலும் கூறியிருப்பதாவது,

எத்த, லக்பிம பத்திரிகைகளின் ஊடகவியலாளராகப் பணிபுரிந்து இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு உருவாக்கப்பட்டபின் அதன் சிங்கள மொழிமூலம் முறைப்பாட்டுப் பொறுப்பதிகாரியாகப் பதவியேற்று சிறிதுகாலம் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவில் பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் கடமையாற்றினார்.

அரச கட்டுப்பாட்டில் இருக்கும் பத்திரிகைப் பேரவைக்குப் பதிலாக மேற்கு நாடுகளில் இருப்பதுபோன்று இலங்கையில் பத்திரிகைத் தொழில் துறையினரின் கண்காணிப்பில் இயங்கும் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் வளர்ச்சியில் கமல் லியனாரச்சியின் பங்களிப்பு வரலாற்றில் எழுதப்படும் ஒன்றாகும்.

ஊடகவியலாளர்களது அறிவினை மேம்படுத்துவதற்காக நாட்டின் நாலாபுறங்களிலுக்கும் விஜயம் செய்து நூற்றுக்கணக்கான விரிவுரைகளை நடத்தி இவர் பங்களிப்புச் செய்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்துடன் நெருங்கிச் செயற்பட்ட இவர், பல வருடங்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் உத்தியோகத்தர் தெரிவுத் தேர்தல்களை நடத்தும் பிரதம தேர்தல் உத்தியோகத்தராகவும் பணிபுரிந்து எமது பணிகளுக்கு உதவியதை நன்றியுடன் நினைவுகூருகின்றோம்.

சிங்கள, தமிழ், முஸ்லிம் இடையே புரிந்துணர்வை ஏற்படுத்தும் பாலமாக செயற்பட்ட கமல் எல்லோரிடமும் இனிமையாக பழகும் குணநலமிக்கவராகவும் காணப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இரத்மலானை இயந்திரப் பொறியியல் தொழிற்சாலை ஊழியர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க ஆணைக்குழுவொன்றை நியமிக்கவும்

## போக்குவரத்து அமைச்சருக்கு ஜனாதிபதி பணிப்புரை

இரத்மலானை இயந்திரப் பொறியியல் தொழிற்சாலை ஊழியர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான ஆணைக்குழுவொன்றை நியமிக்குமாறு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ போக்குவரத்து அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சிக்கு பணிப்புரை விடுத்தார்.

இலங்கைப் புகையிரதத் திணைக்களத்துக்குச் சொந்தமான இரத்மலானை இயந்திரப் பொறியியல் தொழிற்சாலைக்கு நேற்று (24) முற்பகல் கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டபோதே, ஜனாதிபதி இந்தத் தீர்மானத்தை எடுத்தார்.

ஆட்சேர்ப்பு மற்றும் வள முகாமைத்துவம் உட்பட தற்போதுள்ள அனைத்துப் பிரச்சினைகளையும் இரண்டு மாதங்களுக்குள் தீர்க்குமாறும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்தார்.





# சிரேஷ்ட ஊடகவியலாளர் பந்துல பத்மகுமார காலமானார்

சிரேஷ்ட ஊடகவியலாளர் பந்துல பத்மகுமார சில காலமாக சுகவீனமுற்றிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி தனது 71ஆவது வயதில் நேற்று காலமானார்.



சிறுநீரகக் கோளாறு காரணமாக கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, சிரேஷ்ட ஊடகவியலாளர் சுனில் மாதவ பிரேமதிலக்க நேற்றுமுன்தினம் காலமானமை குறிப்பிடத்தக்கது.

# பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக யாழில் நேற்றும் கையெழுத்துப் போராட்டம்

(யாழ். செய்தியாளர்)

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குமாறு கோரி யாழ்ப்பாணத்தில் நேற்றும் (24) கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பஸ் நிலையத்தில் நேற்றுக் காலை முதல் இலங்கை தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் ஏற்பாட்டில் இந்த கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான எஸ்.சுகிர்தன், பருத்தித்துறை நகரசபை தலைவர் யோ.இருதயராஜா, பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் அ.அரியகுமார், சட்டத்தரணி திருஞானசம்பந்தர் சந்திரசேகரன், உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.










காணி அபகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து வடக்கு, கிழக்கு மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பிலுள்ள ஜனாதிபதி செயலக வளாகத்தில் நேற்று (24) ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

# பெருந்தோட்டப் பகுதிகளின் அபிவிருத்திகளுக்காக சமூக அமைப்புகளை பதிவுசெய்ய நடவடிக்கை

## பதுளை மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் இணக்கம்

(பதுளை நிருபர்)

பெருந்தோட்டப் பகுதிகளில் சமூக அமைப்புகளை பதிவுசெய்வதற்கு பதுளை மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் ஏகமனதாக இணக்கம் காணப்பட்டுள்ளது.

பதுளை மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் கூட்டம் ஒருங்கிணைப்பு சபை இணைத்தலைவர்களான ஊவா ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில், பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்சன தெனிப்பிட்டிய ஆகியோர் தலைமையில் இடம்பெற்றபோதே மேற்படி இணக்கம் காணப்பட்டுள்ளது.

பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்தகுமார் விடுத்த கோரிக்கையொன்றிற்கமையவே, பெருந்தோட்டப் பகுதிகளில் சமூக அமைப்புகளை பதிவுசெய்ய இணக்கம் காணப்பட்டுள்ளது.

பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமார் ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பெருந்தோட்டப் பகுதிகளில் அரசாலும், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்மாலும் நிதி ஒதுக்கப்பட்டு, சமூக மேம்பாட்டு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதற்கமைய அவ்வேலைத்திட்டங்களை பதிவுசெய்யப்பட்ட சங்கமொன்றினாலேயே முன்னெடுக்க முடியும். ஆனால், பெருந்தோட்டப் பகுதிகளில் பதிவுசெய்யப்பட்ட சமூக அமைப்புகள் இல்லாதுள்ளன. ஆகையினால், கிராமங்களை நாடிச்சென்று, அங்குள்ள பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் ஊடாகத்தான் சமூக மேம்பாட்டு வேலைத்திட்டங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

அவ்வகையில் வேலைத்திட்டங்களை மேற்கொள்ளும் சமூக அமைப்புகளுக்கு உதாரணமாக பத்து இலட்சம் ரூபா நிதி வேலைத்திட்டத்திற்கு ஐந்து வீதம் என்றடிப்படையில் 50 ஆயிரம் ரூபா வரி செலுத்தவேண்டியுள்ளது.

பெருந்தோட்டங்களில் சமூக அமைப்புகள் இருக்கும் பட்சத்தில், அவ்வமைப்புகளிடம் வேலைத்திட்டங்களை ஒப்படைத்தால், அமைப்பிற்கு செலுத்தும் மேற்படி வரி பெருந்தோட்ட அமைப்புகளை சென்றடையும்போது, அவ்வரி மூலமும் அதே தோட்டத்திற்கு மேலதிக வேலைகளை மேற்கொள்ள முடியும். இதனைக் கருத்திற்கொண்டுதான், பெருந்தோட்டப் பகுதிகளின் சமூக அமைப்புகளை பதிவு செய்யுமாறு கோருகின்றேன்.

கிராமங்களைப் பொறுத்தவரையில் சமூக அமைப்புகள், விவசாய அமைப்புகள் என்ற வகையில் பல்வேறு அமைப்புகள் அரசினால் பதிவுசெய்யபட்டுள்ளன. அத்துடன், 45 குடும்பங்களை மையப்படுத்திய வகையில் சமூக அமைப்புகளை பதிவுசெய்ய முடியுமென்று பிரதேச செயலகங்களுக்கு, அரசினால் அறிவுறுத்தப்பட்டுமிருக்கின்றது.

அவ்வறிவுறுத்தல்களுக்கமைவாக பெருந்தோட்டப் பகுதிகளில் பல்வேறு அமைப்புகளை பதிவுசெய்ய முடியும். ஆனால், தோட்டப் பகுதிகளில் அமைப்புகள் பதிவு செய்யப்படுவதற்கு அரச உத்தியோகத்தர்களினால் இழுத்தடிப்புகள் செய்யப்படுகின்றன. எமது பன்முகப்படுத்தப்பட்ட நிதிகளில் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்கள் பெருந்தோட்டப் பகுதி அமைப்புகளிடம் ஒப்படைக்கும்போது, எதிர்பார்த்ததை விட கூடுதலான வேலைகளை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும். வேலைத்திட்டங்களும் உறுதியாக அமைக்க முடியும்.

கிராமிய அமைப்புகளிடம் வேலைத்திட்டங்கள் ஒப்படைக்கும்போது, பெருந்தோட்ட மக்களினால் வேலைத்தரங் குறித்து எதுவும் பேசமுடியாத நிலை ஏற்படும். தரக்குறைவாக வேலைத்திட்டங்களை நிறைவு செய்துவிட்டு, ஒப்பந்த பணத்தை முழுமையாகப் பெற்றுக்கொள்வதே, அவர்களின் நோக்கமாகவும் இருக்கும். ஆகையினால், பெருந்தோட்டங்களில் இருந்துவரும் சமூக அமைப்பு பதிவு விண்ணப்பங்களை ஏற்று, அவற்றினை பதிவு செய்யும்படி கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

இது விடயம் குறித்தும் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருமே கூடிய கவனம் செலுத்தி அதனை ஏகமானதாகவே ஏற்றுக்கொண்டனர்.

# டீசல் இன்மையால் நுவரெலியா மரக்கறி போக்குவரத்து பாதிப்பு

எரிபொருள் நெருக்கடி காரணமாக நுவரெலியாவில் மரக்கறி போக்குவரத்து தடைப்பட்டுள்ளதாக அகில இலங்கை கூட்டு விசேட பொருளாதார மத்திய நிலையங்கள் சங்கத்தின் தலைவர் அருண சாந்த ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

அருண சாந்த ஹெட்டியாராச்சி நேற்று (24) நுவரெலியாவில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

“வறண்ட காலநிலையால் விவசாயிகள் கடும் சிரமத்துக்குள்ளாகியுள்ளனர். எனவே, அவர்கள் தங்கள் தோட்டங்களுக்கு நீர்ப்பாசனம் செய்ய வேண்டியுள்ளது.

தண்ணீரை உறிஞ்சுவதற்கு டீசல் மோட்டர்கள் பயன்படுத்தப்படுவதால், தற்போதைய சூழ்நிலையில் எரிபொருள் நிரப்பும் நிலையங்களிலிருந்து டீசல் எடுப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

பொருளாதார நிலையங்களுக்கு காய்கறிகள் வந்தாலும், லொறிகளில் டீசல் தீர்ந்துவிட்டதால், விற்பனையாளர்கள் அவற்றை எடுத்துச்செல்வது அரிதாக உள்ளது. வியாபாரம் செய்யும் எமக்கு கொழும்புக்கு செல்ல டீசல் தட்டுப்பாடும் உள்ளது. இதனால், காய்கறிகளுக்கான போக்குவரத்து செலவு அதிகமாகி, காய்கறி எடுக்கவரும் வியாபாரிகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

இப்படியே போனால் காய்கறிகளைக் கொண்டுசெல்ல முடியாமல் கடும் நெருக்கடி ஏற்படும். எனவே, காய்கறிகள் போக்குவரத்துக்கும் டீசல் வழங்கவேண்டும் என அரசை கேட்டுக்கொள்கிறோம்” - என்றார்.

நுவரெலியாவுக்கு இந்த நாட்களில் அதிகளவான உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதால் நுவரெலியாவில் தமது வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்ப முடியாத நிலை காணப்படுவதாக நுவரெலியா சுற்றுலா ஹோட்டல் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் மஹிந்த தொடம்பேகமகே தெரிவித்தார்.

நுவரெலியா பிரதேசத்துக்கு எரிபொருள் விநியோகத்துக்கு முன்னுரிமை வழங்கினால் அது சுற்றுலாத்துறைக்கு இடையூறாக இருக்காது என தொடம்பேகமகே மேலும் தெரிவித்தார்.

# தரக்கட்டுப்பாட்டு ஆய்வுகூடம் பதுளையில் திறந்துவைப்பு










நிறுவப்பட்டுள்ள தரக் கட்டுப்பாட்டு ஆய்வுகூடம், ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில் தலைமையில் நேற்று முன்தினம் (23) திறந்துவைக்கப்பட்டது.

மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் வழிகாட்டலின்கீழ், ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன், ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின்கீழ் 20 மில்லியன் ரூபா செலவில் நிறுவப்பட்டுள்ள குறித்த தரக் கட்டுப்பாட்டு ஆய்வுகூடம், நாடளாவிய ரீதியில் காணப்படும் மாகாண உள்ளூராட்சி திணைக்கள அலுவலகங்களில் நிறுவப்பட்ட முதலாவது தரக் கட்டுப்பாட்டு ஆய்வுகூடம் என்பது விசேட அம்சமாகும்.

மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் கட்டுமானம் மற்றும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் தரங்களை அறிந்துகொள்வதற்காக அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் இந்த ஆய்வுகூடத்தின் ஊடாக சேவைகளைப் பெற்றுக்கொள்ளமுடியும். இதன்மூலம் மாகாணத்தின் முன்னெடுக்கப்படும் கட்டுமானம் மற்றும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் தரத்தை உறுதிப்படுத்துவது பிரதான நோக்கமாகும்.








சாரணர் ஸ்தாபகர் பேடன் பவுலின் வருட தினத்தை முன்னிட்டு சப்ரகமுவ மாகாணத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சாரணர் தின நிகழ்வு நேற்று முன்தினம் (23) சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் சப்ரகமுவ மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. (இரத்தினபுரி நிருபர)

# சப்ரகமுவ – ஊவா - மத்திய மாகாணங்களை இணைக்கும் வீதிப்புனரமைப்பு இடைநிறுத்தம்

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

சப்ரகமுவ, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களை இணைக்கும் காபட் வீதி அமைக்கும் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அப்பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

ஒரு வருட காலத்துக்குக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட இவ்வீதிக்குக் காபட் செப்பனிடும் பணிகள் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளதால் இவ்வேலைகள் தாமதமடைவதோடு இவ்வீதி உடைக்கப்பட்டு காணப்படுவதால் 12 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இவ்வீதியில் பயணிக்க முடியாதுள்ளனர். அத்தோடு, அன்றாடக் கடமைகளுக்காக பயணிக்க முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

மேலும், கைவிடப்பட்ட இப்பகுதியில் தூசி பரவுவதால் இப்பிரதேச மக்கள் சுகாதார பாதிப்புகளுக்கும் முகங்கொடுத்து வருவதாக குற்றஞ்சாட்டுகின்றனர்.

கொழும்பு - பதுளை பிரதான வீதியின் பெலிஹுல்ஓயா உல்லாச வலய பிரதேசத்தில் இருந்து பலாங்கொடை - ஹட்டன் பிரதான வீதியின் பொராங்கமுவ பகுதியை இவ்வீதியின் இறுதிப்பகுதியை இணைக்கிறது. 113 கோடி ரூபா செலவில் 5 கிலோமீற்றர் தூரத்துக்கு இவ்வீதி அமைக்கப்படுவதால் ஊவா, சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களின் பிரதான வீதிகளை இணைப்பதால் இவ்வீதி இப்பிரதேசங்களுக்கு வரும் உல்லாசப் பயணிகளின் போக்குவரத்தை இலகுபடுத்துகிறது.

இதனால் இவ்வீதிப் பணிகளை துரிதப்படுத்தி தருமாறு இப்பிரதேச மக்கள் பொறுப்பு வாய்ந்தவர்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# நுவரெலியாவில் தொடரும் எரிபொருள் தட்டுப்பாடு! வாகனங்கள் நீண்ட வரிசையில் காத்திருப்பு





(செ.திவாகரன்)

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், எரிபொருளுக்காக நீண்ட வரிசையில் வாகன சாரதிகளும், மக்களும் காத்திருக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது

ஒரேநேரத்தில் ஏராளமான வாகனங்கள் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் திரண்டு, நுவரெலியா - பதுளை பிரதான பாதையில் நீண்டவரிசையில் வாகனங்கள் அணிவகுத்து நின்றமையால் காலை 7 மணிமுதல் 10 மணிவரை போக்குவரத்து முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது.


எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகவும் போக்குவரத்து நெரிசல் காரணமாகவும் நுவரெலியா பிரதான நகருக்கு தொழிலுக்குச் செல்லும் பொதுமக்கள் சுமார் 3 கிலோமீற்றர் நடந்து செல்லவேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளதுடன், உரிய நேரத்திற்கு தொழிலுக்கு செல்ல முடியாமல் பாரிய சிரமத்திற்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

நுவரெலியா பிரதான நகரில் இரண்டு எரிபொருள் நிலையம் இருக்கின்ற போதிலும் தொடர்ந்து டீசல் தட்டுப்பாடு நிலவுகின்றமையால் அதிகமான வாகன உரிமையாளர்கள் வேறு பகுதிகளுக்குச் சென்று டீசலினை பெற்றுக்கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.









ஹாலி-எல சமூக விடுதியில் இடம்பெற்ற கருணை இல்லமென்ற புலம்பெயர் அமைப்பின் ஓராண்டு பூர்த்தி விழாவில் ஓராண்டு பூர்த்தி கேக் வெட்டி, சிறுவர்களுக்கு கற்கை உபகரணங்களும் வழங்கப்பட்டன. (பதுளை நிருபர்)










பதுளை மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவான பெண் உறுப்பினர்களுக்காக பதுளை ஹெரி டேஜ் உல்லாச விடுதியில் செயலமர்வு முன்னெடுக்கப்பட்டது. (பதுளை நிருபர்)

தமிழன்
www.thamilan.lk

# வணிக உலகம்
## Business world

# பசுமைக்கு அப்பால்: CL Synergy இன் அனுசரணையில் ரோயல் கொழும்பு கோல்ஃப் கிளப்பின் பெப்ரவரி மாத பதக்கப் போட்டிகள்

சரக்குகளை அனுப்பும் செயற்பாடுகளைக் கையாளும் தீர்வுகளை வழங்குவதில் இலங்கையின் முன்னணி நிறுவனமான CL Synergy ஆனது, ரோயல் கொழும்பு கோல்ஃப் கிளப்பின் “பெப்ரவரி மாத பதக்க சுற்றுப் போட்டிக்கு” (February Monthly Medal Tournament) உத்தியோகபூர்வ அனுசரணை வழங்குவதாக அறிவித்துள்ளது. ‘பசுமைக்கு அப்பால்’ (Beyond the Green) என்ற கருப்பொருளின்கீழ் இந்த போட்டி நடத்தப்படுவதுடன், இது CL Synergy நிறுவனத்தின் சொந்த மகுட வாசகமான “எல்லைகளுக்கு அப்பால்” (Beyond Boundaries) என்பதுடன் ஒத்திசைவதாக அமைந்துள்ளது. 2022 பெப்ரவரி 25 மற்றும் 26ஆம் திகதிகளில் திட்டமிடப்பட்ட இந்தப் போட்டியானது, ரோயல் கொழும்பு கோல்ஃப் கிளப் திடலில் நடைபெறவுள்ளதுடன், கொழும்பு சமூகத்தின் பிரமுகர்கள் மற்றும் கோல்ஃப் ஆர்வலர்கள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் போட்டியில் சிரேஷ்ட, மாஸ்டர்ஸ் மற்றும் பெண்கள் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் 18 பதக்கங்கள் வழங்கப்படும். மேலும் ஏராளமான விநோதாம்சங்கள் நிரம்பிய கோல்ஃப் நிகழ்வுகள் மற்றும் “Closest to the Pin” மற்றும் “Longest Drive” உள்ளிட்ட செயற்பாடுகளுடன், இதில் வெற்றி பெறுபவர்களுக்கு பதக்கங்கள் மற்றும் மதிப்புமிக்க பரிசுகள் காத்திருக்கின்றன.




இந்த அனுசரணையை அறிவித்த CL Synergy நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான ரொஷான் சில்வா, “ரோயல் கொழும்பு கோல்ஃப் கிளப்புடன் கைகோர்ப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். மேலும், இந்த அனுசரணையானது விளையாட்டில் எங்களின் ஆர்வத்தை மேலும் அதிகரிக்கச்செய்யும் என்று நம்புகிறோம். அதேநேரத்தில் எம்மைப் போலவே கோல்ஃப் விளையாட்டின் மீது ஆர்வம் கொண்டுள்ள பல்வேறு செல்வந்தர்கள் மற்றும் முதலீட்டாளர்களை இது ஈர்க்கும் என எதிர்பார்க்கப்படுகின்ற நிலையில், அத்தகைய பலருடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கான சிறந்த வலையமைப்பு வாய்ப்பையும் வழங்குகிறது. வெகுவிரைவில் கொழும்பு பங்குச்சந்தையில் நிரற்படுத்தப்படுவதற்காக ஆரம்ப பங்கு பொது வழங்கல் நடவடிக்கையை நாம் முன்னெடுக்கவுள்ள நிலையில், இது அனைத்துத் தரப்பினருக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இந்த நிகழ்வின் அனுசரணையாளர் என்ற வகையில், பெரும் முயற்சியை மேற்கொண்டு, விவரங்களில் கவனம் செலுத்தி, திட்டமிடல் மற்றும் காலக்கெடுவைச் உரிய முறையில் நிறைவேற்றுவதன் மூலம் இந்த நிகழ்வை வெற்றியடையச்செய்ய நாங்கள் உறுதிபூண்டுள்ளோம்” என்று குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், “நாங்கள் இங்கே CL Synergy நிறுவனத்தில் கோல்ஃப் விளையாட்டில் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளோம். நான் கூட ஒரு தீவிர ரசிகர் என்பதுடன், மிகவும் ஆர்வமுள்ள ஒரு வீரர். கோல்ஃப் போட்டியைப் பற்றி அதிக விழிப்புணர்வை ஏற்படுத்தவும், உற்சாகத்தை ஏற்படுத்தவும், மாதாந்த பதக்கப் போட்டி நிகழ்வுக்கு முன்னோடியாக உள்ளக பிரிவுகளுக்கு இடையேயான Fun Golf Putting Tournament எனப்படும் விநோத கோல்ஃப் போட்டியையும் நடத்துகிறோம். பசுமைக்கு அப்பாற்பட்டது என்றால் என்ன என்பதை அனைவருக்கும் நேரடியாக அனுபவிக்க இது வாய்ப்பளிக்கும். எனவே, சில அற்புதமான மனிதர்களைச் சந்திக்கவும், சில அற்புதமான கோல்ஃப் சுற்றுகளை விரைவில் விளையாடவும் நாங்கள் ஆவலுடன் உள்ளோம்” என்று குறிப்பிட்டார்.

போட்டியின் ஒரு பகுதியாக, வீரர்கள் மற்றும் அழைக்கப்பட்ட விருந்தினர்களுக்காக ஒரு விசேட ஒன்றுகூடல் நிகழ்வும் திட்டமிடப்பட்டுள்ளது. இது 2022 பெப்ரவரி 26 அன்று ரோயல் கொழும்பு கோல்ஃப் கிளப்பில் நடைபெறும். பெப்ரவரி மாத பதக்கப் போட்டியின் ஒரு பகுதியாக பெண்களுக்கான போட்டியும் நடத்தப்படும். பெண்களுக்கான போட்டிகள் பொதுவாக மாதாந்த பதக்கப் போட்டி வரிசையில் இடம்பெறாததால் இந்த முறை இது ஒரு சிறப்பு சிறப்பம்சமாக இருக்கும். 18 பதக்கங்களையும் வெல்கின்ற ஒவ்வொருவரும் இந்தப் போட்டிக்காக CL Synergyஇன் மதிப்புமிக்க பரிசுகளையும் அன்பளிப்புகளையும் பெறுவார்கள். CL Synergy இன் அனுசரணையின் ஒரு பகுதியாக, பெப்ரவரி மாத பதக்கப் போட்டியையொட்டியதாக பல விநோதாம்ச நிகழ்வுகள் மற்றும் செயற்பாடுகளும் திட்டமிடப்பட்டுள்ளன.

CL Synergy (Private) Limited நிறுவனம் 2004 ஒக்டோபர் 5ஆம் திகதியன்று ஒரு முழு அளவிலான சரக்குகளை அனுப்பும் செயற்பாடுகளைக் கையாளும் நிறுவனமாக கூட்டிணைப்புச் செய்யப்பட்டது. நிறுவனத்தின் நோக்கம் தொழில்முறையான, நம்பகமான மற்றும் உயர்தர சேவைகளை வழங்குவதாகும். வாடிக்கையாளர்களுக்கு தனிப்பயனாக்கப்பட்ட சூழல், நெகிழ்வுத்தன்மை, மிகவும் கட்டுபடியாகும் கட்டணங்கள் மற்றும் டிஜிட்டல் செயலாக்கத்தின் மூலம் திறமையான சேவையை வழங்குவதில் நிறுவனம் பெருமை கொள்கிறது. CL Synergy தனது செயற்பாடுகளை பல்வேறு துணை நிறுவனங்களின் கீழ் பன்முகப்படுத்தியுள்ளது. இதில் கப்பற்தொகுதி முகாமைத்துவம், மென்பொருள் தீர்வுகள் மற்றும் முதலீடுகள் மற்றும் பிற புத்தாக்கமான முயற்சிகளும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

# SLT குழுமத்தின் வருமானம் ரூ.100 பில்லியனைக் கடந்ததுடன், வரிக்குப் பிந்திய இலாபமாக ரூ. 12.2 பில்லியனை பதிவுசெய்துள்ளது

தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநரான ஸ்ரீலங்கா ரெலிகொம் பிஎல்சி (SLT) குழுமம், டிசம்பர் 31, 2021 உடன் நிறைவடைந்த நிதியாண்டில் மொத்த வருமானம் ரூ. 102.3 பில்லியனைப் பதிவுசெய்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், நிறுவனத்தின் மொத்த வருமானம் 12.3% வளர்ச்சியைப் பதிவுசெய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இக்காலப்பகுதியில் SLT குழுமத்தின் வரிக்குப் பிந்திய இலாபம் ரூ. 12.2 பில்லியனாக பதிவாகியிருந்தது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 54.3% வளர்ச்சியாகும்.

குழுமத்தின் இலாபத்தில் அதன் பல்வேறு வியாபாரப் பிரிவுகளின் உயர் பெறுபேறுகள் பங்களிப்பு வழங்கியிருந்தன. மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட காலப்பகுதியில் குழுமத்தின் EBITDA பெறுமதி 16.6% வளர்ச்சியைப் பதிவுசெய்திருந்தது. நிறுவனத்தின் தொழிற்படு இலாபம் 19.0% வளர்ச்சியடைந்திருந்தது. ஃபைபர் இணைப்பை (FTTH) விரிவாக்கம் செய்வது தொடர்பில் SLT இன் முதலீடுகள் மற்றும் 4G/LTE வலையமைப்பில் பெருமளவான விரி வாக்கங்கள் மற்றும் மேம்படுத்தல்கள் போன்றன புரோட்பான்ட் வருமானத்தில் அதிகளவு வளர்ச்சியைப் பதிவுசெய்திருந்தன. மேலும், தரமான கல்வி மற்றும் களிப்பூட்டும் நிகழ்ச்சிகள் போன்றவற்றை வழங்குகின்றமைக்காக PEO TV சந்தையில் வளர்ச்சி பதிவாகியிருந்ததுடன், வருமானத்தில் அதிகரிப்பையும் பதிவுசெய்திருந்தது. SLT-MOBITELஇன் சர்வதேச அலகான Xyntac ஒட்டுமொத்த வியாபாரத்திற்கும் வலிமை சேர்ந்திருந்தது. புதிய SEA-ME-WE 6 கேபிளில் முதலீடு மேற்கொள்வதனுடாக, இலங்கையின் சர்வதேச இணைப்புத் திறனை அடுத்த நிலைக்கு கொண்டுசெல்வதற்கு ஏதுவாக அமைந்திருந்தது. நவீன வசதிகள் படைத்த டேட்டா நிலையத்தினூடாக (data center), SLT-MOBITELஇன் டிஜிட்டல் (Digital) ஆற்றல்கள் மேம்படுத்தப்பட்டிருந்ததுடன், Akaza multi-cloud இனாலும் நிறுவனத்துக்கு தொடர்ந்தும் பெறுமதி சேர்க்கப்பட்டிருந்தது.




Mr. Rohan Fernando
Group Chairman – SLT



Mr. Lalith Seneviratne
GCEO - SLT



Mr Janaka R Abeysinghe
CEO - SLT



Mr. Chandika Vitharena
CEO - Mobitel

SLT குழுமத்தின் தவிசாளர் ரொஹான் பெர்னாண்டோ கருத்துத் தெரிவிக்கையில், “2021ஆம் ஆண்டை மீட்டுப் பார்க்கையில், நாம் எதிர்பார்த்ததை விட உயர்ந்த பெறுமதிகளைப் பதிவு செய்துள்ளோம் என்பதை பெருமையுடன் அறியத்தருகின்றேன். நிதியியல் பிரிவின் சகல அம்சங்களிலும் இதுவரை பதிவு செய்திருந்த உயர்ந்த பெறுமதியை நாம் எய்தியிருந்ததுடன், கூட்டாண்மை ஆளுகையிலும் அனைத்துக்கும் மேலாக தேசிய பொறுப்பிலும் சிறந்த பெறுபேறுகளைப் பதிவுசெய்திருந்தோம். பூஜ்ஜிய மோசடி, கழிவுக் கட்டுப்பாடு, உயர் வினைத்திறன் மற்றும் உள்ளடக்கமான நிர்வாகம் போன்றவற்றில் நாம் கவனம் செலுத்தியிருந்ததன் காரணமாக 2021ஆம் ஆண்டில் சகல தடைகளையும் எம்மால் தகர்த்து முன்னேற முடிந்தது. எதிர்காலத்தில் போட்டியை எதிர்கொள்வது மற்றும் SLT குழுமத்துக்கு வாடிக்கையாளர்களை இணைப்பது போன்றவற்றில் நாம் கவனம் செலுத்துவோம். தொலைத்தொடர்பு என்பதிலிருந்து தொழில்நுட்பம் எனும் நிலைக்கு எமது வியாபாரத்தை மாற்றியமைப்பதில் நாம் கவனம் செலுத்துவோம். அதனூடாக எமது வியாபாரத்தில் நேரடியாக தொடர்பைக்கொண்டுள்ள பல்வேறு தொழில்நுட்ப அம்சங்களை உள்வாங்குவோம். உலகில் மிகவும் சக்திவாய்ந்த நிறுவனங்களாக தொழில்நுட்ப நிறுவனங்கள் காணப்படுகின்றன. உலகின் பொருளாதாரத்தை வழிநடத்துவதுடன், மனிதர்களுக்கு தேவைப்படும் சகல அத்தியாவசிய சேவைகளைப் பெற்றுக்கொடுப்பதிலும் பங்களிப்பு வழங்குகின்றன. SLT-MOBITELஐச் சேர்ந்த நாம் தொழில்நுட்பத்தை மையப்படுத்தி இயங்குவதுடன், இலங்கையில் தொழில்நுட்பத்தை வழிநடத்திச் செல்லக்கூடிய சிறந்த நிலையில் காணப்படுகின்றோம்” என்றார்.

2021 நான்காம் காலாண்டில் குழுமத்தின் வருமானம் முன்னைய நிதியாண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 7.5% இனால் அதிகரித்து ரூ. 25.7 பில்லியனாக பதிவாகியிருந்தது. EBITDA மற்றும் தொழிற்படு இலாபம் (Operating Profit) என்பன முறையே 21.3% மற்றும் 34.8%இனால் அதிகரித்திருந்தன. காலாண்டில் குழுமத்தின் வரிக்குப் பிந்திய இலாபம் (PAT) ரூ. 3.0 பில்லியனாக அதிகரித்திருந்தது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 162.9% வளர்ச்சியாகும்.

SLT குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி லலித் செனெவிரட்ன கருத்துத் தெரிவிக்கையில், “கடந்த ஆண்டில் நாம் முழுமையாக முதலீடுகளை மேற்கொண்டிருந்த காலமாக அமைந்திருந்ததுடன், கண்டறிதல்கள் மற்றும் மீண்டெழுதலில் கவனம் செலுத்தப்பட்டது. சகல பிரிவுகளிலும் நாம் பதிவு செய்துள்ள வளர்ச்சி இதற்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. SLT-MOBITEL வர்த்தக நாம ஒன்றிணைப்பு என்பது குழுமத்தை முன்நோக்கி நகர்வதற்கு ஏதுவாக அமைந்திருந்ததுடன், தேசிய சேவை வழங்குநரை நாட வாடிக்கையாளர்களுக்கு வழிகோலியிருந்ததுடன், நாடு சவால்களுக்கு முகங்கொடுத்திருந்த போதிலும் தொடர்ச்சியாக தடங்கல்களில்லாத சேவைகளை பெற்றுக்கொடுப்பதற்கும் நம்பிக்கை கொள்வதற்கும் ஏதுவாக அமைந்திருந்தது. பிரதானமல்லாத வர்த்தகங்களின் உரிமையாண்மையை கைமாற்றியிருந்ததனூடாக, சிறந்த பெறுபேறுகளை எய்தக்கூடியதாக இருந்ததுடன், எமது பிரதான வியாபார நடவடிக்கைகளில் நேரடியாக கவனம் செலுத்துவதற்கு ஏதுவாக அமைந்திருப்பதுடன், டிஜிட்டல் தலைமைத்துவத்தில் (Digital Leadership) SLT குழுமத்தின் கவனம் செலுத்துவதற்கு ஏதுவாக அமைந்திருந்தது. தொழிற்துறையில் எமது தலைமைத்துவத்தை உறுதியாக பேணுவதில் குழுமம் அதீத ஆர்வம் கொண்டிருப்பதுடன், போட்டியை நேரடியாக எதிர்கொள்வதற்கும் தன்னை அர்ப்பணித்துள்ளது. உள்ளடக்கமாக நிர்வாகத்துக்கான அர்ப்பணிப்புடன், SLT-MOBITEL ஆக எமது வியாபார இலக்குகளை எய்துவதற்கு ஓரணியாக நாம் செயலாற்றுவோம்” - என்றார்.

குழுமத்தின் தாய் நிறுவனமான ஸ்ரீலங்கா ரெலிகொம் பிஎல்சி (SLT) வருமானத்தில் 16.0% அதிகரிப்பை பதிவுசெய்து ரூ. 59.8 பில்லியனை எய்தியிருந்தது. நிறுவனத்தின் வரிக்குப் பிந்திய இலாபம் (PAT) ரூ. 5.9 பில்லியனாக அதிகரித்திருந்ததுடன், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 45.9% வளர்ச்சியை பிரதிபலித்திருந்தது. புரோட்பான்ட் (Broadband), PEOTV மற்றும் உள்ளக சேவைகள் போன்றவற்றில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பெருமளவு வளர்ச்சியையும் பதிவுசெய்திருந்தது.

SLT பிரதம நிறைவேற்று அதிகாரி ஜனக அபேசிங்க கருத்துத் தெரிவிக்கையில், “தொற்றுப் பரவல் காலப்பகுதியிலும் நாம் டிஜிட்டல் மயமாக்கலை தொடர்ந்து மேற்கொள்ள தீர்மானத்ததினூடாக, எம்மால் அதீத வளர்ச்சியை எய்த முடிந்திருந்தது. தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநரிடமிருந்து தடங்கலில்லாத உள்ளக மற்றும் சர்வதேச குரல் மற்றும் டேட்டா சேவைகளில் மக்களின் எதிர்பார்ப்பை பூர்த்திசெய்ததுடன், அவற்றை வழங்குவதற்கான எமது ஆற்றல் என்பதனூடாக, நிறுவனத்தின் புரள்வு மற்றும் வருமான வளர்ச்சியில் பங்களிப்புச் செலுத்தியிருந்தன. டிஜிட்டல் பாகுபாட்டை குறைத்து, எமது வளர்ச்சியை கட்டியெழுப்புவதில் நாம் தொடர்ந்தும் பணியாற்றுவதுடன், எமது அர்ப்பணிப்பான ஊழியர்களின் ஆதரவுடன் எமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவைகளைப் பெற்றுக் கொடுக்கக்கூடியதாக உள்ளது” - என்றார்.

குழுமத்தின் மொபைல் பிரிவான மொபிடெல், அதன் 28 வருட கால வரலாற்றில் மிகவும் உயர்ந்த வரிக்குப் பிந்திய இலாபமாக (PAT) ரூ. 8.0 பில்லியனை பதிவுசெய்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 63.8% வளர்ச்சியாகும். புரோட்பான்ட் பிரிவு இந்த வளர்ச்சியில் பிரதான பங்களிப்பு வழங்கியிருந்தது. பாரதூரமான பாரிய பொருளாதார சூழ்நிலைகள் மற்றும் இதர சவால் நிலைகளுக்கு மத்தியில் மொபிடெல் ரூ. 47.1 பில்லியனை வருமானமாக பதிவு செய்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 8.7% வளர்ச்சியாகும். மொபிடெலின் பிற்கொடுப்பனவு குரல் பிரிவின் வருமானம் மற்றும் சர்வதேச உள்வரும் குரல் அழைப்புகள் வருமானமும் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியை இந்தக் காலப்பகுதியில் பதிவுசெய்திருந்தது. EBITDA பெறுமதி 17.7%இனால் அதிகரித்து ரூ. 19.5 பில்லியனாக பதிவாகியிருந்தது. வருமானம் மற்றும் தொழிற்படு வினைத்திறனில் வளர்ச்சிப் பிரதிபலிப்பை ஏற்படுத்தியிருந்தது.

மொபிடெல் பிரதம நிறைவேற்று அதிகாரி சந்திக விதாரென கருத்துத் தெரிவிக்கையில், “இலங்கையில் அத்தியாவசிய மொபைல் இணைப்புத்திறனுக்கான தேவையை உறுதி செய்யும் வகையில் மொபிடெல் அணி அர்ப்பணிப்புடன் செயலாற்றியிருந்தது. நெருக்கடியான பொருளாதார சூழலில் அந்த கடுமையான உழைப்பினூடாக சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிருந்தமையானது உண்மையில் மகிழ்ச்சியளிக்கின்றது. இலங்கையின் உள்நாட்டைச் சேர்ந்த மொபைல் சேவைகள் வழங்குநரான மொபிடெல், நாடு முழுவதையும் சேர்ந்த எமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த குரல் மற்றும் டேட்டா பாவனை அனுபவத்தை வழங்க முன்வந்துள்ளதுடன், அனைவருக்கும் மிருதுவான டிஜிட்டல் பயணத்தை உறுதி செய்யவும் முன்வந்துள்ளது” - என்றார்.

மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட ஆண்டில் குழும மட்டத்திலான கடன் பெறுகைகளை SLT குறைத்துக் கொண்டிருந்தது. மேலும், குழுமத்தின் தொழிற்படு பணப்பாய்ச்சல்கள் (Operating cashflow) என்பது தொடர்ச்சியான அதிகரிப்பை பதிவுசெய்திருந்தன. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், இந்தப் பெறுமதி 22.8% அதிகரிப்பைக் காண்பித்திருந்தது. நாட்டில் அந்நியச் செலாவணி நெருக்கடிகள் காணப்பட்டபோதிலும், குழுமத்துக்கான மதிப்பிறக்க வெளிப்படுத்துகை குறைவானதாக அமைந்திருந்தது. முறையான அந்நியச் செலாவணி நிர்வாகத்தினூடாக SLTஇனால் வருமானத்தைப் பதிவுசெய்ய முடிந்திருந்தது.

2021 நிதியாண்டில் ரூ. 19.3 பில்லியனை நேரடி மற்றும் மறைமுக வரியாக குழுமம் செலுத்தியிருந்தது. இதில் இலங்கை அரசாங்கத்துக்கான கட்டணங்கள் மற்றும் பங்கிலாபங்கள் போன்றனவும் அடங்குகின்றன.

SLT குழுமத்தினால் வாடிக்கையாளர் பராமரிப்புக்கான அர்ப்பணிப்பு மற்றும் தொடர்ச்சியான தடங்கல்களில்லாத சேவைகள் போன்றவற்றினூடாக கடந்த ஆண்டில் பெற்றுக் கொண்ட வருமதிகளின் அனுகூலங்களை அடுத்த ஆண்டிலும் தொடர்ந்தும் பேணக்கூடியதாக இருக்கும். நுகர்வோர் புதிய வாழ்க்கை முறைக்கு தம்மை மாற்றியமைத்துவரும் நிலையில், புரோட்பான்ட் பாவனையில் வளர்ச்சி என்பது தொடர்ந்தும் இடம்பெறும் என குழுமம் எதிர்பார்க்கின்றது. நுகர்வோரை கவனத்திற்கொண்டமைந்த கட்டணம் மற்றும் பக்கேஜ்கள் மூலமாக வெவ்வேறு பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு பொருத்தமான தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. நிலைமை மீண்டும் வழமைக்குத் திரும்பினாலும் நுகர்வில் வீழ்ச்சி ஏற்படாது என்பதில் குழுமம் உறுதியாக உள்ளது.

சிறிய நடுத்தரளவு வியாபாரங்களுக்கு ஒன்லைன் மற்றும் e-வணிக வியாபாரங்களில் வளர்ச்சியை எய்துவதற்கு ஆதரவளிப்பது என்பதில் குழுமம் கவனம் செலுத்துவதுடன், நம்பகத்தன்மை மற்றும் தன்னியக்கமயமாக்கல்(Automation) தீர்வினூடாக சிறந்த சந்தைப்பகுதியை உருவாக்கிக்கொள்ளவும், நிறுவனங்கள் பிரிவில் வளர்ச்சியை எய்தக்கூடியதாகவும் இருக்கும்.

திகதி 23.02.2022
புதன்கிழமை www.nlb.lk
உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4687
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 13,495,930.00
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கங்கள் 2 1 8 8 4 6
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 46,423,050.00

கொவிசெத
Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2982
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 6,369,860.00
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கங்கள் 14 25 46 70
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 67,463,132.00

Mega POWER
மெகா பவர்
கோடி 23+
சீட்டிழுப்பு இலக்கம் 1035
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 4,632,900.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 237,680,586.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து J
சுப்பர் இலக்கம் 26
வெற்றி இலக்கங்கள் 31 59 70 72

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 717
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,871,840.00
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கங்கள் 08 49 65 74
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 98,835,555.60

NLB ஹந்தஹன
ராசி சுப பலன்
சீட்டிழுப்பு இலக்கம் : 0028
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 5,232,180.00
இலக்கினம் ரிஷபம்
வெற்றி இலக்கங்கள் 07 37 40 45
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 2,614,564.76

ஜாதிக சம்பத
JATHIKA SAMPATHA
சீட்டிழுப்பு இலக்கம் : 1215
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,260,600.00
வெற்றி இலக்கினம் விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள் 7 4 4 5 3 8
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 10,155,704.00

தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
இலக்கம் 32, தேஷமான்ய N.W.L. முதலிகே மாவத, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

## மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்படும்போது

# காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் அதனை நேரடியாக பார்வையிட சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்

### உறவுகளைத் தேடும் குடும்பங்களின் சங்கச் செயலாளர் கோரிக்கை

(மன்னார் நகர் நிருபர்)

மனிதப் புதைகுழி மீண்டும் அகழ்வு செய்யும்போது காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் அதனை நேரடியாக பார்வையிட்டு உண்மைகளை கண்டறிய அனுமதிக்க வேண்டும் - என மன்னாரில் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கச் செயலாளர் பி.ஷர்மிளா கோரிக்கை விடுத்துள்ளார்.

மன்னாரில் நேற்று (24) வியாழக்கிழமை காலை 11 மணியளவில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் கடந்த சில வருடங்களுக்கு முன் மன்னார் நுழைவாயிலில் சதொச கட்டடம் இருந்த இடத்தில் கட்டிடம் கட்டுவதற்காக தோண்டப்பட்ட இடத்தில் மனித எச்சங்கள் கண்டெடுக்கப்பட்டன.

மன்னார் தீவு பகுதியில் 1990ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டுவரை எமது உறவுகள் காணாமலாக்கப்பட்ட நிலையில் இராணுவம் வீடுகளுக்கு வந்து எமது உறவுகளை பிடித்துச் சென்றுள்ளனர்.

இதனால் குறித்த பகுதியில் மீட்கப்பட்ட மனித எலும்புக்கூடுகள் எமது உறவுகள் உடையதாக



இருக்கலாம் என்ற சந்தேகத்தில் மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தோம். ஆனால் எமக்காக வாதாட வந்த சட்டத்தரணிகளை மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் எமக்காக ஆஜராகக்கூடாது என்று தடுத்து நிறுத்தினார்கள்.

இதனால் மன்னார் மாவட்ட காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் ஆகிய நாங்கள், இவ்வழக்கினை வவுனியா மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தோம். அதனடிப்படையில் கடந்த செவ்வாய்க்கிழமை (22) வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி எம்.இளஞ்செழியனால் எமக்கு நல்லதொரு தீர்ப்பு வழங்கப்பட்டது. இது எமக்கு மகிழ்ச்சி தரக்கூடிய விடயமாக உள்ளது.

எனினும், எமக்கான உண்மைத்தன்மை மற்றும் நீதி என்பன எங்களுக்கு கிடைக்கவேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம்.

இந்த மனித எச்சங்கள் யாருடையது என்பதை தெரியப்படுத்த வேண்டும். அத்தோடு அகழ்வுப் பணியின்போது காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய நாங்கள் அங்கு சென்று அதனை நேரடியாக பார்வையிட்டு கண்டறிவதற்கான சுதந்திரத்தை எங்களுக்குத் தர வேண்டும்.

அத்துடன் எதிர்வரும் மாதத்தில் நடை பெறவிருக்கின்ற ஜெனீவா கூட்டத்தொடரில் காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பாக உண்மை மற்றும் நம்பிக்கைத்தன்மையுடன் கூடிய சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஏனெனில், இங்கே நீதிக்காகவும் காணாமலாக் கப்பட்ட தமது உறவுகளுக்காகவும் போராடும் தாய், தந்தையர் 100இற்கும் மேற்பட்டவர்கள் இறந்துவிட்டார்கள். நாங்கள் 13 வருடங்களுக்கு மேலாக வீதியிலும் கொட்டில்களிலும் எமது ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகிறோம். ஆனால், எம்மைக் கண்டுகொள்வார் யாருமில்லை.

ஓ.எம்.பி. அலுவலகம் திறக்கப்பட்டது. அவர்கள் எம்மிடம் வந்து பதிவுகளை எடுத்துச்செல்லும் வேலை மட்டும்தான் நடைபெறுகின்றது. அதற்கான முடிவு இன்றுவரை கிடைக்கவில்லை – என்றார்.

## யாழ். சோமசுந்தரம் அவனியூ

# பெண் கொலை சந்தேகநபர் கைது!

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் சோமசுந்தரம் அவனியூ பகுதியில் வீடொன்றில் வயோதிபப் பெண்ணொருவர் அடித்துக் கொலைசெய்யப் பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை 22ஆம் திகதி மதியம் இடம்பெற்ற குறித்த கொலைச் சம்பவத்தில் அப்பகுதியைச் சேர்ந்த மரியநாயகம் காணிக்கையம்மா ஜெயசீலி (வயது 72) எனும் பெண்ணே அடித்துக் கொலைசெய்யப்பட்டிருந்தார்.

அப்பெண் தனிமையில் இருந்தவேளை, வீட்டு வேலைக்கு வந்த இளைஞனே பெண்ணை பூச்சாடியால் அடித்துக் கொலைசெய்த பின்னர், அப்பெண் அணிந்திருந்த தங்க நகைகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளார் என ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்த நிலையில், கொலை நடந்த வீட்டுக்கு அருகிலிருந்த சி.சி.ரி.வி. காணொளிகள் அடிப்படையில் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

காணொளியில் சந்தேக நபர் சைக்கிளில் தப்பிச்செல்லும் காட்சியின் அடிப்படையில் விசாரணைகளை துரிதப்படுத்தியிருந்த பொலிஸார், யாழ்ப்பாணம் முலவை எனும் பகுதியில் வைத்து சந்தேக நபரை கைதுசெய்துள்ளனர். கைதுசெய்யப்பட்ட நபரை யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்து பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# பெண் ஊடகவியலாளர் ஒருவரின் வீட்டில் நகை - பணம் திருட்டு

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் பெண் ஊடகவியலாளர் ஒருவரின் வீட்டில் பட்டப்பகலில் வீடுடைத்து பணம், நகைகள், கெமரா என்பன திருடப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, உக்குளாங்குளம் பகுதியில் வசிக்கும் பெண் ஊடகவியலாளர் ஒருவர் செய்தி அறிக்கையிடல் ஒன்றுக்காக காலை 10.50 மணிக்கு வீட்டிலிருந்து சென்றுள்ளார். கணவர் வர்த்தக நிலையத்துக்கும் பிள்ளைகள் தனியார் கல்வி நிலையத்துக்கும் சென்றுள்ளனர்.

குறித்த ஊடகவியலாளர் நேற்று முன்தினம் மதியம் 12.15 மணியளவில் கடமை முடிந்து தனது பிள்ளையுடன் வீட்டுக்கு சென்றபோது வீட்டின் கதவு உடைக்கப்பட்டு திறந்து காணப்பட்டுள்ளது. வீட்டின் இரு அறைகளிலும் காணப்பட்ட அலுமாரிகள் உடைக்கப்பட்டிருந்ததுடன், வீட்டில் இருந்த பொருட்களும் பரவிக் காணப்பட்டுள்ளன.

அத்துடன், வீட்டிலிருந்த தங்கச்சங்கிலி, மோதிரம், கைசெயின், தோடு உள்ளிட்ட 14 பவுண் நகைகள், 42 ஆயிரம் ரூபா பணம், கெமரா, தொலைபேசி, பென்ரைவ் உள்ளிட்ட பல இலட்சம் பெறுமதியான பொருட்கள் காணாமல்போயிருந்தன. இதனையடுத்து வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸில் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டையடுத்து வவுனியா பிரதி பொலிஸ் மா அதிபர், வவுனியா தலைமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் ஆகியோர் சம்பவ இடத்துக்கு சென்று தடயவியல் பொலிஸார் மற்றும் மோப்ப நாயின் உதவியுடன் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# யாழில் தங்கத்தின் விலை புதிய உச்சத்தைத் தொட்டது

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணத்தில் நேற்று தங்கத்தின் விலை ஆயிரத்து 500 ரூபாவால் உயர்வடைந்து புதிய உச்சத்தை எட்டியுள்ளது.

தங்கம் மீதான இறக்குமதிக் கட்டுப்பாடுகள் நீடிக்கும் நிலை மற்றும் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதியின் வீழ்ச்சி காரணமாக தங்கத்தின் விலை உயர்வடைந்து செல்வதாக இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், உக்ரைன் மீதான ரஷ்யாவின் போர் தொடங்கியுள்ளது. இந்தச் சூழலால் உலகம் முழுவதுமே பொருளாதார அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளன. கச்சா எண்ணெய், தங்கம் விலை கடுமையாக உயர்ந்து வருகின்றது. பங்குச்சந்தைகள் சரிந்து வருகின்றன.

யாழ்ப்பாணத்தில் நேற்று (24) வியாழக்கிழமை 22 கரட் தங்கத்தின் விலை ஒரு இலட்சத்து 18 ஆயிரத்து 250 ரூபாவாக உயர்வடைந்துள்ளது. நேற்று ஒரு பவுண் தங்கம் ஒரு இலட்சத்து 16 ஆயிரத்து 850 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது.

**தூய தங்கத்தின் விலை**

24 கரட் தூய தங்கம் நேற்று பவுண் ஒன்று ஒரு இலட்சத்து 29 ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளது. நேற்று முன்தினம் 24 கரட் தூய தங்கத்தின் விலை பவுண் ஒரு இலட்சத்து 27 ஆயிரத்து 500 ரூபாவாகக் காணப்பட்டது.

# தோரணவாசல் புனரமைப்பதற்கான ஆரம்ப நிகழ்வு இன்று



(யாழ். நிருபர்)

நல்லூர் இராசதானியின் தோரணவாசல் புனருத்தாரணம் செய்வதற்கான ஆரம்ப நிகழ்வு இன்று (25) வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் தலைவர் பேராசிரியர் ப. புஸ்பரட்ணம் மற்றும் யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் உப தலைவர் பேராசிரியர் ரவிராஜ் ஆகியோர் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு, யாழ்ப்பாண மரபுரிமை மையம் மற்றும் தொல்பொருள் திணைக்களம் அனுசரணை வழங்கியுள்ளது.

# அரிய வகை கடலாமைகள் வீடொன்றின் குளியல் அறையிலிருந்து மீட்பு



(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எழுத்தூர் பகுதியில் சட்டவிரோதமாக பிடிக்கப்பட்டு குளியல் அறையில் ஒழித்துவைக்கப்பட்டிருந்த ஐந்து கடலாமைகள் நேற்று முன்தினம் (23) புதன்கிழமை இரவு பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

மன்னார் பொலிஸ் அத்தியட்சகர் துல்ஷன் நாகவத்தயின் பணிப்புரையின்கீழ் உதவி பொலிஸ் அத்தியட்சகர் பிரபாத் விதானகவின் கண்காணிப்பில் மாவட்ட குற்றப்புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரி குமார பல்லேவல தலைமையிலான குழுவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் எழுத்தூர் பகுதியிலுள்ள வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே மேற்படி ஆமைகள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த ஆமைகள் அரிய வகை பேராமை இனத்தைச் சேர்ந்தவை என்பதுடன் ஒவ்வொரு ஆமையும் சுமார் 100 கிலோ எடை உடையவையாக காணப்படுகின்றன.

குறித்த கடலாமைகள் பொலிஸாரின் மேலதிக விசாரணைகளின் பின்னர் மன்னார் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு கடலில் மீள் விடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 22 தமிழ்நாட்டு மீனவர்கள் கைது



(யாழ். நிருபர்)

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 22 தமிழ்நாட்டு மீனவர்கள் நேற்று முன்தினம் இரவு இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் - காரைநகரை அண்டிய கடற்பரப்பில் மீன்பிடித்து கொண்டிருந்த காரைக்கால் மற்றும் நாகை மாவட்டத்தைச் சேர்ந்த 22 மீனவர்களையும் இரண்டு விசைப்படகுகளையும் கடற்படையினர் கைதுசெய்து யாழ்ப்பாணம் - மயிலட்டி மீன்பிடி துறைமுகத்துக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

தொடர்ந்து மீனவர்களுக்கு கொரோனா மற்றும் மலேரியா தொற்று தொடர்பில் சுகாதாரத் துறையினரால் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, மீன்பிடி நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் சட்ட நடவடிக்கைக்காக கையளிக்கப்பட்டு ஊர்காவல்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதி சாரணர் விருது வழங்கும் நிகழ்வு - 2022



















(யாழ். நிருபர்)

ஜனாதிபதி சாரணர் விருது வழங்கும் நிகழ்வு மாவட்ட சாரண ஆணையாளர் தலைமையில் நேற்று முன்தினம் (23) பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் கலந்துகொண்டதுடன், கொழும்புத் தலைமைக் காரியாலய சாரண ஆணையாளர்கள் அப்துல் முகஜித், அசோக்குமார் மற்றும் மாவட்ட சாரணர் ஆணையாளர்கள் மற்றும் உதவி மாவட்ட சாரணர் ஆணையாளர்கள், அதிபர்கள், பெற்றோர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், விருதுபெறும் சாரண மாணவர்கள் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

மேலும், ஜனாதிபதி சாரணர் விருது வழங்கும் நிகழ்வை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி செயலகத்திலிருந்து இணையவழி நிகழ்நிலையில் நேரலை ஊடாக சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைத்தார்.

அத்தோடு, ஜனாதிபதி விருதினைப் பெறத் தகுதியுடைய நாடு முழுவதுமுள்ள அனைத்து சாரணர்களையும் கோவிட் தொற்றுச் சூழ்நிலையினை கருத்திற்கொண்டு ஜனாதிபதி விருதினை வழங்கும் குறித்த நிகழ்வானது, இணையவழி நிகழ்நிலைத் தொழில்நுட்பத்தின் ஊடாக அனைத்து சாரணர்களையும் உள்ளடக்கியதாக இடம்பெற்றிருந்தது.

இந்நிகழ்வில், வடக்கு மாகாணத்தில் மொத்தமாக 31பேர் ஜனாதிபதி சாரணர் விருதினைப் பெற்றிருந்ததோடு, இவர்களுக்கான ஜனாதிபதி சாரணர் விருதினை மேலதிக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் வழங்கினார்.

# அண்ணனுக்கும் தங்கைக்கும் காணிச் சண்டை

## கத்திக்குத்தில் முடிந்தது 300 வாழை மரங்களும் நாசம்

(ருமேஷ் இசுரங்க)

கரவலகஸ்வெவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அளுத்கம பகுதியில் அண்ணனுக்கும் தங்கைக்கும் இடையில் ஏற்பட்ட காணிச் சண்டை காரணமாக சகோதரர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மேலும், காணியில் வளர்க்கப்பட்டிருந்த 300இற்கும் அதிகமான வாழை மரங்களும் ஏராளமான மரவள்ளிச் செடிகளும் வெட்டி தரைமட்டமாக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

தங்கைக்கு தனது தாயாரால் கொடுக்கப்பட்ட காணியில் அண்ணன் விவசாயம் செய்துள்ளார். அங்கு வாழை மரங்களையும் மரவள்ளிச் செடிகளையும் நாட்டியுள்ளார். இந்நிலையில், அந்த இடத்துக்கு திடீரென வந்த தங்கையும் அவரது கணவரும் சகோதரனுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வாக்குவாதம் முற்றியதன் காரணமாக தங்கையின் கணவரால் சகோதரன் கத்திக்குத்துக்கு உள்ளாகியுள்ளார். அத்துடன், அந்தக் காணியில் நாட்டப்பட்டிருந்த வாழை மரங்களும் மரவள்ளிச் செடிகளும் வெட்டி நாசமாக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவத்தில் காயமடைந்த சகோதரர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன் சாலியவெவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



# புதையல் தோண்டிய குழுவில் பொலிஸ் கான்ஸ்டபிள்!

## உடனடியாக பணி நீக்கப்பட்டார்

(கெலும் குணதிலக்க)

அநுராதபுரம் லாஹுகல வனப்பகுதியில் புதையல் தோண்டிக்கொண்டிருந்த நிலையில் கைதுசெய்யப்பட்ட குழுவில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் இருந்துள்ளமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து அவரை உடனடியாக பணிநீக்கம் செய்வதற்கு பிராந்திய பொலிஸ் தலைமையகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலுக்கமைய கல்அமுன வனாந்தரத்தில் புதையல் தோண்டிய நால்வர் கைதுசெய்யப்பட்டனர். இவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளில் ஒருவர் பொலிஸ் கான்ஸ்டபிள் என்பது தெரியவந்துள்ளது.

சியம்பலாண்டுவ பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் கான்ஸ்டபிள் என அவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பில் பொலிஸ் விசேட குற்றத்தடுப்புப் பிரிவினரால் விசேட விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# வீட்டுத் தோட்டம் என்ற பெயரில் கஞ்சா செய்கை!

(ஜயந்த வீரசேகர)

வெல்லவாய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அஞ்சலிகம பகுதியில் கஞ்சா பயிரிடப்பட்டிருந்த இரு பயிர்ச்செய்கை காணிகள் முற்றுகையிடப்பட்டுள்ளன. பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கமைய இந்த முற்றுகை இடம்பெற்றுள்ளது.

வீட்டுத்தோட்டம் என்ற போர்வையில் அருகருகே இருந்த இரு வீடுகளில் கஞ்சா பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த இரு காணிகளிலிருந்தும் சுமார் 500 செடிகள் அழிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இவற்றின் பெறுமதி இரண்டு இலட்சம் ரூபாவுக்கும் அதிகம் எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இச்சம்பவம் தொடர்பில் வீடுகளின் உரிமையாளர்களை கைதுசெய்ய பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர்.



# பட்டப்பகலில் அயலவரின் விளைச்சல் அறுவடை!

## கணவனும் மனைவியும் கைது

(ரவீந்திர சந்திரலால், யு.எம். திலக்கரத்ன)

அக்மீமன பகுதியிலுள்ள வயலில் உரிமையாளருக்குத் தெரியாமல் நெல் அறுவடை செய்துகொண்டிருந்த கணவனும் மனைவியும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

அக்மீமன, பின்னாதுவ பகுதியில் ஆணும் பெண்ணும் நெல் அறுவடை செய்துகொண்டிருப்பதாக வயல் உரிமையாளருக்கு தொலைபேசி அழைப்பு கிடைத்துள்ளது. அதன்பிரகாரம் தனது வயலுக்குச் சென்று பார்த்த அவர் அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

உடனடியாக அங்கு வந்த பொலிஸார் அவர்கள் இருவரையும் கைதுசெய்துள்ளனர். அவர்கள் கணவன் மனைவியென்பது விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

அவர்கள் இருவரும் அறுவடை செய்த இரண்டு மூடை நெல்லும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக அக்மீமன பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# கடற்றொழில் அமைச்சு வளாகத்தில் நியாய விலையில் பல்பொருள் அங்காடி

## அமைச்சர் டக்ளஸினால் திறந்துவைப்பு

நியாய விலையில் பொருட்களை கொள்வனவு செய்யத்தக்க வகையிலான பல்பொருள் அங்காடி ஒன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் கடற்றொழில் அமைச்சு வளாகத்தில் நேற்று (24) திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடற்றொழில் அமைச்சில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் நலன்களை கருத்திலெடுத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் எண்ணக்கருவிற்கு அமைவாக ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ள இவ்விற்பனை நிலையத்தின் மூலம் கடற்றொழில் அமைச்சின் பணியாளர்கள் நன்மையடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# தனமல்வில வீதி விபத்தில் ரஷ்ய யுவதிக்கு காயம்

(கெலும் குணதிலக்க)

வெல்லவாய – தனமல்வில பிரதான வீதியின் வெஹெரயாய விகாரைக்கருகில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வீதி விபத்தில் ரஷ்ய யுவதியொருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ரஷ்ய யுவதியும் அந்தப் பெண்ணின் காதலரும் பயணித்த மோட்டார்சைக்கிள் ஒன்று எதிரில் வந்த மோட்டார்சைக்கிளுடன் மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. இதன்போது யுவதி காயமுற்ற நிலையில் வெல்லவாய பிரதான வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இளைஞர் சிறு காயங்களுடன் தப்பியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் வெல்லவாய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டீ.எம். ரத்நாயக்க தலைமையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# அதிக விலைக்கு ரைல்ஸ் விற்பனை செய்வோருக்கு எதிராக நடவடிக்கை

## 1977 இற்கு அழைக்குமாறு பொதுமக்களிடம் வேண்டுகோள்

அதிக விலைக்கு தரை ஓடு (ரைல்ஸ்) விற்பனை செய்யும் வர்த்தகர்கள் மற்றும் நிறுவனங்கள் தொடர்பாக முறைப்பாடு செய்யுமாறு நுகர்வோர் விவகார அதிகாரசபை பொதுமக்களுக்கு அறிவித்துள்ளது.

நுகர்வோர் விவகார அதிகாரசபையின் நேரடி தொலைபேசி இலக்கமான 1977இற்கு இதுதொடர்பாக பொதுமக்கள் முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியும் என சபையின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

நாட்டில் நிலவுகின்ற ரைல்ஸ் தட்டுப்பாட்டை சாதகமாக பயன்படுத்தி சில வர்த்தகர்கள் மற்றும் நிறுவனங்கள், நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அதிக விலைக்கு ரைல்ஸ்களை விற்பனை செய்வதாக நுகர்வோரிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அதிக விலைக்கு ரைல்ஸ்களை விற்பனை செய்கின்ற வர்த்தகர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு, இலங்கையிலுள்ள முன்னணி ரைல்ஸ் நிறுவனம் ஒன்றும் அறிக்கை ஒன்றினூடாக தெரிவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சில ரைல்ஸ் விற்பனையாளர்கள், நுகர்வோரை ஏமாற்றி பல்வேறு நிறங்களில் ரைல்ஸ்களை விற்பனை செய்துவருவதாக குற்றச்சாட்டுகள் கிடைத்திருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# எரிபொருள் தட்டுப்பாடு ஓரிரு தினங்களில் தீரும்

## பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நம்பிக்கை

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு எதிர்வரும் சில தினங்களில் குறைவடைந்துவிடும் - என்று பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த சந்தர்ப்பத்தில் எரிபொருளின் விலையை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானிக்கவில்லை. 35 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான நிதியை செலவிட்டு, விடுவிக்கப்பட்டுள்ள கப்பலில் 37 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் டீசல் தரையிறக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் சில தினங்களில் மேலும் ஒரு கப்பல் எரிபொருளுடன் நாட்டிற்கு கொண்டுவரப்படவுள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# நெல்லியடி விபத்தில் இளைஞன் உயிரிழப்பு

(யாழ். செய்தியாளர் )

நெல்லியடியில் கனரக வாகனமும் மோட்டார்சைக்கிளும் மோதுண்டு ஏற்பட்ட விபத்தில் இளைஞர் ஒருவர், சம்பவ



இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரிக்கு முன்பாக நேற்று (24) பிற்பகல் 12.55 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் துன்னாலை கோவில் சந்தை பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞனே உயிரிழந்தார்.

கனரக வாகனம் வீதியில் பயணித்த வேளை, எதிரே மோட்டார்சைக்கிளில் பயணித்த இளைஞன், தனது கட்டுப்பாட்டையிழந்து வீதியின் மறுபக்கத்தில் பயணித்த வாகனத்துடன் மோதி விபத்து ஏற்பட்டதாக ஆரம்ப விசாரணைகளில் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# தலைக்கவசத்தால் தாக்கி பெண்ணொருவர் கொலை

## ரிதீகமவில் சம்பவம்

ரிதீகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சமகி மாவத்தையில் உள்ள தேவால சந்தி பகுதியில் பெண் ஒருவர் கொலைசெய்யப்பட்டுள்ளார்.

பாதுகாப்பு தலைக்கவசத்தால் பெண் அடித்துக் கொல்லப்பட்டுள்ளதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதே பகுதியைச் சேர்ந்த 67 வயதுடைய தாய் ஒருவரே இவ்வாறு கொலைசெய்யப்பட்டுள்ளார்.

கொலையுண்ட பெண்ணின் மகள் மோட்டார்சைக்கிள் ஒன்றில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளார்.

விபத்தை ஏற்படுத்திய மோட்டார் சைக்கிள் ஓட்டுனரை தேடிச் சென்று கொலையுண்ட பெண் விபத்து குறித்து விசாரித்ததில் இருவருக்கும் இடையில் வாக்குவாதம் முற்றியுள்ளது.

இதன்போது, விபத்தை ஏற்படுத்திய மோட்டார்சைக்கிள் ஓட்டுனர் தனது கையிலிருந்த தலைக்கவசத்தால் குறித்த பெண்ணை தாக்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் ரிதீகம பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடைய நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் ரிதீகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இலங்கை – நெதர்லாந்து அமைச்சர்கள் ஒத்துழைப்பை தீவிரப்படுத்த தீர்மானம்

பரிஸிலுள்ள பிரெஞ்சுக் குடியரசின் வெளிநாட்டு அமைச்சில் நடைபெற்ற இந்தோ-பசுபிக் ஒத்துழைப்புக்கான அமைச்சர்கள் மட்ட மன்றத்தின் பக்க அமர்வாக, வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், நெதர்லாந்தின் வெளிநாட்டு அமைச்சர் வோப்கே ஹோக்ஸ்ட்ராவுடன் உரையாடியுள்ளார்.



இது குறித்து வெளிநாட்டலுவல்கள் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நெதர்லாந்து வெளிநாட்டு அமைச்சருடன் பேராசிரியர் பீரிஸ் பால் பண்ணையிலான ஒத்துழைப்பு, தோட்டக் கலை, விவசாயம் சார்ந்த தொழில், சுற்றுலா, எராஸ்மஸ் புலமைப் பரிசில்கள் உட்பட உயர்கல்வியிலான முன்முயற்சிகள் மற்றும் முழு அளவிலான கலாசார ஒத்துழைப்பு, குறிப்பாக, பாரம்பரிய தலங்கள் மற்றும் கலாசார கலைப்பொருட்களைப் பாதுகாத்தல் போன்ற தலைப்புகளில் கலந்துரையாடினார்.

நெதர்லாந்திலுள்ள முன்னணி பல்கலைக் கழகங்களில் பல ஆண்டுகளாக அவர் ஆற்றிய விரிவுரைகள் மற்றும் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் அவரது முனைவர் பட்ட ஆய்வறிக்கையின் தலைப்பு, ரோமன்-டச்சு சட்டத்தில் பேராசிரியர் பீரிஸின் அதிகாரபூர்வ அந்தஸ்து குறித்து டச்சு வெளிநாட்டு அமைச்சர் அவரைப் பாராட்டினார்.

எதிர்வரும் காலங்களில் கொழும்புக்கு விஜயம் செய்யுமாறு நெதர்லாந்தின் வெளிநாட்டு அமைச்சருக்கு இலங்கையின் வெளிநாட்டு அமைச்சர் விடுத்த அழைப்பை அவர் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார்.

# மக்களின் எதிர்பார்ப்புகளை அரச தொழிற்பாட்டின்மூலம் நிறைவேற்ற வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்





## அரச அதிகாரிகளுடனான விசேட சந்திப்பில் ஜனாதிபதி கோட்டா தெரிவிப்பு

### மத்திய அரசாங்கமும் மாகாண சபையும் ஒரே அரச கொள்கையில் செயற்பட வேண்டுமெனவும் வலியுறுத்து



பொதுச் சேவை மிகப்பெரியது. ஓர் அரச ஊழியர், மக்களின் ஒவ்வொரு தேவையிலும் தலையிடுகிறார். எனவே, அனைத்து அரச நிறுவனங்களினதும் பொதுச் சேவைகள் உரிய முறையில் செயற்படுத்தப்பட வேண்டும் என்பதே தனது விருப்பமாகும் என்று, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

பெரும்பாலான அரச ஊழியர்கள் வேலை செய்ய விரும்புகிறார்கள். கண்காணிப்பு, ஆலோசனை மற்றும் ஊக்குவிப்பு மூலம் அவர்களின் சேவைகளை நாடு முழுமையாகப் பெறுவதுதான் தேவையாகவுள்ளது. ஆளுநர்கள், அமைச்சுகள், மாகாண மற்றும் மாவட்ட செயலாளர்கள் உட்பட அனைத்து உயர் அதிகாரிகளும் தனிப்பட்ட முறையில் தலையிட்டு தலைமைத்துவத்தை வழங்க வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

அரசாங்கத்தின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பில் மக்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காக, நேற்றுமுன்தினம் (23) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற அரச அதிகாரிகளுடனான விசேட சந்திப்பின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அரசாங்க நிறுவனங்களுக்கு தனிப்பட்ட முறையில் விஜயம் செய்து மேற்பார்வை செய்வதாகத் தெரிவித்த ஜனாதிபதி, ஆளுநர்கள் உட்பட அரச அதிகாரிகள் தமது நிறுவனங்களுக்குச் சென்று அவர்களின் பணிகளை மேற்பார்வையிட்டு அனைத்து ஊழியர்களையும் ஊக்குவிப்பார்கள் எனத் தான் நம்புவதாகவும் தெரிவித்தார்.

மக்களை வாழ வைக்க நாங்கள் இங்கு வந்துள்ளோம். அதற்கான சூழலைத் தயார்ப்படுத்த வேண்டும். அதிகாரிகளின் கடமை, பொறுப்பு, மனிதாபிமானம் என்பனவும் மிகவும் முக்கியமானவை ஆகும் என்று ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

மத்திய அரசாங்கம் மற்றும் மாகாண சபையின் கீழ் உள்ள நிறுவனங்கள் தமது கடமைகளை நிறைவேற்றுவதில் ஒரே பொதுக் கொள்கையில் இருக்க வேண்டும் என ஜனாதிபதி அங்கு வலியுறுத்தினார்.

பசுமை விவசாயம் என்பது அரசாங்கத்தின் முக்கிய திட்டமாகும். கிராமப்புற மக்களில் 75 சதவீதத்துக்கும் அதிகமானோர் மற்றும் 90 சதவீதம் விவசாயம் அல்லது அதைச் சார்ந்த வாழ்வாதாரங்களில் ஈடுபட்டுள்ளனர். எதிர்காலச் சந்ததியினரின் முன்னேற்றத்துக்காக இயற்கை விவசாயம் அவர்கள் விழிப்புணர்வோடு இருக்க வேண்டும். அவ்வாறு செய்ய ஊக்குவிக்க வேண்டும் மற்றும் நம்பிக்கையை வளர்க்க வேண்டும். தரமான சேதனப் பசளைகளை உரிய நேரத்தில் விநியோகிப்பதன் மூலம் வெற்றிகரமான பெறுபேறுகளை அடைய முடியும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

மீள்புதுப்பிக்கத்தக்க சக்திவலு ஆதாரங்களை அதிகரிப்பதன் மூலம் தேசிய மின்சாரத் தேவைக்குப் பங்களிக்க முடியும் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அரசாங்கத்தின் குறுகிய மற்றும் நீண்டகால இலக்குகளை அடைவதற்கு உதவுமாறு அழைப்பு விடுத்தார்.

தன்னிறைவு வேலைத்திட்டத்தின் மூலம் உள்நாட்டுப் பொருளாதாரத்தை முகாமைத்துவப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

சேதனப் பசளைகளைப் பயன்படுத்துவதன் மூலம் மாகாண மட்டத்தில் மகிழ்ச்சியான அறுவடைக்கு வழிவகுக்க முடியும் எனவும் விவசாயிகளை முறையான வகையில் தெளிவுபடுத்துவதன் மூலம் விரும்பிய நோக்கங்களை அடைய முடியும் எனவும் ஆளுநர்கள் குறிப்பிட்டனர்.

பசுமை விவசாய வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதில் பெரும்போகத்தில் இருந்து கற்றுக்கொண்ட பாடங்களை ஆராய்ந்து, சிறு போகத்தை வெற்றியடையச் செய்வதற்கு எடுக்கப்பட்டுள்ள எதிர்காலத் திட்டங்களை இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார். 25 மாவட்டங்களில் பயன்படுத்தப்பட வேண்டிய உரங்களை அடையாளம் காணும் வகையில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில் மண் பரிசோதனைக்குத் தேவையான இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

அத்தியாவசியப் பொருட்களை தட்டுப்பாடின்றி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ, கிராம மட்டத்தில் குறைபாடுகளை ஆராய்ந்து தகவல்களைப் பெறுவதற்கு பிரதேச செயலகங்களினால் பொறிமுறையொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத், ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, ஆளுநர்கள், அமைச்சுகள், மாகாண மற்றும் மாவட்டச் செயலாளர்கள் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

# பரிஸில் நடைபெறும் சமுத்திர விவகார மன்றத்தில் இலங்கையின் பங்கை அமைச்சர் பீரிஸ் வலியுறுத்து

பரிஸில் உள்ள ஐரோப்பா மற்றும் வெளிநாட்டு அமைச்சின் மாநாட்டு நிலையத்தில் நடைபெற்ற இந்தோ - பசுபிக் ஒத்துழைப்புக்கான அமைச்சர்கள் மட்ட மன்றத்தில் வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் உரையாற்றினார். இது ஐரோப்பிய ஒன்றிய சபையின் பிரெஞ்சு தலைமைத்துவத் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

இந்த கலந்துரையாடல் குறித்து வெளிநாட்டலுவல்கள் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஐரோப்பிய ஆணைக்குழு மற்றும் உயர் பிரதிநிதியால் வெளியிடப்பட்ட இந்தோ - பசுபிக் பகுதியிலான ஒத்துழைப்புக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் மூலோபாயத்தைத் தொடர்ந்து, ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்கள் மற்றும் இந்தோ - பசுபிக் பிராந்தியத்தைச் சேர்ந்த சம எண்ணிக்கையிலான நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்கள் மற்றும் இந்திய மற்றும் பசுபிக் சமுத்திரங்களிலிருந்தான ஐரோப்பிய நிறுவனங்கள் மற்றும் ஆறு பிராந்திய அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கான உரையாடல் மற்றும் பிரதிபலிப்புக்கான அரங்கத்தை இந்த வகையான முதல் நிகழ்வு வழங்கியது.

சுகாதாரம், காலநிலை, பல்லுயிர் பெருக்கம் மற்றும் சமுத்திரங்கள் ஆகிய துறைகளில்




உலகளாவிய சவால்களை உள்ளடக்கிய வட்ட மேசை மாநாட்டில் இலங்கையின் வெளிநாட்டு அமைச்சர் பங்கேற்றார். ஏனைய தலைப்புகளில் இணைப்பு மற்றும் டிஜிட்டல் சிக்கல்கள், பொலிஸ் மற்றும் பாதுகாப்பு ஆகியவை உள்ளடங்கும்.

பிரெஞ்சுக் குடியரசின் வெளிநாட்டு அமைச்சர் ஜீன்-யவ்ஸ் லு டிரியன் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர் பிரதிநிதி ஜோசப் பொரெல் ஃபோன்டெல்லெஸ் ஆகியோரால் கூட்டாக ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கில் 60 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

கொவிட்-19 தொற்றுநோயைக் கட்டுப்படுத்துவதற்காக இலங்கை ஏற்றுக்கொண்ட கொள்கையை முன்வைத்த வெளிநாட்டு அமைச்சர்களுக்கு பேராசிரியர் பீரிஸ் விளக்கினார். மேலும், நாட்டின் மூலோபாயத்தை அடிப்படையாகக் கொண்ட புலனுணர்வு சமநிலையே அதன் வெற்றிக்குக் காரணம் என்றும் குறிப்பிட்டார்.

நாடு முழுவதும் இரண்டு தடுப்பூசிகள் மற்றும் பூஸ்டர்களை வழங்குவது மிக உயர்ந்த முன்னுரிமையைப் பெற்றமையே மக்களின் நீடித்த கணிசமான பாதுகாப்புக் காரணமாகும்.


வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் வகையில், பூட்டுதல்கள் மிகக் குறைவாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும் பயன்படுத்தப் பட்டன எனக் குறிப்பிட்டார்.

பிம்ஸ்டெக்கின் தற்போதைய தலைவர் மற்றும் இந்து சமுத்திர விளிம்பு சங்கத்தின் இணைத் தலைவர் என சமுத்திரம் தொடர்பான விடயங்களில் இலங்கையின் முன்னோடி பங்கை வெளிநாட்டு அமைச்சர் விவரித்தார். நிலையான நைதரசன் முகாமைத்துவம் தொடர்பான கொழும்பு பிரகடனத்தின் பரவலான அங்கீகாரம் மற்றும் குறிப்பாக சதுப்புநிலங்களைப் பாதுகாப்பதில் இலங்கையின் வெற்றி மற்றும் ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோவில் பிரித்தானிய பிரதமரின் ஒரு முயற்சியான பொதுநலவாய நீலப் பட்டய வெற்றியாளராக இலங்கையை அங்கீகரிப்பதன் மூலம் சி.ஓ.பி. 26 இல் எய்திய குறிப்பிடத்தக்க சாதனையை அவர் குறிப்பிட்டார்.

பசுமைப் பொருளாதாரத்துக்கான இலங்கையின் அர்ப்பணிப்பின் மூலக்கல்லான பொருளாதார அபிவிருத்தி மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் ஆகியவற்றின் நிரப்பு தன்மையை வலியுறுத்துவதன் மூலம் இலங்கையின் கலாசாரப் பாரம்பரியம் குறித்து அமைச்சர் பீரிஸ் விசேடமாகக் குறிப்பிட்டார்.

மீன்வளம் மற்றும் ஏனைய கடல் வளங்களை சுரண்டுவதில் நீடித்து நிலைத்திருப்பதானது, தீவு நாட்டின் பொருளாதார நல்வாழ்வுக்கு மையமாக உள்ளது என அவர் மேலும் குறிப்பிட்டார். வர்த்தகம் மற்றும் முதலீடு, கல்வி மற்றும் கலாசார இணைப்புகள், சுற்றுலாவை மேம்படுத்துதல், புலனாய்வு சேகரிப்பு மற்றும் பகிர்வு போன்றவற்றில் மேம்படுத்தப்பட்ட இணைப்புகள் இலங்கைக்கு உடனடியாகப் பொருத்தமான ஏனைய அம்சங்களாகும் எனக் குறிப்பிட்டார். சமுத்திரங்களின் ஆட்சி, மேலடுக்கு விமானத்தின் சிறப்பு மற்றும் சர்வதேச கடல் வழியாக வழிசெலுத்துவதற்கான உரிமைக்கான விதிகள் அடிப்படையிலான அணுகுமுறை போன்ற பரிஸ் அமைச்சர்கள் மட்ட மன்றத்தில் எதிர்பார்க்கப்படும் கூட்டாண்மை பலதரப்பு மதிப்புகளுக்கு பகிரப்பட்ட அர்ப்பணிப்பின் அடிப்படையில் வலுவான அடித்தளத்தால் பலப்படுத்தப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டு வெளிநாட்டு அமைச்சர் நிறைவு செய்தார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பரீட்சைகளில் சித்திபெற்ற அந்தண மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு முன்னேஸ்வரம் ஆலயத்தில்







(ரஸீன் ரஸ்மின்)

2010ஆம் ஆண்டு முதல் 2020ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை, கல்விப் பொதுத்தராதர சாதாரண மற்றும் உயர் தரத்தில் சித்திபெற்ற அந்தண மாணவ, மாணவிகளை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (23) பிற்பகல் 2.30 மணிக்கு சிலாபம் முன்னேஸ்வரம் கொழும்பார் மடத்தில் இடம்பெற்றது. புத்தளம் மாவட்ட பிராமணர் ஒன்றியத்தினரின் ஏற்பாட்டில் இந்த கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சமஸ்கிருத விரிவுரையாளரும், ஸ்ரீவடிவாம்பிகா சமேத முன்னைநாதர் தேவஸ்தான தர்மகர்த்தாவும், பிரதம குருவுமான தேவி உபாசகர் பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன் சர்மா தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் இந்து மத ஆலோசகரும் ஸ்ரீ துர்க்கா குருகுல அதிபருமான சிவாகம ரத்னா சிவஸ்ரீ விஸ்வநாராயண சர்மா பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

அத்துடன், யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, கிளிநொச்சி மற்றும் மலையகம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பிராமணர் ஒன்றியத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

இதன்போது 2010ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதாரண மற்றும் உயர் தரத்தில் சித்தி பெற்ற அந்தண மாணவ, மாணவிகள் அதிதிகளால் பாராட்டுப் பத்திரம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன், விழாவுக்கு பிரதம விருந்தினராக கலந்துகொண்ட இந்து மத ஆலோசகரும், ஸ்ரீதுர்க்கா குருகுல அதிபருமான சிவாகம ரத்னா சிவஸ்ரீ விஸ்வநாராயண சர்மாவுக்கும் பிராமணர் ஒன்றியத்தால் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். இதன்போது, மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும், ஆன்மீக உரைகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# புத்தளம் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் திடீர் சோதனை

## நுகர்வோர் அதிகார சபையினரால் முன்னெடுப்பு

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் மாவட்டத்தில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நுகர்வோர் அதிகார சபையினர் சோதனை நடவடிக்கைகளை நேற்று முன்தினம் (23) மேற்கொண்டனர்.

புத்தளம் மாவட்டத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தற்போதுள்ள எரிபொருள் அளவுகள் இதன்போது பரிசோதனை செய்யப்பட்டுள்ளன.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் டீசல் மற்றும் பெற்றோல் உள்ளிட்ட எரிபொருட்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளனவா என்பதனை கண்டறியும் நோக்கில், இந்த சோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் புத்தளம் மாவட்ட அலுவலகத்தின் கடமைநேர அதிகாரியொருவர் தெரிவித்தார்.

அதன்படி, புத்தளம் மற்றும் மாதம்பை உள்ளிட்ட பகுதிகளில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மேற்படி பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

விலை அதிகரிப்பை எதிர்பார்த்து சில எரிபொருள் நிரப்பு நிலையங்களின் உரிமையாளர்கள் எரிபொருளை மறைத்து வைத்திருக்கலாம் என மக்கள் தொடர்ச்சியாக குற்றம் சுமத்தி வருகின்றனர்.

இந்த நிலையிலேயே எரிபொருள் நிரப்பு நிலையங்கள் சோதனையிடப்பட்டுள்ளன.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களை நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகளுடன் பொலிஸாரும் இணைந்து சோதனையிடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 'முல்லைத்தீவு முதல் புத்தளம் வரை தீனுடையானின் அனுபவப் பகிர்வு' நூல் வெளியீடு

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

முல்லைத்தீவு தண்ணீரூற்றைச் சேர்ந்த முஸ்தபா மன்ஸூர் (இளைய முஸ்தபா) எழுதிய "முல்லைத்தீவு முதல் புத்தளம் வரை தீனுடையானின் அனுபவப் பகிர்வு" நூல் வெளியீட்டு நிகழ்வு நாளை மறுதினம் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணி முதல் புத்தளம் பெருக்குவற்றான் அல்- மின்ஹாஜ் முஸ்லிம் மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

புத்தளம் காஸிமியா அரபுக்கல்லூரி அதிபரும் புத்தளம் மாவட்ட உலமா சபைத் தலைவருமான அஷ்ஷெய்க் அப்துல்லா மஹ்மூத் மதனியின் தலைமையில் நடைபெறும் மேற்படி நிகழ்வில், ஒமேகா கன்ஸல்டன்ட் கம்பனி பிரைவேட் லிமிடெட் மற்றும் பி.ஈ.சி.என்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட் அதிபர் அல்ஹாஜ் எம்.ஐ.எம்.நயீம் முதல் பிரதியை பெற்றுக் கொள்வார்.

அஷ்ஷெய்க் எம்.ஐ.கைஸர்கான் கபூரி வரவேற்புரை நிகழ்த்த புத்தளம் பெண்கள் அரபுக் கல்லூரி அதிபர் அஷ்ஷெய்க் எம்.எம்.எம்.றியாஸ் தேவ்பந்தி வாழ்த்துரை வழங்குவார்.

சாமசிறி அல்ஹாஜ் அப்துல் சத்தார் மதனி கருத்துரையும் தாராபுரம் ஹாஜா அலாவுதீன் நூல் பற்றிய திறனாய்வு உரையையும் நிகழ்த்துவார்கள். வெள்ளாப்புவெளி வெளியிட்டுள்ள இந்நூல் பற்றிய வெளியீட்டு உரையை முல்லை முஸ்லிமா வழங்க, ஏற்புரையை நூலாசிரியர் முஸ்தபா மன்ஸூர் வழங்குவார். நிகழ்வை பெருக்குவற்றான் இளைஞர் அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது.



**கொ/மட்டக்குளி சேர் ராசிக் பரீத் பாடசாலையைச் சேர்ந்த மாணவி ஸீனத் ஸலீம் எழுதிய "உங்களில் பலருக்குத் தெரியாத விலங்குகளும் பறவைகளும்" என்னும் நூலின் முதல் பிரதியை இலக்கியப் புரவலர் ஹாஷிம் உமருக்கு அவரது இல்லத்தில் வைத்து மாணவி ஸீனத் ஸலீம் வழங்கிவைத்தார். இதன்போது மேமன்கவியும் உடன் காணப்படுகிறார்.**

# சஹ்ரானின் மனைவி ஹாதியா மீது தாக்கல்செய்யப்பட்ட வழக்கு விசாரணை மே 27ஆம் திகதிவரை ஒத்திவைப்பு

## குற்றப்பத்திரிகையை தமிழில் வழங்க உத்தரவு

(சாய்ந்தமருது நிருபர்)

ஈஸ்டர் ஞாயிறு தினத் தாக்குதல் பயங்கரவாதி சஹ்ரான் ஹாஷிமின் மனைவி அப்துல் காதர் பாத்திமா ஹாதியா மீது கல்முனை குற்றவியல் மேல்நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்டுள்ள வழக்கு விசாரணை எதிர்வரும் மே மாதம் 27ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கு நேற்று (24) கல்முனை குற்றவியல் மேல்நீதிமன்ற நீதிபதி ஜெயராம் ரொக்ஸி முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே அவர் மேற்படி தினத்திற்கு விசாரணையை ஒத்திவைப்பதாக அறிவித்தார்.

சட்ட மா அதிபர் திணைக்களத்தினால் பாத்திமா ஹாதியா மீது சிங்கள மொழியில் தாக்கல்செய்யப்பட்டிருக்கின்ற குற்றப்பத்திரிகையின் தமிழ் மொழிபெயர்ப்பு வழங்கப்பட வேண்டும் என்ற காரணத்தை முன்வைத்தே விசாரணை ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

சஹ்ரான் ஹாஷிம் மற்றும் புலஸ்தினி ஆகியோரின் பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பில் அறிந்திருந்தும் அத்தகவல்களை வெளிப்படுத்தாமல் மறைத்திருந்தமை தொடர்பாக இவர் மீது குற்றம் சுமத்தி, வழங்கப்பட்ட குற்றப்பத்திரிகை தமிழ் மொழியில் வழங்கப்பட வேண்டும் என்று கடந்த ஜனவரி மாதம் 10ஆம் திகதி இடம்பெற்ற அமர்வில் அறிவுறுத்தல் வழங்கப்பட்டே நேற்றைய தினம் வரை இவ்வழக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களைத் தொடர்ந்து சாய்ந்தமருது பொலிவேரியன் நகரில் 2019 ஏப்ரல் 26ஆம் திகதி இடம்பெற்ற சஹ்ரான் கும்பலின் தற்கொலை குண்டுத் தாக்குதலையடுத்து, அங்கிருந்து கைதுசெய்யப்பட்ட பாத்திமா ஹாதியா, கொழும்பு பயங்கரவாத தடுப்புப் பிரிவில் தடுத்துவைக்கப்பட்டுள்ள நிலையில், நேற்றைய தினம் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் கல்முனை நீதிமன்ற வளாகத்திற்கு அழைத்து வரப்பட்டிருந்தார்.

# 2025ஆம் ஆண்டுக்குள் சகலருக்கும் சுத்தமான குடிநீர் வழங்கும் வேலைத்திட்டம் முன்னெடுப்பு

## நீர்வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு





(கிண்ணியா நிருபர்)

2025ஆம் ஆண்டுக்குள் சகலருக்கும் சுத்தமான குடிநீர் வழங்கும் வேலைத்திட்டம் கிரமமான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நீர்வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று (24) இடம்பெற்ற மீளாய்வு கூட்டத்தின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் தெரிவிக்கையில்

அரசாங்கத்தினால் உறுதிமொழி வழங்கப்பட்ட விடயங்கள் நிரந்தரமாக பிழையின்றி உரிய முறையில் மேற்கொள்ளப்படும். எதிர்கால திட்டத்தின் அடிப்படையில் திருகோணமலை மாவட்டத்தில் இதுவரை இணைப்புகளைப் பெறாத பிரதேசத்துக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்படும்.

தொடர்ச்சியாக நீரை மக்களுக்கு வழங்கும் வகையிலான முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டு அவை எதிர்வரும் காலங்களில் திறம்பட நடைமுறைப்படுத்தப்படும் .

கொவிட்-19 நிலைமை காரணமாக நடைமுறைப்படுத்துவதில் கால தாமதம் ஏற்பட்டது. குறிப்பாக, நீர்க்குழாய் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. இதனை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதுடன், அதற்கான உரிய நிலைவரம் தற்போது தோன்றியுள்ளது. திருகோணமலை மாவட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற வேலைத்திட்டம் தொடர்பில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின்போது அதனை தெளிவுபடுத்துவதன் மூலம் மக்களுக்கான பிரச்சினைகளை இதன்மூலமாக ஆராய்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

நீரின் கொள்ளளவை அதிகரித்தல் மூலமே புதிய பல இணைப்புகளை வழங்க முடியும். மேலும் இதற்கான திட்டங்கள் வடிவமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. இதுவரையும் நீரிணைப்புகள் இன்மையால் காணப்படும் கோமரங்கடவெல, பதவிசிரிபுர, மொறவெவ ஆகிய பிரதேசங்கள் தொடர்பில் தவிசாளர்களால் அமைச்சரிடத்தில் சுட்டிக்காட்டினர். இதன்போது பதிலளித்த அமைச்சர் நீரிணைப்பு இல்லாத கஷ்டப்படும் அவ்வாறான பிரதேச மக்களுக்கு குடிநீர்த்தாங்கிகளை கடன் அடிப்படையில் வழங்குவது தொடர்பில் பரிசீலனை செய்யப்படும் என்றார்.

2025ஆம் ஆண்டளவில் 92 வீதமான பிரதேசங்களுக்கு நீர் வழங்கல் சேவைகளை வழங்கமுடியும் எனவும் இதன்போது நீர்வழங்கல் சபையின் கிழக்கு மாகாண பிரதி பொது முகாமையாளர் என்.சுதேசன் தெரிவித்தார்.

குறித்த நிகழ்வில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான கபில நுவன் அத்துகோரள, மேலதிக அரசாங்க அதிபர் பி.ஆர்.ஜயரட்ண, திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சிமன்ற தவிசாளர்கள், நீர் வழங்கல் சபையின் பிரதேச பொறுப்பதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டார்கள்.

# டெங்கு நுளம்பு பரவுவதைக் கட்டுப்படுத்த மட்டு. மாவட்ட செயலகத்தில் சிரமதானம்





(மட்டக்களப்பு நிருபர்)

ஜனாதிபதியின் வழிகாட்டுதலின்கீழ் எமது நாட்டில் டெங்கு நுளம்பு பரவுவதை கட்டுப்படுத்தும் நோக்கில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் நாடளாவிய ரீதியில் இடம்பெற்று வருகின்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரனின் வழிகாட்டுதலின்கீழ் டெங்கு நுளம்பு பரவுவதை கட்டுப்படுத்தும் வேலைத்திட்டம் மாவட்ட செயலகத்தில் நேற்று (24) முன்னெடுக்கப்பட்டது.


நாடளாவிய ரீதியில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் உள்ளூராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளரின் வழிகாட்டுதலின்கீழ் இடம்பெறுவதுடன், டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை கண்டறிந்து அவற்றை துரிதமாக இல்லாதொழிக்கும் நோக்கில் மாவட்ட செயலக வளாகத்தினுள்ளும் டெங்கு ஒழிப்பு சிரமதான செயற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

இச்சிரமதான செயற்பாடுகளை மாதத்தின் இரண்டாம் மற்றும் இறுதி வார வியாழக்கிழமைகளில் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் டெங்கு பரவுவதை கட்டுப்படுத்த முடியும்.

மாவட்ட செயலகத்தின் உத்தியோகத்தர்கள் கிளைகள் ரீதியாக ஒதுக்கப்பட்ட இடங்களில் சிரமதான செயற்பாடுகளை மிகுந்த உற்சாகத்துடன் மேற்கொண்டு ஒத்துழைப்பை வழங்கிவருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

மட்டக்களப்பு மாவட்டம் டெங்குநோய் அபாய வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் நிலையில், இவ்வாறான சிரமதானப் பணிகள் பொது இடங்களில் மேற்கொள்வதன் மூலம் எமது மாவட்டத்திலிருந்து டெங்குநோயினை கட்டுப்படுத்த முடியும்.

# போடியார் புலம்பல்!



**உலகம் எல்லாம் கடன் கேட்கிறோம் எண்டு வெட்கம் இல்லாம மின்சக்தி அமைச்சர் உதயம் கம்மன் வெல சொல்லுறாரு எலுவா..! இப்படி சொல்லுறது உட்டுப்போட்டு அண்ணன் தம்பி சித்தப்பா மகன் எல்லோரும் சேர்ந்து நாடு நாடாக பிச்ச எடுக்கலாமே சிவப்பு துண்ட விரி ச்சுப்போட்டு குந்த வேண்டியதுதானே. பிச்ச எடுக்க ஆக்கள் தேவ எண்டா உதவிக்கு யாழில் டக்லஷ்,அங்கயன், மட்டக்களப்புல பிள்ளையான், வியழேந்திரனையும் துணைக்கு எடுங்க அவங்கதான் சோக்கா கையேந்தி சோரம்போய் உங்கள காப்பாற்றுவாங்க..!**

# கரடியனாறில் சட்டவிரோதமாக மான் ஒன்றை வைத்திருந்த ஒருவருக்கு 14 நாட்கள் விளக்கமறியல்

(கனகராசா சரவணன்)



மட்டு. கரடியானாறு பொலிஸ் பிரிவிலுள்ள பன்குடாவெளி பிரதேசத்திலுள்ள வீடொன்றில் அனுமதியின்றி மான் ஒன்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட ஒருவரை எதிர்வரும் 9ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் நேற்று முன்தினம் (23) இரவு உத்தரவிட்டார்.

இராணுவ புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றிற்கமைய சம்பவதினமான நேற்று முன்தினமிரவு 6.45 மணியளவில் பன்குடா வெளி பிரதேசத்திலுள்ள குறித்த வீட்டை கரடியனாறு பொலிஸாருடன் வனவிலங்கு அதிகாரிகள் முற்றுகையிட்டனர்.

இதன்போது அங்கு மறைத்துவைத்திருந்த சுமார் 5 வயதுடைய மான் ஒன்றை மீட்டதுடன், வீட்டின் உரிமையாளரை கைதுசெய்து அவரை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது அவரை எதிர்வரும் 9ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் மானை வனவிலங்கு திணைக்களத்தில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

# முச்சக்கரவண்டி விபத்தில் பெண்ணொருவர் மரணம்




(மாவடிப்பள்ளி, அட்டாளைச்சேனை மத்திய நிருபர்கள்)

அட்டாளைச்சேனையில் நேற்று (24) இடம்பெற்ற முச்சக்கரவண்டி விபத்தில் பெண் ஒருவர் பலியாகியுள்ளார்.

அக்கரைப்பற்று - கல்முனை பிரதான வீதியில் அட்டாளைச்சேனை மீனோடைக்கட்டுக்கு அருகில் பிற்பகல் 2.30 மணியளவில் இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இத தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கனரக லொறியொன்றுடன் முச்சக்கரவண்டியொன்று மோதியதில் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. இதனால் முச்சக்கரவண்டியில் பயணித்த பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், முச்சக்கரவண்டியின் சாரதி பலத்த காயங்களுக்குள்ளாகி அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்துச் சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# திருகோணமலை சேருநுவர பகுதியில் பஸ் ஒன்று குடைசாய்ந்து விபத்து



**ஆறு பேர் காயங்களுடன் வைத்தியசாலையில்**

(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தின் சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பஸ் ஒன்று குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் ஆறு பேர் காயங்களுடன் கந்தளாய் தள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக சேருநுவர பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ்விபத்துச் சம்பவம் நேற்றுக்காலை (24) இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குருநாகலிலிருந்து திருகோணமலைக்குச் சென்ற சுற்றுலாப் பயணிகள் பஸ்ஸொன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

காயமடைந்த அறுவரில் குருநாகல் மற்றும் நாரம்மல பகுதியைச் சேர்ந்த மூன்று பெண்களும், இரண்டு ஆண்களும், ஒரு சிறுவருமே வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குருநாகலிலிருந்து திருகோணமலை சேருவில விகாரையை பார்வையிட்டுவிட்டு குருநாகலுக்கு திரும்பும்போதே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சேருநுவர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# லெப்பை ஹாஜி சமாதான பூங்கா பெயர்ப்பலகை திறந்துவைப்பு

**பூங்கா வளாகத்தில் கடைத் தொகுதி அமைப்பதற்கான அடிக்கல் நாட்டிவைப்பு**





(மட்டக்களப்பு நிருபர்)

ஓட்டமாவடி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம்.நௌபரின் எண்ணக்கருவிற்கமைய முன்மொழியப்பட்ட லெப்பை ஹாஜி சமாதான பூங்காவிற்கான பெயர்ப்பலகை மற்றும் பூங்கா வளாகத்தில் அமைக்கப்படவுள்ள கடைத்தொகுதிகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று மாலை (24) பாலை நகர் லெப்பை ஹாஜி சமாதான பூங்கா வளாகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம்.நௌபர் கலந்துகொண்டார்.

கௌரவ அதிதிகளாக பிரதேச சபையின் பிரதித் தவிசாளர் ஏ.ஜீ.அமீர், உறுப்பினர்களான எம்.ஐ.ஹாமீத்லெப்பை மௌலவி, எம்.பி.ஜெமிலா, ஏ.எல்.ஜெஸ்மீன் பீவி, வாழைச்சேனை கோறளைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் நபீரா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

விசேட அதிதிகளாக கிழக்கு பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.ரீ.றிஸ்வி (மஜீதி), ஓய்வுபெற்ற முன்னாள் கோட்டக்கல்வி அதிகாரி எம்.ஏ.காதர், ஹிஜ்ரா வித்தியாலயத்தின் அதிபர் எம்.ஏ.ஸாபிர், முன்னாள் இராஜாங்க அமைச்சின் இணைப்புச் செயலாளர் எச்.எம்.கலீல் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

பிரதேச சபையின் செயலாளர் எஸ்.எம்.சிஹாப்தீனின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்நிகழ்வில் எமது பிரதேசத்தின் வளர்ச்சியிலும், இனங்களுக்கிடையிலான நல்லுறவைக் கட்டியெழுப்புவதிலும் அயராது உழைத்துவந்த கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளராக கடமையாற்றி பல நல்ல நினைவுகளை எம் மத்தியில் விட்டுச்சென்ற மர்ஹூம் லெப்பை ஹாஜியார் நினைவாக “லெப்பை ஹாஜி சமாதான பூங்கா” எனும் பெயர் சூட்டப்பட்டு அப்பெயர்ப்பலகை மர்ஹூம் லெவ்பை ஹாஜியாரின் புதல்வர்கள், குடும்பத்தவர்களின் பங்குபற்றுதலுடன் திரைநீக்கம் செய்யப்பட்டது.

இதற்கான வேலைத்திட்டங்கள் உலக வங்கியின் அனுசரணையுடன் LDSP திட்டத்தின்கீழ் கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர்களின் ஆதரவுடன் தவிசாளர் ஏ.எம்.நௌபரின் தலைமையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஸ்ரீ சித்தாண்டி சித்திரவேலாயுதர் சுவாமி கோயில் புனரமைப்புக்கு ஒரு இலட்சம் ரூபா நிதியுதவி

(வாழைச்சேனை நிருபர்)

கச்சேரிக்கோட்டை கட்டுவதற்கு 600 தேன்குடம் வழங்கிய சித்தாண்டிக்குடி மரபுவழியாக மீண்டும் புதிய கச்சேரி ஆலயத்திற்கு நிதி வழங்கிய வன்னிமை மற்றும் வண்ணக்கார் வரலாற்றுச் சிறப்புபெற்ற ஸ்ரீ சித்தாண்டி சித்திரவேலாயுதர் சுவாமி கோவில் வன்னிமை மற்றும் வண்ணக்குமார் மட்டக்களப்பு மாவட்ட திராய்மடு புதிய கச்சேரியில் நிர்மாணிக்கப்பட்டுவரும் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தின் திருப்பணி நற்காரியத்திற்கான நிதியுதவி நேற்று (24) வழங்கப்பட்டது.

ஸ்ரீ சித்தாண்டி சித்திர வேலாயுதர் சுவாமி கோவிலின் வன்னிமை மற்றும் வண்ணக்குமாருக்கு மாவட்ட அரசாங்க அதிபரினால் 2022.01.03ஆம் திகதியில் குறித்த விடயம் தொடர்பாக கோரிக்கை விடுத்தமைக்கமைய நேற்று ஆலயத்தின் வன்னிமை மற்றும் வண்ணக்குமார், மாவட்ட உதவி அரசாங்க அதிபர் யு.நவேஸ்வரன் மற்றும் மாவட்ட கலாசார உத்தியோகத்தர் மு.குணநாயகம் ஆகியோரிடம் ஆலயத்தின் திருப்பணி நிறைவுற ரூபா ஒரு இலட்சம் ஸ்ரீ சித்தாண்டி சித்திர வேலாயுதர் சுவாமி கோவிலின் நிதியிலிருந்து மாவட்ட செயலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டது.

சேர, சோழ, பாண்டிய மன்னனின் வழிவந்த காராளர் குலத்தவர் தணியுண்ணாப் பூபால கோத்திர வன்னியனார்கள் கௌரவ முடிசூடிய வன்னிமையான நல்லதம்பி (வன்னிமை), போர்த்துக்கீசத் தளபதியான கொண்ரைண்டிசா (கி.பி. 1627) பந்தாறுமூலை (வந்தாறுமூலை) சிற்றாண்டிக்குடியிலிருந்து கோட்டையொன்றைக் கட்டுவதற்கு அறுநூறு (600) குடம் தேனை வழங்கினர். மூலம்: திரு கன்னங்கர எழுதப்பட்ட மட்டக்களப்பு மான்மியம் எனும் நூல்.

அதேவழிவந்த கௌரவ முடிசூடிய வன்னிமையான உயர் செல்லப்போடி சிவவடிவேல் பாலச்சந்திரன் வன்னிமை புதிய கச்சேரியில் அமையப்பெறவுள்ள ஆலயத்திற்கான திருப்பணி நிறைவுக்கான நற்காரியத்தை மரபுவழியில் கைகொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனா தொற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் செயற்பாட்டில் கிழக்கு மாகாண சுகாதாரத்துறை முன்னிலை

## சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி முரளிதன் தெரிவிப்பு





கொவிட்-19 தொற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்கில் கிழக்கு மாகாண சுகாதாரத்துறையினர் பாரிய பங்களிப்புகளை இரவு பகல் பாராது வழங்கி செயற்பட்டு வருகின்றனர். இதனால் ஏனைய மாகாணங்களைவிட கிழக்கு மாகாணம் சிறந்து விளங்கியதாக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதன் தெரிவித்தார்.

மாகாணப் பணிப்பாளர் வைத்தியர் ஏ.ஆர்.எம்.தௌபீக் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடல் நேற்று முன்தினம் (23) திருகோணமலை மாகாணப் பணிமனையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கொவிட் தடுப்பு மருந்துகளை பொதுமக்களுக்கு வழங்கும் செயற்பாட்டிலும் எமது மாகாணமே சிறந்து விளங்குவதாகவும், ஏனைய நாடுகளைவிட எமது நாட்டிலுள்ள மக்கள் இத்தடுப்பு மருந்துகளை பெற்றுக்கொள்வதில் அதிக கவனம் செலுத்தி வருகின்றார்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மீண்டும் கொவிட் தொற்றுப் பரம்பல் எமது நாட்டில் அதிகமாகி வருவதை நாம் அறிவோம். இதை முற்றுமுழுதாக ஒழிப்பதற்கான செயற்றிட்டங்களையும், அதற்கான வழிவகைகளையும் முன்னெடுத்துச் செல்வதன் மூலம், ஆட்கொல்லி நோயான கொரோனா நோயை எமது மாகாணத்தில் மாத்திரமல்லாமல் எமது நாட்டிலிருந்து விரட்டியடிக்க ஒருமித்து செயற்படுவோம் - என்றார்.

இக்கலந்துரையாடலில் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிமனையில் நிலவுகின்ற குறைபாடுகள் குறித்தும் அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதன் கேட்டறிந்துகொண்டார். இதில் வைத்தியர்கள், கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர், சுகாதார சேவைகள் பணிமனையின் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டனர்.

# திருமலையில் கைத்தொலைபேசியால் வந்தவினை: இருவர் தற்கொலை முயற்சி; ஒருவர் உயிரிழப்பு

(பதுர்தீன் சியானா)

கைத்தொலைபேசி பாவிக்க வேண்டாமென பெற்றோர் எச்சரித்ததையடுத்து இரு யுவதிகள் தற்கொலைக்கு முயன்ற இரு சம்பவங்கள் திருகோணமலையில் நேற்று முன்தினம் (23) பதிவாகியுள்ளது.

திருகோணமலை, உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆனந்தபுரி பகுதியில் 17 வயதுடைய யுவதியொருவர் கையடக்கத் தொலைபேசியை பாவித்தபோது கையடக்கத் தொலைபேசி தேவை இல்லை என உறவினர் ஒருவர் கூறியதையடுத்து, அந்த யுவதி மனவுளைச்சல் காரணமாக தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்ட யுவதி திருகோணமலை ஆனந்தபுரி முதலாவது ஒழுங்கையில் வசித்துவரும் 17 வயதுடைய என்.கஜனி எனவும் தெரிய வருகின்றது.

உயிரிழந்த யுவதியின் சடலம் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், இன்று பிரேத பரிசோதனை முடிவடைந்தவுடன் உறவினர்களிடம் ஒப்படைக்கவுள்ளதாக உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, ரொட்டவெவ கிராமத்தைச் சேர்ந்த க.பொ.த. சாதாரண தரத்தில் பரீட்சை எழுதவுள்ள மாணவி ஒருவரின் தந்தை, பரீட்சைக்கு படிக்குமாறும், கையடக்கத் தொலைபேசியில் படம் பார்க்க வேண்டாம் எனவும் கூறிவிட்டு, அவர் வீட்டை விட்டு வெளியே சென்றபோது அந்த யுவதி மாத்திரைகளை உட்கொண்டு மயக்கமுற்ற நிலையில் மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து குறித்த யுவதி மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலையின் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

# ஈழத்துக் கவிதை நூல்கள் சென்னையில் வெளியீடு




(மருதமுனை மேலதிக நிருபர்)

ஈழத்து கவிதாயினிகளான ஷிபானா அஸீமின் - காதலென்பது வேறொன்றுமில்லை, ரிஸ்ஹா முக்தாரின் - ஆதியில் ஒரு காதல் இருந்தது எனும் கவிதை நூல்கள் இரண்டு சென்னை புத்தகக் கண்காட்சியில் எமரால்ட் பதிப்பகத்தின் ஊடாக கவிஞர் அப்துல் ஹமீட் ஷேக் முஹம்மத்தால் (மனுஷ்ய புத்திரன்) நேற்று முன்தினம் (23ஆம் திகதி) வெளியிட்டுவைக்கப்பட்டது.

நக்கீரன் பத்திரிகையின் துணை ஆசிரியர் டி.எஸ்.கௌதமனின் அணிந்துரையுடன் வெளியான இக்கவிதை தொகுதிகளின் முதற்பிரதிகளை உமா மகேஸ்வரி, குமரன், அர்ஷா, வினோதினி போன்றோர் பெற்றுக்கொண்டார்கள்.

இக்கவிதைத் தொகுதிகளில் "காதலென்பது வேறொன்றுமில்லை" என்ற கவிதைத் தொகுதி, கிழக்கிலங்கையின் அம்பாறை மாவட்டத்தின் மருதமுனை கிராமத்தை பிறப்பிடமாகக்கொண்ட நூலாசிரியர் கவிதாயினி ஷிபானா அஸீம் தந்த கன்னிக் கவிதை நூலாகும்.

மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியின் (தேசிய பாடசாலை) பழைய மாணவியான இவர், தற்போது நூலகம் ஒன்றில் பணிபுரிந்து வருகிறார்.

தஞ்ஞாவூர் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் மாணவியுமான இவர் முகநூலில் மயிலிறகு மனசு எனும் புனைப்பெயரில் கவிதைகளை எழுதிவருகிறார்.

# மோட்டார்சைக்கிள் விபத்தில் ஒருவர் பலி

(திருகோணமலை நிருபர்)

திருகோணமலை - கந்தளாய் பிரதான வீதி 96ஆம் கட்டை சந்தியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த பெண்ணொருவர் நேற்று (24) உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்து நேற்று முன்தினம் (23) இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் தம்பலகாமம் - கல்மெடியாவ பகுதியைச் சேர்ந்த இந்திராணி சுவர்ணலதா (30 வயது) என்பவரே உயிரிழந்துள்ளார்.

96ஆம் கட்டை சந்தியில் மோட்டார்சைக்கிள் இரண்டும் நேருக்கு நேர் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.


இவ்விபத்தில் தம்பலகாமம், கல்மெடியாவ பகுதியைச் சேர்ந்த இந்திராணி சுவர்ணலதா (30 வயது) படுகாயமடைந்த நிலையில், அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை மற்றைய மோட்டார்சைக்கிளில் பயணித்த முள்ளிப்பொத்தானை - யூனிட் 07 பகுதியைச் சேர்ந்த ஏ.எம்.சியாத் (22வயது) காயமடைந்த நிலையில், திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றார்.

இவ்விபத்து தொடர்பில் தம்பலகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஐஸ் போதைப்பொருளுடன் மட்டக்களப்பில் மூவர் கைது





(மட்டக்களப்பு நிருபர்கள்)

வரக்காபொல பிரதேசத்திலிருந்து மட்டக்களப்புக்கு கனரக வாகனமொன்றில் 45 கிராம் ஐஸ் போதைப்பொருளை கடத்திச்சென்ற 3 பேரை மட்டக்களப்பு, வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள நாவலடி பிரதேசத்தில் நேற்று முன்தினம் (23) இரவு கைதுசெய்துள்ளதாக மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி.பண்டார தெரிவித்தார்.

இராணுவப் புலனாய்வு பிரிவுக்குக் கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து சம்பவ தினமான நேற்று இரவு 11 மணியளவில் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி.பண்டார தலைமையிலான பொலிஸார் பொலன்னறுவை - மட்டக்களப்பு பிரதான வீதி நாவலடியில் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இதன்போது மட்டக்களப்பை நோக்கி இரும்பு அலுமாரிகளை ஏற்றிவந்த கனரக வாகனத்தை நிறுத்தி சோதனையிட்டபோது அதிலிருந்து 45 கிராம் ஐஸ் போதைப்பொருளை மீட்டதுடன், 3 பேரை கைதுசெய்து வாழைச்சேனை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவர்கள் வரக்காபொல பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் இரும்பு அலுமாரி விற்பனைக்காக மட்டக்களப்புக்கு கனரக வாகனத்தில் எடுத்துவரும்போது அதில் ஐஸ் போதைப்பொருளையும் வியாபாரத்துக்காக கடத்திவந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதுடன், இவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# 'தாதிய மாணவர்களுக்கான களப் பிரயோகம்' பயிற்சி நூல் வெளியீட்டு விழா அம்பாறையில்




(நிந்தவூர் நிருபர்)

அம்பாறை தாதியர் பயிற்சிக் கல்லூரியின் தாதியர் போதனாசிரியர் சாய்ந்தமருது எம்.சி.கமருன் றிலா எழுதிய 'தாதிய மாணவர்களுக்கான களப் பிரயோகம்' பயிற்சி நூல் வெளியீட்டு விழா அண்மையில் அம்பாறை தாதியர் பயிற்சி கல்லூரியில் இடம்பெற்றது.

தாதியர் மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதான இந்நூல் வெளியீட்டு விழாவிற்கு அம்பாறை பொது வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் உபுல் விஜயநாயக்க, சுகாதார அமைச்சின் தாதியர் கல்விப் பணிப்பாளர் திருமதி அசோகா அபேநாயக்க, மட்டக்களப்பு தாதியர் பயிற்சிக் கல்லூரி அதிபர், அம்பாறை தாதியர் பயிற்சிக் கல்லூரி அதிபர், அம்பாறை பொது வைத்தியசாலை பிரதான தாதி உத்தியோத்தர் மற்றும் அம்பாறை தாதியர் பயிற்சிக் கல்லூரி தாதிய மாணவர்களும் கலந்துகொண்டனர்.

# மகளிர் தினத்தினை முன்னிட்டு மூதூரில் பெண் எழுத்தாளர்கள் கௌரவிப்பு



(மூதூர் நிருபர்)

மகளிர் தினத்தினை முன்னிட்டு பிரதேச செயலகமும் பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் இணைந்து நடத்தவிருக்கின்ற மூதூருக்கான பெண் எழுத்தாளர்களை கௌரவிக்கும் நிகழ்வின் முன்னோடி ஒன்றுகூடல் நிகழ்வு மூதூர் பிரதேச செயலாளர் தலைமையில் நேற்று முன்தினம் (23) இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு வளவாளர்களாக மூதூர் பிரதேச செயலாளர் எம்.பீ.எம்.முபாறக் மற்றும் கவிதாயினி சம்பூர் திருமதி சுஜந்தினி யுவராஜா ஆகியோர் பங்குபற்றினர்.

இந்நிகழ்வுக்கான ஒருங்கிணைப்பினை மூதூர் கலாசார உத்தியோகத்தர்கள், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இணைந்து மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# பொத்துவில் ஆதார வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்கிவைப்பு





(பொத்துவில் நிருபர்)

பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர்.றஜாப், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க அவ்வைத்தியசாலைக்கு ஒருதொகுதி மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.


மேற்படி மருத்துவ உபகரணங்களை பொத்துவில் ஆதார வைத்தியசாலைக்கு உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (23) அவ்வைத்தியசாலையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் றஜாப்பிடம் குறித்த உபகரணங்களை கையளித்தார்.

இதன்போது கிழக்கு மாகாண சுகாதார திணைக்களத்தின் மாகாணப் பொறியியலாளர் ஏ.எம்.ஹக்கீம், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் திட்டமிடல் பிரிவு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சீ.எம்.மாஹிர், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் இடம்பெறும் கட்டுமானப் பணிகளையும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் மாகாணப் பொறியியலாளர் இதன்போது பார்வையிட்டனர்.

# ஒருங்கிணைந்த பண்ணை மற்றும் சேதனப் பசளை உற்பத்திக்கான மையம் மட்டக்களப்பில் திறந்துவைப்பு




(மட்டக்களப்பு நிருபர்)

சுபீட்சத்தின் நோக்கு தேசிய வேலைத்திட்டத் திற்கமைய இயற்கை விவசாய கலாசாரத்தை நடைமுறைப்படுத்தும் வகையில் விவசாய விரிவாக்கல் பிரிவு சேதனப் பசளை விவசாயத்தை ஊக்குவிக்கும் திட்டத்தின்கீழ் சேதனப் பசளை உற்பத்திக்கான ஊக்குவிப்புத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது .

அந்தவகையில் மட்டக்களப்பு கல்லடி விவசாய விரிவாக்கல் பிரிவு போதனாசிரியர் வேணி திருநவனின் ஒழுங்கமைப்பில் மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் விவசாய போதனாசிரியர் பிரிவிலுள்ள ஜி.பிரியவரதனின் பண்ணையில் ஒருங்கிணைந்த பண்ணை மற்றும் சேதனப் பசளை உற்பத்திக்கான மையம் நேற்று முன்தினம் (23) திறந்துவைக்கப்பட்டது.

மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வன்னியசிங்கம் வாசுதேவன் தலைமையில் நடைபெற்ற ஒருங்கிணைந்த பண்ணை மற்றும் சேதனைப் பசளை உற்பத்திக்கான மையம் ஆரம்பிக்கும் நிகழ்வில் மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் எ.சுதர்சன், மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் வைத்திய அதிகாரி எஸ்.டி.எம்.மாஹிர், மட்டக்களப்பு 4ஆவது கெமுனு படைப்பிரிவு இராணுவ அதிகாரி மேஜர் நோமல் பெரேரா, அரச முதலீட்டு வங்கியின் பிரதி முகாமையாளர் எஸ்.வேனுகீதன், சத்துருக்கொண்டான் விவசாய போதனாசிரியர் பிரிவு உத்தியோகத்தர்கள், பண்ணையாளர்கள் எனப் பலரும் இதன்போது கலந்துகொண்டிருந்தனர்.

ஆரம்பித்துவைக்கப்பட்ட ஒருங்கிணைந்த பண்ணை வளாகத்தில் பயன்தரும் மரக்கன்றுகள் அதிதிகளினால் நாட்டிவைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# நிந்தவூர் பிரதேச சபையின்கீழ் ஆரம்பிக்கப்பட்ட அல் - ஹிக்மா பாலர் பாடசாலை திறந்துவைப்பு





(நூருல் ஹுதா உமர்)

கல்வி அபிவிருத்தியின் முன்னோடியாக ஆரம்பக்கல்வியினை இலவசமாக வழங்கும் நோக்கில், நிந்தவூர் பிரதேச சபையின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட அல்- ஹிக்மா பாலர் பாடசாலை கட்டிடம் திறந்துவைக்கப்பட்டது.

நிந்தவூர் நெல்லித்தீவு பிரதேச மக்களின் மிக நீண்ட நாள் கோரிக்கையாகவிருந்த நிரந்தர பாலர் பாடசாலை கட்டிடத் தேவைக்கு தீர்வினை பெற்றுக் கொடுக்கும் வகையில், குறித்த பாலர் பாடசாலை கட்டிடம் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

இப்பிரதேச மக்களின் மிக நீண்ட நாள் கோரிக்கையினை கவனத்தில் கொண்டு, நிந்தவூர் பிரதேச சபையின் உறுப்பினர்களின் தீர்மானத்தின் பிரகாரம் உள்ளூராட்சி மன்றங்களின் உள்ளூர் மேம்பாட்டு (Local Development Support Project-LDSP) திட்டத்தினூடாக நிந்தவூர் பிரதேசத்தின் ஆரம்பக் கல்வியை மேம்படுத்துவதனை அடிப்படையாகக் கொண்டு முதற்கட்டமாக 68 இலட்சம் ரூபா நிதி மூலம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நிந்தவூர் பிரதேச சபைத் தவிசாளர் எம்.ஏ.எம். தாஹிர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என். மணிவண்ணனும் கௌரவ அதிதிகளாக அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.எல்.எம்.கமல் நெத்மினி, நிந்தவூர் பிரதேச செயலாளர் ஏ.எம். அப்துல் லத்தீப் ஆகியோரும், விசேட அதிதிகளாக நிந்தவூர் பிரதேச சபையின் உதவி தவிசாளர் வை.எல்.சுலைமாலெப்பை, கல்முனை கல்வி மாவட்ட செயற்றிட்ட பொறியியலாளர் ஏ.எம். ஸஹீர், துறைசார் அதிதிகளாக கல்முனை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் யூ.எல்.எம். ஸாஜித், கல்முனை வலய உதவிக் கல்வி பணிப்பாளர் எம்.ஏ.எம். றசீன், நிந்தவூர் கோட்டக் கல்வி அதிகாரி எம்.ஷரீபுதீன், நிந்தவூர் பிரதேச சபை முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், பிரதேச சபை செயலாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் உள்ளிட்ட பல பிரமுகர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நிந்தவூர் அட்டப்பள்ளம் பிரதேசத்தில் கடலரிப்பு

## மீனவர்கள் – பொதுமக்கள் பெரும் பாதிப்பு





(நிந்தவூர் நிருபர்)

அம்பாறை மாவட்டத்தின் கிழக்கு கடல் பரப்பில் அண்மைக்காலமாக அடிக்கடி ஏற்படும் கடல் கொந்தளிப்பால் பாரிய அலைகள் கரையை நோக்கி வருவதனால் தினசரி நிந்தவூர், அட்டப்பள்ளம் கடற்கரை பிரதேசம் காவுகொள்ளப்படுவதனால் மீனவர்களும் சுற்றயல் பிரதேச குடியிருப்பாளர்களும் சொல்லொணா துயரங்களுக்குள்ளாகி வருகின்றனர்.

கடற்கரைப் பிரதேசத்திலுள்ள பயன்தரு தென்னைமரங்கள் கடலரிப்பினால் தரையில் வீழ்ந்து காணப்படுவதுடன், அவற்றின் வேர்களும் தரைக்கு மேலாக வெளிவந்தும் உள்ளன. இதனால் தென்னந்தோட்டங்களை பராமரித்து வருவோர் பெரும் நஷ்டத்தை எதிர்நோக்கி வருவதுடன், மீனவர்கள் தாம் ஓய்வுவெடுப்பதற்கும், தமது தோணி, படகு, மீன்பிடி வலை என்பவற்றை திருத்துவதற்காக பயன்படுத்தும் இயற்கையான நிழலும் இல்லாமல்போயுள்ளதாக விவசாயிகள் கவலைத் தெரிவித்தனர்.

நிந்தவூர், அட்டப்பள்ளம் கடற்கரை பிரதேச மீனவர்கள் தமது தோணி மற்றும் படகுகளையும் நிறுத்திவைப்பதற்கு தற்போது போதிய இடவசதியும், தமது மீன்பிடி உபகரணங்களையும் பாதுகாத்து வைப்பதற்கான மீன்வாடிகளும் இல்லாமலிருப்பது தமக்கு பெரும் கவலையளிப்பதாகவும் இந்த நிலைமை ஏற்படுவதற்கு ஒலுவிலில் அமைக்கப்பட்டுள்ள மீன்பிடித் துறைமுகமும் ஒரு காரணமாகும் என பிரதேச மீனவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை, நிந்தவூர் பிரதேச சபையினால் பொதுமக்கள் ஓய்வெடுப்பதற்காக கடற்கரையோர தென்னந்தோப்பு பிரதேசங்களில் கொங்கிரீட் கதிரைகள் போடப்பட்டுள்ளதுடன், கடலரிப்பை தடுப்பதற்கான தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறாக தொடர்ச்சியாக கடலலையினால் நிந்தவூர் மற்றும் அட்டப்பள்ளம் கடற்கரைப் பிரதேசம் காவுகொள்ளப்பட்டு போகுமேயானால் எதிர்காலத்தில் இப்பிரதேசத்தில் கடற்கரையொன்று முழுமையாக இல்லாமல்போனாலும் போகலாம் என்ற அச்சம் இப்பிரதேச மக்களிடையே அதிகரித்துள்ளது.

# கல்முனை தெற்கில் கொரோனா தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுப்பு





(மருதமுனை நிருபர்)

கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட மருதமுனைப் பிரதேசத்தில் கொரோனா தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளை இராணுவத்தினர் முன்னெடுத்து வருகின்றனர்.

மருதமுனை மஸ்ஜிதுன் நூர் ஜூம்ஆப் பள்ளிவாசல் அலுவலகத்தில் கடந்த சில தினங்களாக இந்த தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளை இராணுவத்தினர் முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை மருதமுனை பிரதேச வைத்தியசாலையிலும் இந்த தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எல்.எம்.மிஹ்ழார் தெரிவித்தார்.

மேலும், கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திலும் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.அர்.எம்.அஸ்மி தெரிவித்தார்.

# மூதூரில் போதைப்பொருளுடன் ஒருவர் கைது

(மூதூர் நிருபர்)

மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆலிம்சேனை பகுதியில் வைத்து ஹெரோயின் அல்லது மோபின் வகையாக இருக்குமென சந்தேகிக்கும் போதைப்பொருளுடன் குடும்பஸ்தர் ஒருவரை மூதூர் பொலிஸார் நேற்று முன்தினம் (23) கைதுசெய்தனர்.

மூதூர் நீதிவான் நீதிமன்றில் B அறிக்கை மூலம் ஆஜர்படுத்தியதையடுத்து, மார்ச் 7ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

குறித்த சந்தேக நபரிடமிருந்து 05 கிராம் 100 மில்லிகிராம் நிறையுடைய போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

மூதூர் ஆலிம்சேனை பகுதியைச் சேர்ந்த 06 பிள்ளைகளின் தந்தையான 34 வயதுடைய நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். குறித்த நபர் போதைப்பொருள் வைத்திருப்பதாக மூதூர் சிறு குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே இக்கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் கணக்காளராக தஸ்தீக் கடமைகளை பொறுப்பேற்பு



(சாய்ந்தமருது நிருபர்)

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, காணி அபிவிருத்தி, திறன், மனித வள அபிவிருத்தி, மகளிர் விவகார, நீர் வழங்கல் அமைச்சின் பிரதம கணக்காளராக நியமிக்கப்பட்டுள்ள அப்துல் ஹமீட் தஸ்தீக், நேற்று (24) தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

திருகோணமலையில் அமைந்துள்ள அமைச்சின் அலுவலகத்தில் அமைச்சின் செயலாளர் ஏ.எச்.எம்.அன்சார் முன்னிலையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அதிகாரிகள் பலரும் பங்கேற்றிருந்தனர்.

மருதமுனையை சேர்ந்த இவர் கடந்த சில வருடங்களாக கல்முனை மாநகர சபையின் கணக்காளராக கடமையாற்றி வந்த நிலையில், இப்புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த 2008ஆம் ஆண்டு இலங்கை கணக்காளர் சேவையில் இணைந்து கொண்ட இவர், பல அரச நிறுவனங்களில் கணக்காளராக சேவையாற்றி, சுமார் 14 வருட அனுபவங்களை கொண்டிருக்கிறார்.

கடந்த 2019ஆம் ஆண்டு தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் வர்த்தக நிர்வாகத்துறையில் முதுமாணிப் பட்டத்தை பெற்றுக்கொண்டதையடுத்து இவர் கணக்காளர் சேவை தரம் ஒன்றுக்கு நியமிக்கப்பட்டதுடன், பிரதம கணக்காளர் பதவிக்கு தகுதி பெற்றிருந்தார்.

அத்துடன் நிதி முகாமைத்துவம் தொடர்பாக மலேசியா, சிங்கப்பூர், சீனா ஆகிய நாடுகளில் இடம்பெற்ற பயிற்சி நெறிகளிலும் கணக்காளர் தஸ்தீக் பங்குபற்றி, தேர்ச்சியடைந்துள்ளார்.

இவரது திறமை, விவேகம் மற்றும் அனுபவங்களை கவனத்தில்கொண்டு, கடந்த 2016ஆம் ஆண்டு தொடக்கம் மாகாண பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகத்தில் பதில் கணக்காளராகவும் நியமிக்கப்பட்டு, கடமையாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# அபுல் கலாம் பழீல் மௌலானாவின் 'வாழ்வும் பணியும்' நூல் பற்றிய பார்வை

(இன்று மர்ஹூம் அபுல் கலாம் பழீல் மௌலானாவின் 09ஆவது வருட நினைவு தினத்தையொட்டி பிரசுரிக்கப்படுகிறது)

இன்று காணப்படும் பல்வேறு வகையான நூல்களின் மத்தியில் எந்த நூலை வாசிப்பது? எதற்கு முன்னுரிமை வழங்குவது போன்ற தேர்வுப் பிரச்சினை வாசகர்கள் மத்தியில் காணப்படுகின்றபோது சுயசரிதை நூல்களை முன்னிலைப்படுத்திக் கொள்கிறேன்.

ஒருவரின் வாழ்க்கை வரலாற்றை அவரோ அவரைப் பின்பற்றி வேறொரு நபரோ எழுதுவார். இந்த வகையில் மர்ஹூம் அபுல் கலாம் பழீல் மௌலானாவின் 'வாழ்வும் பணியும்' என்ற இந்நூலானது ஒரு கூட்டு முயற்சியின் பிரதிபலிப்பாகும். இந்நூலை சட்டத்தரணி றுடானி ஸாஹிர் தொகுத்தளித்திருக்கிறார்.

அபுல் கலாம் பழீல் மௌலானா மருதமுனையின் முதுசங்களில் ஒருவர், சிறந்த கல்விமான், சமூக சமயப் பற்றாளர், அரசியல் ஈடுபாடுடையவர் மற்றும் சிறந்த கவிஞர் என பன்முக ஆளுமையாளராக திகழ்ந்திருப்பது மருதமுனை மண்ணுக்கு கிடைத்த வரப்பிரசாதமாகும்.

அபுல் கலாம் பழீல் மௌலானா வபாத்துக்கு பின்னர் சுமார் எட்டு வருட அயராத முயற்சியினால் இது தொகுக்கப்பட்டுள்ளதென சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்-ஷெய்க், எப்.எம்.அஹ்மதுல் அன்சார் மௌலானா (நளீமி) வழங்கிய பதிப்புரையில் அறியமுடிகிறது. மேலும் பழீல் மௌலானா நாட்குறிப்பு எழுதுபவராக இருந்திருக்கின்றமையே இந்நூல் தொகுப்புக்கு அச்சாணியாய் அமைந்திருக்கின்றது.

முன் அட்டைப்படம் மூன்று பிரதான விடயங்களைக் குறிப்பிடுகின்றது. பழீல் மௌலானா தெளிவான நிழற்பிரதிக்குப் பின்னால் 19.04.1975ஆம் ஆண்டு நற்பிட்டிமுனை அல்-அக்ஷா மகா வித்தியாலயத்தின் பெயர்ப்பலகையினைத் திறந்து வைக்கும் காட்சியும் முன்னட்டைப்பட அடிப்பகுதியில் மௌலானா கலந்து சிறப்பித்த விழாக்களின் புகைப்படங்களும் காட்சி தருகின்றன.

மௌலானாவின் நாமம் பொன் எழுத்துக்களால் பதியப்பட வேண்டியவை என்கிறார். பின்னட்டையிலிருந்து முன்னாள் அமைச்சர் மர்ஹூம் ஏ.ஆர். மன்சூர் இதனைத் தொடர்ந்து, முதுபெரும் கல்விமானான அருட் சகோதரர் கலாநிதி எஸ்.ஏ.ஐ.மத்தியூ குறிப்பிடுகையில், கல்வி அதிகாரிகள் மத்தியில் அன்று அவர் இலக்கியமாக வாழ்ந்து காட்டியவர் இன்றைய கல்வியதிகாரிகளுக்கு அவர் ஓர் இலக்கணம், அவர் ஒரு தொல்காப்பியம் என்கிறார்.

இந்த வரிகள் ஆழம் நிறைந்தவை. இலக்கியம் என்பது அழகியல், அதுவொரு ரசனை. உயிருடன் இருக்கும்போது தனது வாழ்க்கையை அழகாக வாழ்ந்து காட்டியவர். ஒரு கல்வி அதிகாரி எவ்வாறிருக்க வேண்டுமென விருப்போடு ஒரு ரசனையாய் தன் பணியைச் செய்தவர். அதனால் தான் அருட்சகோதரர் எஸ்.ஏ.ஐ.மத்தியு கல்வி அதிகாரிகளின் மத்தியில் அன்று அவர் இலக்கியமாக வாழ்ந்து காட்டியவர் என்கிறார். இவருடைய வபாத்தின் பின்நாளில் பழீல் மௌலானா இன்றைய கல்வி அதிகாரிகளுக்கு ஓர் இலக்கணம், தொல்காப்பியம் என்கிறார். இலக்கணம் மாறாத் தன்மையுடையது. அவரின் வாழ்க்கை நடைமுறைகளை மாற்றாது வாழவேண்டுமென இன்றைய கல்வி அதிகாரிகளை வலியுறுத்துகின்றார்.

நூலின் ஆரம்பப் பகுதிகளில் ஆசிச்செய்தி, விசேட செய்தி, வாழ்த்துச் செய்தி, ஆசியுரை, பதிப்புரை, அணிந்துரை மற்றும் முகவுரை போன்ற பல்வேறு உரைகள் காணப்படுகின்றன. இந்த அனைத்து உரைகளிலும் பழீல் மௌலானா சிறந்த கல்விமான், சமயப்பற்றாளர், ஈடுபாட்டாளர், சிறந்த கவிஞன் என்ற விடயங்களையே முதன்மைப்படுத்தி வரிகளைக் கோர்த்துள்ளார்.

இதில் குறிப்பிடப்படாதவொரு விடயத்தினை முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் அஷ்-ஷெய்க் ஏ.பீ.எம்.அஷ்ரப் தனது




ஆசிச் செய்தியில் எனது தந்தையும் பழீல் மௌலானாவும் சிறந்த நண்பர்கள். இவர்களின் நட்பின் அடையாளமாக இவர்களுடைய பிள்ளைகளுக்கு ஒரே பெயரைச் சூட்டி மகிழ்ந்திருக்கின்றார்கள் என நட்புக்கு இலக்கணம் வகுத்துள்ளார்.

இதன் உள்ளடக்கமாக 04 அத்தியாயங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இதனைத் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டுகளிலும் நடைபெற்ற விடயங்களின் தொகுப்பாக கால அட்டவணையொன்றும் இடம்பெறுகின்றது. பூர்வீகமும் குடும்பப் பின்னணியினையும் ஆசிரியை பெனாசிர் ஸாஹிர் ஒரே பார்வையில் ஒரு மரவரிப்படத்தினூடாக விளக்கியிருப்பது சிறப்பு. இன்று நம்மில் பலருக்கு நமது பூர்வீகம் தெரியாதிருக்கின்றது.

அந்த வகையில் பழீல் மௌலானாவின், பூர்வீகத்தினை வாசித்தபோது 1865ஆம் ஆண்டளவில் தென் அரேபிய நாடான யெமனின் ஹழ்ரமௌத் பள்ளத்தாக்கிலிருந்து செய்யித் உத்மான் அல்-அஹ்தல், அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள மருதமுனை கிராமத்துக்கு வருகைதந்து யாகுவக் குடியைச் சேர்ந்த ஷரீபா உம்மா எனும் பெண்ணைத் திருமணம் செய்து 1869இல் ஐதுரூஸ் மௌலானாவினைப் பெற்றெடுத்தார். ஐதுரூஸ் மௌலானாவின் பின்னணியில் ஒருவரே பழீல் மௌலானா என நீண்டதொரு பூர்வீகத்தினை மரவரிப்படம் மூலமாகவும், நிழற்பிரதிகள் மூலமாகவும் பெனாசீர் ஸாஹிர் விளக்கியிருப்பது ஆழமான அம்சமாகும்.


ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா தனக்கு தரம் - 01 முதல் தரம் - 09 வரை கல்வி புகட்டிய ஆசிரியர்களை ஞாபகத்தில் வைத்திருந்தார்களென விரிவுரையாளர் ஏ.ஜே.எல்.வஸீல் குறிப்பிடுகின்றார். மேலும், மௌலானா மருதமுனையின் முதலாவது பயிற்றப்பட்ட தலைமை ஆசிரியரும், பயிற்றப்பட்ட ஆசிரியருமென்ற இரட்டை அந்தஸ்துக்குரியவர் என்கிறார். அதுமட்டுமன்றி, மருதமுனையின் முதலாவது ஆங்கில அதிபரும் எனக் கூறுகின்ற விரிவுரையாளர் வஸீல் 1959ஆம் ஆண்டு ஐ.ஏ. ஹமீட் என்பவர் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்றமை இவருடைய பாடசாலைக்கு ஏற்பட்ட திருப்புமுனை எனவும் மார்தட்டிக் கொள்கிறார். கட்டுரையாளர் இம்திஸா ஹஸன் பழீல் மௌலானா பற்றிக் குறிப்பிடுகையில், இளமைக் காலத்திலேயே அல்-குர்ஆன் பாராயணத்தைக் கேட்ட அக்காலத்து மட்டக்களப்பு தெற்குத் தொகுதி சட்டவாக்க சபை உறுப்பினரும் போக்குவரத்து அமைச்சருமாகிய முஹம்மது மாக்கான் மாக்காரினால் வெள்ளி நாணயத்தினை பரிசாகப் பெற்றுக் கொண்ட சமயப்பற்றாளர் எனும் இம்திஸா பின்நாளில் அவர் மௌலானா மாஸ்டர் என கல்-எலியவில் அழைக்கப்பட்டாரெனவும் குறிப்பிடுகிறார்.

பழீல் மௌலானா, கடமையாற்றிய பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் சமயம் தொடர்பான ஒழுக்க விழுமியங்களைப் போதித்துள்ளார் என சம்பவங்களின் மூலமாக விளக்குகின்றார்.

இம்திஸா தனது மாணவப் பருவ அனுபவத்தினை கல்முனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் மர்ஹூம் ஐ.ஏ. ஹமீட் விபரிக்கையில், எனக்கு இலகுவாகவும் சரளமாகவும் புனித அல்-குர்ஆனை ஓதமுடியாது என அவருக்குத் தெரிய வந்த போது, அது அவரை கவலைக்குள்ளாக்கியது. ஆகவே, எனக்கு ஓர் அல்-குர்ஆன் பிரதியை அன்பளிப்புச் செய்து கொள்ள வேண்டும் என வலியுறுத்தினார் என்பதாக நூலுருவாக்க ஆவணத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

பழீல் மௌலானா ஒரு சமயப் பற்றாளன் என்பதை இம்திஸா நிரூபித்துக் கொண்டேயிருக்கையில், 1960ஆம் ஆண்டு அநுராதபுரம் கொட்டியாவெள முஸ்லிம் மகா வித்தியாலய அதிபராக கடமையேற்று அங்கே ஒரு பள்ளிவாயலையும் நிறுவினார்கள் எனக் கூறி முடிக்கிறார். இவருடைய அரசியல் சிந்தனையும் போராட்டத்தினையும் சட்டத்தரணி றுடானி ஸாஹிர் குறிப்பிடுகையில், இவர் அரசியல் குடும்பமென பூர்வீகத்திலிருந்து விளக்கி, பின்நாளில் சட்டத்தரணி அமீருல் அன்சார் மௌலானா அரசியலில் பிரகாசித்தது வரையில் நீண்டதொரு வரலாற்றைக் கூறிமுடிக்கிறார்.


இவ்வாறாக பன்முக ஆளுமை கொண்ட பழீல் மௌலானாவின் வபாத்தின் பின்னர் அநேகமானோர் பத்திரிகைகளில் அனுதாபச் செய்தியினை வெளியிட்டிருந்தனர் என்பதனை இந்நூலினூடாக அறியமுடிகிறது. இவ்வாறாக அபுல் கலாம் பழீல் மௌலானாவின் 'வாழ்வும் பணியும்' எனும் நூலின் ஒவ்வொரு பக்கங்களிலும் பரந்து விரிகின்றது.



பாத்திமா ஸுபா அப்துல் றவூப்,
ஆசிரியை (MA சமூகவியல்)
ஸாஹிறா கல்லூரி, கல்முனை.

# உலக செய்திகள்



# மூண்டது போர்:

# உக்ரைன் மீது ரஷ்யா மும்முனை தாக்குதல்

## இரு பிரதான இடங்கள் ரஷ்யா வசம்; தலைநகர் கீவ் உட்பட 10 நகரங்கள் மீது தாக்குதல்

## வீதியில் மக்கள் வெளியேற்றம்: மெட்ரோ சுரங்கப்பாதைகளில் தஞ்சம்; உக்ரைனின் நூற்றுக்கணக்கான முக்கிய இணையதளங்களில் 'ஹேக்'

ஐக்கிய நாடுகள் சபை, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் சர்வதேச நாடுகளின் கடும் எதிர்ப்பையும் மீறி, உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்துள்ளது.

பல காலமாக நீடித்துவந்த ரஷ்ய - உக்ரைன் மோதல் தற்போது போராக வெடித்துள்ளதால் சர்வதேச நாடுகள் பெரும் பதற்றமடைந்துள்ளன.

இந்நிலையில், உக்ரைன் மக்கள் பலர் தலைநகர் கீவ் உள்ளிட்ட இடங்களிலுள்ள மெட்ரோ சுரங்கப்பாதைகளில் தஞ்சமடைந்துள்ளனர் என அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன. உக்ரைனிலுள்ள எண்ணெய்த் தாங்கிகளைக் குறிவைத்து ரஷ்யா குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது.

ரஷ்யாவின் ஜனாதிபதி விளாடிமிர் புட்டின், உக்ரைன் மீது ஆயுதத் தாக்குதல்களை மேற்கொள்வதாக உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

இதனையடுத்து வடக்கு, தெற்கு, கிழக்கு என உக்ரைனின் மூன்று திசைகளிலிருந்தும் சுற்றிவளைத்து ரஷ்யப் படைகள் தாக்குதல் நடத்திவருகின்றன. கருங்கடல் பகுதியிலிருந்து போர்க்கப்பல்கள் மூலம் உக்ரைனின் முக்கிய நகரங்கள் மீது ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தி வருகின்றன. கிழக்கு பகுதியிலிருந்து விமானப்படை மூலம் குண்டுகளை வீசி, உக்ரைன் விமானத் தளங்கள், விமானப்படையை முடக்கியுள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

அதுமட்டுமன்றி, நட்பு நாடான பெலாரஸிலிருந்து உக்ரைன் வடக்கு நகரங்கள் மீது குண்டு மழை பொழிந்து வருகிறது ரஷ்ய விமானப்படை. உக்ரைனின் முக்கிய நகரங்கள் மீது ரஷ்யப் படைகள் தொடர்ந்து பல்முனை தாக்குதல் நடத்தி வருகின்றன.

அந்நாட்டின் முக்கிய நகரங்களை இலக்குவைத்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதால் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் உயிரிழந்திருக்கலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. எனினும், ரஷ்யப் படைகளால் நேற்று அதிகாலைமுதல் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் நூற்றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினரும் 40இற்கும் மேற்பட்ட சிவிலியன்களும் கொல்லப்பட்டுள்ளதுடன், நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளதாக உத்தியோகபூர்வமான தகவல்கள் நேற்றிரவு வெளியாகின.

இதேவேளை, ரஷ்யாவின் ஏழு விமானங்களை தாக்கி அழித்துள்ளதாக தெரிவித்துள்ள உக்ரைன் பாதுகாப்புத்துறை, நாட்டைப் பாதுகாக்க யாருடனும் போரிடத் தயாரென அறிவித்துள்ளது.

மேலும், உக்ரைன் படைத் தாக்குதலில் 50இற்கும் மேற்பட்ட ரஷ்ய இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளதாக உக்ரைன் அரசு சார்பில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

அத்துடன், போரிட இயலுமான பொதுமக்களுக்கு ஆயுதம் வழங்குமாறும் உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி பாதுகாப்பு உயரதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

ரஷ்யா - உக்ரைன் நாடுகளுக்கிடையிலான மோதல் மூன்றாவது உலகப்போராக உருவெடுக்கலாம் என்ற அச்சம் காரணமாக ஐரோப்பிய ஒன்றியம் அவசர கூட்டமொன்றுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

அத்துடன், ரஷ்யாவின் மனிதாபிமானமற்ற நடவடிக்கையை உடனடியாக நிறுத்துமாறு ஐரோப்பிய ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேலும், ரஷ்யாவின் தாக்குதலை கண்டிக்கும் முகமாக அந்நாட்டின் மீது அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட நாடுகள் பொருளாதாரத் தடை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

உக்ரைன் தலைநகர் கீவ், கிழக்கு உக்ரைனிலுள்ள டோனஸ்கை தாக்க தொடங்கிய ரஷ்யா, தொடர்ந்து ஒடேசா, கார்க்கிவ், மைக்கோல், மரி யுபோல் உள்ளிட்ட முக்கிய நகரங்களை குறிவைத்து குண்டுமழை பொழியத் தொடங்கியுள்ளது இதனால் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

அத்தோடு அங்கு 'கிளஸ்டர் பொம்ப்' எனப்படும் கொத்து குண்டு உள்ளிட்ட வகை வெடிகுண்டுகளை வீசி ரஷ்யப் படை தாக்கி வருகிறது. வெடித்துச் சிதறும் குண்டுகளால் பேரொலி - ஒளி பேரபாயத்தை உணர்த்துவதாக காணப்படுகின்றன.

இந்த இக்கட்டான நிலையில் உக்ரைன் மக்கள் பலர் தலைநகர் கீவ் உள்ளிட்ட இடங்களிலுள்ள மெட்ரோ சுரங்கப்பாதைகளில் தஞ்சமடைந்துள்ளனர் என அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன. வழக்கமாக குண்டு வீசப்படும்போதும், பதுங்கு குழிகளில் பதுங்கி, இராணுவத்தினர், மக்கள் உயிர் பிழைப்பர். ஆனால், உக்ரைன் மக்கள் மெட்ரோ சுரங்கப்பாதைகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

**சைபர் தாக்குதல்**

உக்ரைன் மீதான குண்டுத் தாக்குதல்களுக்கிடையே ரஷ்யா, சைபர் தாக்குதல் நடத்தியுள்ளமை பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது. இதனால் உக்ரைன் அரசின் முக்கிய இணையதளங்கள் அனைத்தும் முடக்கப்பட்டுள்ளன என அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன. உக்ரைன் அரசின் வெளியுறவுத்துறை, உட்கட்டமைப்பு, கல்வி உள்ளிட்ட துறைகளின் இணையதளங்கள்




முடக்கப்பட்டுள்ளன.

அத்தோடு உக்ரைன் அமைச்சர்களின் இணையதளங்கள் ஹேக் செய்யப்பட்டு முடக்கப்பட்டுள்ளன.

உக்ரைனின் நூற்றுக்கணக்கான முக்கிய இணையதளங்களில் தகவல் அழிப்பு (Data Erasing) டூல் மோல்வேர் மூலம் ரஷ்யா சைபர் தாக்குதல் மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

**போரை நிறுத்துமாறு ஐ.நா. வலியுறுத்து**

உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்துள்ள நிலையில், தலைநகர் கீவ், கிழக்குத் துறைமுக நகர் மரி யுபோல், கருங்கடல் துறைமுக நகர் ஒடேசா ஆகியவற்றின் மீது குண்டுமழை



பொழிவதால் விடாமல் வெடியோசை கேட்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. போரை நிறுத்த அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும்படி ஐ.நா. பாதுகாப்புச் சபையில் உக்ரைன் வலியுறுத்தியுள்ளது.

முந்தைய சோவியத் ஒன்றியத்திலிருந்த நாடுகளில் ஒன்றான உக்ரைனில் ஒருபகுதியான கிரி மியாவை 2014ஆம் ஆண்டு ரஷ்யா மீண்டும் கைப்பற்றியது. அதையடுத்து கிழக்கு உக்ரைனிலுள்ள டொனட்ஸ்க் உள்ளிட்ட நகரங்களிலும் ரஷ்யாவுக்கு ஆதரவாகக் குழுக்கள் செயற்பட்டு வருகின்றன.

ரஷ்ய ஆதரவாளர்கள் மீது உக்ரைன் அரசு அடக்குமுறைகளை ஏவுவதாகக்



குற்றஞ்சாட்டிய ரஷ்யா, அதைத் தடுக்க இராணுவ நடவடிக்கை எடுக்கப்போவதாகக் கூறி உக்ரைன் எல்லையில் படைகளைக் குவித்தது. போர் தொடுத்தால் கடும் விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் என பிரான்ஸ், அமெரிக்கா உள்ளிட்ட மேலைநாடுகள் எச்சரித்து வந்தன.

இந்நிலையில், நேற்று ரஷ்ய ஜனாதிபதி வெளியிட்ட அறிவிப்பில், கிழக்கு உக்ரைனில் உக்ரைன் இராணுவமும், நேட்டோ இராணுவமும் இணைந்து இனப்படுகொலையில் ஈடுபட்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

உக்ரைனிலுள்ள ரஷ்ய ஆதரவாளர்களைக் காப்பதற்கும் அப்பகுதியிலிருந்து உக்ரைன் இராணுவத்தை வெளியேற்றவும் இராணுவ நடவடிக்கையைத் தொடங்கியுள்ளதாகவும் அறிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கையில் யாரேனும் குறுக்கிட்டாலும், ரஷ்யாவுக்கும் ரஷ்ய மக்களுக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டாலும் ரஷ்யா உடனடியாகப் பதிலடி கொடுக்கும் என்றும், வரலாற்றில் இதுவரை கண்டிராத விளைவுகள் ஏற்படும் என்றும் புட்டின் எச்சரித்துள்ளார்.

கிழக்கு உக்ரைனுக்குள் நுழைந்துள்ள ரஷ்ய இராணுவத்தினரும், பீரங்கிப் படையினரும் உக்ரைன் இராணுவ நிலைகள் மீது தாக்குதலை நடத்திவருகின்றனர். தலைநகர் கீவ், கிழக்குத் துறைமுக நகரான மரி யுபோல், கருங்கடல் துறைமுக நகரான ஒடேசா ஆகியவற்றின் மீது ரஷ்ய விமானப்படையின் போர் விமானங்கள் குண்டு வீசித் தாக்குதல் நடத்தின.

இராணுவ முகாம்கள், எண்ணெய்க் கிணறுகள், எண்ணெய் சேமிப்புக் கிடங்குகள் ஆகியவற்றின் மீது குண்டுவீச்சு நடைபெறுவதால் பெரும் வெடியோசை முழங்குவதுடன், வானில் தீப்பிழம்பும் கரும்புகையும் மூண்டு காட்சியளிக்கிறது

உக்ரைனுக்குள் ரஷ்யப் படைகள் ஊடுருவித் தாக்குவதாகவும், இது ஆக்கிரமிப்பு நடவடிக்கை என்றும் உக்ரைன் தெரிவித்துள்ளது. உக்ரைன் தன்னைக் காத்துக்கொள்ளும் என்றும், இறுதியில் வெற்றிபெறும் என்றும் வெளியுறவு அமைச்சர் திமிட்ரோ குலேபா தெரிவித்துள்ளார்.

உக்ரைன் விவகாரம் குறித்து பேச நியூயோர்க்கில் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் அவசரக் கூட்டம் கூடியது. அதில் பேசிய உக்ரைன் பிரதிநிதி, போரை நிறுத்த அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும்படி கேட்டுக்கொண்டார்.

உக்ரைன் மீதான படையெடுப்பால் பெருமளவு உயிரிழப்பு ஏற்படும் என்றும், இதனால் வரும் விளைவுகளுக்கு ரஷ்யாவே பொறுப்பேற்க வேண்டும் என்றும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

கல்வி, வேலைவாய்ப்பு உள்ளிட்டவற்றுக்காக உக்ரைனில் இருபதாயிரத்துக்கு மேற்பட்ட இந்தியர்கள் உள்ள நிலையில், அவர்களை மீட்க இந்தியத் தூதரகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்துள்ள நிலையில், அங்கு மருத்துவக் கல்வி பயிலச் சென்ற இந்திய மாணவர்கள் சிறப்பு விமானத்தில் டில்லிக்கு வந்துசேர்ந்தனர். உக்ரைனில் 30 நாட்களுக்கு அவசரநிலை பிறப்பித்துள்ளதால் தாங்கள் நாடு திரும்பியதாக அவர்கள் தெரிவித்தனர்.

உக்ரைனிலுள்ள இந்தியர்களை ஏற்றிவர எயார் இந்தியா விமானம் கீவுக்குச் சென்ற நிலையில், அங்கு போர் நடைபெறுவதால் தரையிறங்காமல் டில்லிக்குத் திருப்பி அனுப்பப்பட்டது.

**மக்களை பாதுகாப்பு பகுதிக்கு புலம்பெயர உக்ரைன் அரசு கோரிக்கை**

தாக்குதல் இடம்பெற்றுவரும் லுஹான்ஸ்க் பகுதியிலுள்ள மக்களை பாதுகாப்பான பகுதிக்கு புலம்பெயர உக்ரைன் அறிவுறுத்தியுள்ளது. இதன்படி, தனியாக செல்ல இயலாதவர்கள் ரயில்களை பயன்படுத்துமாறு கேட்டுக் கொண்டுள்ளது.அவர்களை லிசிசான்ஸ்க், ரூபிஜ்னே மற்றும் ஸ்வாடோவ் ரயில் நிலையங்களுக்கு செல்லும்படி கூறப்பட்டுள்ளது.

**போக்குவரத்து நெரிசல்**

இந்நிலையில் மக்கள் பாதுகாப்பு இடங்களுக்கு செல்ல வாகனங்களில் ஒரே நேரத்தில் சென்றதால், பல இடங்களில் வீதியில் வாகன நெரிசல் ஏற்பட்டு, பல கிலோமீற்றர் தூரத்திற்கு வாகனங்கள் அணிவகுத்து நின்றன.

உணவு, குடிநீர் பெற உக்ரைன் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கும் அவலம் ஏற்பட்டிருக்கிறது. *15 ஆம் பக்கம் பார்க்க...*

## உக்ரைன் ஜனாதிபதியின் உருக்கமான உரை



உக்ரைன் மீது போர் தொடுப்பதாக ரஷ்யா அறிவித்ததையடுத்து உக்ரைன் ஜனாதிபதி வொளோடிமிர் ஸெலென்ஸ்கி உருக்கமான உரையொன்றை ஆற்றினார். அதன் சுருக்கம் வருமாறு;

ரஷ்ய ஜனாதிபதிக்கு இன்று நான் தொலைபேசி அழைப்பை எடுத்தேன். ஆனால், மறுமுனையில் அமைதி மாத்திரமே பதிலாகக் கிடைத்தது. உக்ரைனின் ஜனாதிபதியாகவன்றி ஒரு சாதாரண பிரஜையாக நான் ரஷ்ய மக்களுக்கு இன்று உரையாற்ற விரும்புகிறேன்.

இரண்டாயிரம் கிலோ மீற்றருக்கும் அதிகமான பொதுவான எல்லை நம் நாட்டைப் பிரிக்கிறது. அங்கு சுமார் இரண்டு இலட்சம் இராணுவ வீரர்கள், ஆயிரக்கணக்கான இராணுவ வாகனங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. வேறொரு நாட்டின் எல்லைக்குள் ஒருபடி முன்னேற உங்கள் தலைவர் ஒப்புதல் அளித்துள்ளார்.

இந்த நடவடிக்கை ஐரோப்பிய கண்டத்தில் மிகப்பெரிய போரின் ஆரம்பமாக இருக்கலாம்.

எமக்குப் போர் அவசியமில்லையென உங்களுக்குத் தெரியும். எங்கள் எதிரிகள் எமது நாட்டை எங்களிடமிருந்து பிரிக்க முயற்சித்தால், எங்கள் சுதந்திரத்தையும் மக்களின் உயிரையும் பறிக்க முற்பட்டால், சிறுவர்களை அழிக்க முயற்சித்தால் நாம் தற்காத்துக்கொள்ளும்போது எங்களது முகங்களைப் பார்ப்பீர்கள்.

போர் ஒரு மிகப்பெரிய பேரழிவு. இந்தப் பேரழிவு அதிக விலை கொண்டது. இந்த ஒற்றை வார்த்தையில் மக்கள் பணம், புகழ், வாழ்க்கையை இழக்கிறார்கள். அத்துடன், தங்கள் அன்புக்குரியவர்களையும் இழக்கிறார்கள்.

உக்ரைனில் அமைதியும் மக்களின் பாதுகாப்புமே எமக்கு முக்கியம். அதற்காக நீங்கள் உட்பட யாருடனும் எந்த வடிவத்திலும் எந்த மேடையிலும் பேச்சு நடத்த நாம் தயாராக இருக்கிறோம்.

போர் அனைத்தையும் இழக்கச் செய்யும். இதில் பொதுமக்களே அதிகம் பாதிக்கப்படுவார்கள். ரஷ்ய மக்கள் போரை விரும்புகிறார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன். உங்களிடமிருந்து அதாவது ரஷ்ய குடிமக்களிடமிருந்து கிடைக்கும் பதிலிலேயே அடுத்தகட்டம் நிர்ணயிக்கப்படும்.

# ரஷ்யா மீது சர்வதேச நாடுகள் பொருளாதாரத் தடை; உறவை துண்டித்தது உக்ரைன்; உலக நாடுகள் கண்டனம்;



**"உக்ரைன் விவகாரத்தில் வெளி நபர்கள் (நாடுகள்) யாரேனும் தலையிட விரும்பினால் அல்லது தலையிட்டால் வரலாற்றில் இதுவரை சந்தித்திராத விளைவுகளை சந்திக்க நேரிடும்"**

**- புட்டின் பகிரங்க அறிவிப்பு**



14ஆம் பக்கத் தொடர்ச்சி...

அனைத்து நகரங்களிலும் பெற்றோல் பங்க்குகளை மக்கள் முற்றுகையிட்டுள்ளனர். அடுத்து பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் என்பதால் சூப்பர் மார்க்கெட்டுகளிலும் மக்கள் கூட்டம் அலைமோதுகிறது. உணவு, பாதுகாப்புத் தேடி உக்ரைன் மக்கள் அச்சத்தில் அலைகின்றனர்.

உக்ரைனை சுற்றிவளைத்து ரஷ்யப் படைகள் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றன. பல திசைகளிலிருந்தும் ரஷ்யப் படைகள் உக்ரைனுக்குள் படையெடுக்கின்றன. உக்ரைன் மீது போர் விமானத் தாக்குதல் நடைபெறும் அதேநேரத்தில் ரஷ்ய தரைப்படைகளும் உள்ளே நுழைந்தன.

**மும்முனை தாக்குதல் நடத்தும் ரஷ்யா**

ரஷ்யாவின் நட்பு நாடான பெலாரஸ் எல்லை வழியாக ரஷ்யாவின் பீரங்கிகள் உக்ரைனுக்குள் நுழைந்தன. வான்வழி, கடல் வழி, தரை வழியாக மும்முனை தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. குடியிருப்பு பகுதிகளில் நடந்த தாக்குதலில் மக்கள் உயிரிழந்தனர். ரஷ்ய போர் விமானங்களின் குண்டுமழை தலைநகர் கீவ் மீது பொழிவதால் நகரை விட்டு மக்கள் வெளியேறுகின்றனர். விமானங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதால் உக்ரைனின் மேற்கு எல்லையிலுள்ள நகரங்களிலிருந்து வெளியேற ஆயிரக்கணக்கானோர் கார்களில் கீவ் நகர எல்லையில் வரிசை கட்டி நிற்கின்றனர்.



பணம் எடுப்பதற்காக ஏரிஎம் மையங்களில் நீண்ட வரிசையில் மக்கள் காத்திருக்கின்றனர். பலரும் பணமெடுக்க குவிந்ததால், ஒரு நாளைக்கு 10 ஆயிரம் அளவிற்கு மட்டுமே பணம் எடுக்க அந்நாடு கட்டுப்பாடு விதித்துள்ளது. அத்தோடு, உணவுத் தேவைகளை பூர்த்திசெய்துகொள்ளும் பொருட்டு மக்கள் கடைகளில் குவிந்துள்ளனர். இதேவேளை, மேற்கு உக்ரைனில் பாதுகாப்பாக இருப்பதால் பிற பகுதிகளிலிருந்து அங்கு மக்கள் குவிகின்றனர்.

**பெரசூட் மூலம் தரையிறங்கிய ரஷ்யப் படை**

உக்ரைனில் பல்வேறு பகுதிகளில் பெரசூட் மூலம் ரஷ்ய இராணுவ வீரர்கள் தரையிறங்குவதால் பதற்றம் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக ரஷ்ய தாக்குதலிலிருந்து தாய்நாட்டை காக்க பொதுமக்கள் இராணுவத்தில் சேர உக்ரைன் இராணுவம் அழைப்பு விடுத்துள்ளது.

பாதுகாப்புப் படைகளில் சேர்ந்து பணியாற்ற மக்கள் முன்வர வேண்டும் என்று உக்ரைன் பாதுகாப்பு அமைச்சர் ஓலெஸ்ஸி ரெஸ்னிகோவ் கேட்டுக்கொண்டுள்ளார்.

**கடல் வழியை மூட உக்ரைன் உத்தரவு**

இதற்கிடையே ரஷ்ய போர்க்கப்பல்கள் துருக்கி கடற்பகுதி வழியாக கருங்கடல் பகுதிக்கு வரவிடாமல் தடுக்க, பாஸ்பொரஸ் மற்றும் டார்டனெல்லஸ் கடல் வழியை மூடுமாறு துருக்கி அரசுக்கு உக்ரைன் அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்நிலையில், கார்கிவ் நகரம் அருகேயுள்ள உக்ரைனின் விமானத்தளம், ரஷ்யாவின் வான்வெளி தாக்குதலில் தீப்பற்றி எரிவதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. தரைவழி மற்றும் வான்வழி தாக்குதலை தொடர்ந்து உக்ரைன் இராணுவ வீரர்கள் ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு சரணடைந்து வருவதாக ரஷ்ய இராணுவம் தகவல் தெரிவித்துள்ளது.

**முதல் தாக்குதல்**

ரஷ்யா உக்ரைனில் போர் தொடுத்துள்ள நிலையில் நேரடியாக முதல் தாக்குதலே உக்ரைன் இராணுவ தலைமையகத்தில் நடத்தப்பட்டுள்ளது. அதாவது, எந்த இடத்தில் தாக்கினால் ஒரு நாட்டின் இராணுவம் பாதிக்கப்படுமோ சரியாக அந்த இடத்தில் ரஷ்யா தாக்குதலை தொடங்கியுள்ளது. இதனையடுத்து ரஷ்யா - உக்ரைன் இடையிலான போர் உச்சத்தை தொட்டுள்ளது.

முதல் கட்டமாக கிழக்கு உக்ரைன் பகுதியில் அதாவது, கிரி மியா பகுதியில் ரஷ்யா தமது ஆக்கிரமிப்பை ஆரம்பித்துள்ளது. கிரி மியாவை ரஷ்யா ஏற்கனவே தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துவிட்டது. உக்ரைனின் ஆளுகைக்குட்படாத பகுதியாக கிரி மியாவை ரஷ்யா அறிவித்துள்ளது. இப்படிப்பட்ட நிலையில்தான் கிழக்கு உக்ரைனை ரஷ்யா தாக்கியுள்ளது.

இந்நிலையில், அப்பகுதியிலிருந்து ரஷ்யா ஏவுகணைகளை ஏவி வருகிறது. ரஷ்யாவிடமிருக்கும் ஒரேநேரத்தில் அதிக ஏவுகணைகளை ஏவும் 'மல்டி ஏவுகணை சிஸ்டம்' மூலம் இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. ஒரேநேரத்தில் பல நூறு கணக்கில் ஏவுகணைகளை இதன்மூலம் செலுத்த முடியும்.

இதுவரை சிறியளவிலான ஏவுகணைகள் மட்டுமே ஏவப்பட்டுள்ளதக ரஷ்யா அப்போது அறிவித்திருந்தது. முக்கியமாக உக்ரைனின் இராணுவ அமைச்சு இருக்கும் பகுதியில் ரஷ்யா தாக்குதல் நடத்தியுள்ளது. உக்ரைனின் இராணுவ அமைச்சு, அவர்களின் விமான, ரொக்கெட் ஏவுதளம், இராணுவத் தளங்கள் இருக்கும் பகுதிகளில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தலைநகர் கீவ்வின், முக்கிய நகரங்களான கர்க்கிவ், டின்ப்ரோ ஆகிய பகுதிகளில் இந்த தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இராணுவ ரீதியாக உக்ரைன் வலிமையாக இருக்கும் பகுதிகளை முதலில் ரஷ்யா தாக்கியது. அதேபோல் போர் விமானங்களும் உள்ளே புகுந்து குண்டுகளை போடத் தொடங்கின.

கீவ்வின் முக்கிய நகர பகுதிகளில் போர் விமானங்கள் புகுந்து தாக்கி வருகின்றன. தொடர்ந்து ரஷ்யா வேகமாக உக்ரைனுக்குள் முன்னேறி வருகின்றது.



**உக்ரைன் விமானத்தளம் தகர்ப்பு**

இந்நிலையில், உக்ரைன் நாட்டு விமானத்தளங்களை தகர்த்துவிட்டதாகவும், உக்ரைனின் விமான எதிர்ப்பு கட்டமைப்பை அழித்துவிட்டதாகவும் ரஷ்ய இராணுவம் அறிவித்துள்ளது. உக்ரைன் நாட்டின் பல்வேறு விமானத்தளங்கள் மீது ரஷ்ய விமானங்கள் குண்டுத் தாக்குதல் நடத்தியுள்ளன.



**நூற்றுக்கணக்கான உக்ரைன் இராணுவ வீரர்கள் பலி**

இதேவேளை, ரஷ்ய தாக்குதலில் தங்களது நூற்றுக்கணக்கான இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டுள்ளதாக உக்ரைன் அரசு தகவல் தெரி வித்துள்ளது. அத்தோடு, ரஷ்ய தாக்குதலில் 40இற்கும் மேற்பட்ட உக்ரைனியர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன், 100இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

**ரஷ்யாவின் 5 போர் விமானங்கள் - ஹெலியை சுட்டுவீழ்த்திய உக்ரைன்**

போர் நடந்துவரும் நிலையில், பதில் தாக்குதலாக ரஷ்யாவின் 6 போர் விமானங்கள் மற்றும் ஹெலிகொப்டர் ஒன்றையும் வீழ்த்தியுள்ளதாக உக்ரைன் இராணுவம் தெரி வித்துள்ளது.

**ரஷ்ய கிளர்ச்சிப் படை வசமான உக்ரைனின் 2 நகரங்கள்**

உக்ரைனின் கிழக்கிலுள்ள லுகான்ஸ்க் பகுதியில் 2 நகரங்களை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவந்துள்ளதுடன், சுமார் 10 நகரங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக ரஷ்ய ஆதரவு உக்ரைன் கிளர்ச்சியாளர்கள் அறிவித்துள்ளனர்.

**உளவுத்துறை தலைமையகம் மீது தாக்குதல்**

தலைநகர் கீவ்விலுள்ள பாதுகாப்பு அமைச்சின் உளவுத்துறை தலைமையகம் மீது ரஷ்யப் படைகள் தாக்குதல் மேற்கொண்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

**ஆயுதமேந்த தயாராக இருப்பவர்கள் பாதுகாப்புப் படைகளில் சேரலாம்**

இந்நிலையில், அதன்படி ஆயுதமேந்த தயாராக இருப்பவர்கள் பிராந்திய பாதுகாப்புப் படைகளில் சேரலாம் என உக்ரைன் பாதுகாப்பு அமைச்சர் ஓலெக்ஸி ரெஸ்னிகோவ் அழைப்பு விடுத்துள்ளார்.

**புகலிடம் கொடுக்கும் மோல்டோவா**

ரஷ்ய தாக்குதலை தொடர்ந்து உக்ரைனிலிருந்து வெளியேறும் மக்களுக்கு புகலிடமளிக்க தயார் என மோல்டோவா தெரித்துள்ளது. எத்தனை ஆயிரம் மக்கள் வந்தாலும் அவர்களை ஏற்கத் தயார் என உக்ரைனின் அண்டை நாடான மோல்டோவாவின் ஜனாதிபதி அறிவித்துள்ளார்.



**ரூபிளின் மதிப்பு சரிவு**

இதனிடையே உக்ரைன் - ரஷ்ய போர் எதிரொலியாக டொலருக்கு நிகரான ரஷ்ய ரூபிளின் மதிப்பு ஒரேநாளில் 10 வீதம் சரிந்துள்ளது. உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதலை மேற்கொண்டுவரும் நிலையில், ரஷ்ய நாணயத்தின் மதிப்பு கடும் சரிவை கண்டுள்ளது.

**ஆசிய பங்கு சந்தைகள் சரிவு**

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்ததன் எதிரொலியாக ஆசிய நாடுகளின் பங்குச்சந்தைகள் சரிந்துள்ளன. ஜப்பானின் பங்குச்சந்தை குறியீட்டு எண் நிக்கி ஒரு மாத காலத்தில் இல்லாதளவாக ஒரேநாளில் 1.24 வீதம் சரிந்துள்ளது.

## ஆசிய பங்குச்சந்தைகள் சரிவு; உயரும் மசகு எண்ணெய் விலை; தங்கத்தின் விலை அதிகரிப்பு

அதேபோல் தென்கொரிய பங்குச்சந்தை குறியீட்டான கோஸ்பி 1.4 வீதம் சரிந்துள்ளது. ஆசியாவின் பொருளாதார மையமாகக் கருதப்படும் ஹொங்கொங்கின் ஹொங் செங் பங்குச்சந்தை குறியீடு 1.66 வீதம் சரிந்துள்ளது.

ஹொங்கொங்கின் மற்றொரு பங்குச்சந்தை குறியீடான ஷங்காய் காம்போசிட் 14.78 புள்ளிகள் சரிந்துள்ளன.

**100 டொலரைத் தாண்டிய மசகு எண்ணெய் விலை**

உக்ரைன் - ரஷ்யா போரால் மசகு எண்ணெய் விலை பீப்பாயொன்று 100 டொலரைத் தாண்டியுள்ளது.

2014இல் பிரெக்ஸிட் பிரச்சினை காரணமாக மசகு எண்ணெய் விலை பீப்பாயொன்றுக்கு 99 டொலருக்கு அதிகரித்தது. இதுவே பெரிய உயர்வாகக் கருதப்பட்டுவந்த நிலையில், உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதலால் 8 ஆண்டுகள் கழித்து மீண்டும் மசகு எண்ணெய் விலை 100 டொலரைத் தொட்டுள்ளது.

**தங்கத்தின் விலை சடுதியாக அதிகரிப்பு**

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்து சில மணிநேரங்களில் தங்கத்தின் விலை அவுன்ஸ் ஒன்று 3.4 வீதத்தால் அதிகரித்தது. இந்த அதிகரிப்பானது 2020ஆம் ஆண்டு செப்டம்பரின் பின்னர் நிகழ்ந்த மிக அதிகரித்த தொகையாகும். அதனடிப்படையில் ஆயிரத்து 971.54 அமெரிக்க டொலர்களாக தங்கத்தின் விலை உயர்ந்தது. அமெரிக்காவில் தங்கத்தின் விலை 2.4 வீதமாக அதிகரித்தது.



**புட்டின் பகிரங்க எச்சரிக்கை**

வான்வழித் தாக்குதலை தொடர்ந்து ரஷ்யாவின் தரைப்படையும் உக்ரைனுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்திவரும் நிலையில், ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு சரணடைய உக்ரைன் இராணுவத்துக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



அத்தோடு ''உக்ரைன் விவகாரத்தில் வெளி நபர்கள் (நாடுகள்) யாரேனும் தலையிட விரும்பினால், இந்த விவகாரத்தில் தலையிட்டால் வரலாற்றில் இதுவரை சந்தித்திராத விளைவுகளை நீங்கள் சந்திக்க நேரிடும். அனைத்து வகையான முடிவுகளும் எடுக்கப்பட்டுள்ளது. நான் கூறியது உங்களுக்கு கேட்டிருக்கும் என நம்புகிறேன்'' என ரஷ்ய ஜனாதிபதி உலக நாடுகளுக்கு பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

**ரஷ்யாவிடமிருந்து எங்களை காப்பாற்றுங்கள்**

உக்ரைனின் 10 நகரங்களில் ரஷ்யா போர் தொடுத்துள்ளதால் பதற்றம் ஏற்பட்டுள்ளது. பல நகரங்களில் ஏவுகணைகளை வீசி ரஷ்யப் படைகள் தொடர்ந்து தாக்கி வருகின்றன. குறிப்பாக, சக்திவாய்ந்த ஆயுதங்களால் இராணுவ தளவாடங்களை ரஷ்யப் படைகள் தாக்கி வருவதாக உக்ரைன் தெரிவித்துள்ளது. இந்நிலையில், உக்ரைன் மீது போர் தொடுத்த ரஷ்யாவை உலக நாடுகள் தடுத்துநிறுத்த வேண்டும் என்று உக்ரைன் வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும், தங்கள் நாட்டை ரஷ்ய தாக்குதலிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்றும் ரஷ்யா மீது பொருளாதார, தூதரக ரீதியில் கடும் நெருக்கடி கொடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு அமைச்சர் விடுத்துள்ள கோரிக்கையில், "ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பினராகவுள்ள ஒரு நாடு இப்படி விதிகளை மீறி செயற்பட்டால், மற்ற நாடுகளும் இதனை பின்பற்ற நேரிடும். ஐ.நாவில் உறுப்பு நாடாகவுள்ள அனைவரும் உக்ரைனை பாதுகாக்க உதவ வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

**ரஷ்யாவுடனான உறவு துண்டிப்பு**

மக்கள் யாரும் பதற்றமடைய வேண்டாம்; அனைவரும் பாதுகாப்பாக இருங்கள். இராணுவம் தனது நடவடிக்கைகளை செய்து வருகிறது என நாட்டு மக்களுக்கு உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஷெலன்ஸ்கி வேண்டுகோள் விடுத்துள்ளதுடன், ரஷ்யாவுடனான தூதரக ரீதியிலான அனைத்து உறவுகளையும் துண்டித்துக் கொள்வதாகவும் தெரிவித்துள்ளார்.



**கப்பல் போக்குவரத்து நிறுத்தம்; தரைப்படையினர் படையெடுப்பு..!**

அசோவ் கடலில் உக்ரைனுக்கான கப்பல் போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளதாகவும், ரஷ்யா, பெலாரஸ் எல்லைகளிலிருந்து ரஷ்ய தரைப்படையினர் உக்ரைனுக்குள் படையெடுத்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

ரஷ்ய எல்லையை ஒட்டிய கார்க்கிவ் மாநிலத்திலுள்ள சுகுயேவ் விமானப்படைத் தளத்தின் மீது ரஷ்ய விமானங்கள் குண்டுவீசி தாக்குதல் நடத்தியுள்ளன. இதனால் அப்பகுதி புகைமண்டலமாகக் காட்சியளித்தது.

வடக்கே பெலாரஸிலிருந்தும், வடக்கிலும் கிழக்கிலும் ரஷ்யாவிலிருந்தும் எனப் பலமுனைகளிலும் ரஷ்ய தரைப்படையினர் உக்ரைனுக்குள் படையெடுத்துள்ளதை அந்நாட்டு எல்லைப் பாதுகாப்புப் படையினர் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இதேபோல் உக்ரைனுக்குத் தெற்கே உள்ள அசோவ் கடல் வழியாக அந்நாட்டின் மரி யுபோல் துறைமுகத்துக்குக் கப்பல் போக்குவரத்தையும் நிறுத்திவிட்டதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

உக்ரைன் மீது ரஷ்யாவின் படையெடுப்பால் மொஸ்கோ பங்குச்சந்தையில் பங்கு விலைக் குறியீடு 14 வீதம் வீழ்ச்சியடைந்தது. இதையடுத்து பங்குச்சந்தையில் வணிகம் நிறுத்தப்பட்டது. உடனடியாக ரஷ்ய நடுவண் வங்கி தலையிட்ட பின் மீண்டும் பங்குச்சந்தையில் வணிகம் தொடங்கியுள்ளது.

**உலக நாடுகள் கண்டனம்**

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்துள்ள நிலையில், அமெரிக்கா, பிரித்தானியா, கனடா உள்ளிட்ட நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கியுடன் தொலைபேசியில் பேசிய அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், அங்குள்ள நிலைமை குறித்து கேட்டறிந்தோடு, இது நியாயமற்ற தாக்குதல் என விமர்சித்தார். மேலும், புட்டினின் அப்பட்டமான ஆக்கிரமிப்புக்கு எதிராக நிற்க உலகத் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்குமாறு ஜோ பைடனிடம் உக்ரைன் ஜனாதிபதியை கேட்டுக்கொண்டார்.

இந்நிலையில், இன்று ஜி7 கூட்டமைப்பு நாடுகளின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ள ஜோ பைடன், உக்ரைன் - ரஷ்யா விவகாரம் குறித்து விவாதிக்கவுள்ளார். ரஷ்யா மீது அமெரிக்காவும், தமது நட்பு நாடுகளும் கடுமையான பொருளாதாரத் தடையை விதிக்கவுள்ளதாகவும், உக்ரைனுக்கும், உக்ரைன் மக்களுக்கும் எப்போதும் ஆதரவையும், உதவியையும் அளிப்போம் எனவும் ஜோ பைடன் உறுதியளித்துளார்.

ரஷ்யா - உக்ரைன் இடையேயான விவகாரத்தில் உக்ரைன் பக்கம் தான் நிற்போம் என உறுதியளித்துள்ள பிரித்தானிய பிரதமர் பொரிஸ் ஜோன்சன், ரஷ்யாவுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார். மேலும், அமெரிக்கா, கனடா உள்ளிட்ட நட்பு நாடுகளும், நேட்டா நாடுகளும் உக்ரைனுக்கு ஆதரவாக இருப்போம் என பிரதமர் பொரிஸ் ஜோன்சன் உறுதியளித்துள்ளார்.

உக்ரைன் - ரஷ்யா விவகாரத்தில் ஆரம்பம் முதலே உக்ரைனுக்கு ஆதரவாக இருந்துவரும் ஜேர்மனி, தற்போது உக்ரைனுக்கு என்றும் ஜேர்மனி உதவியாக இருக்கும் என அந்நாட்டு அரசு உறுதியளித்துள்ளது. உக்ரைனுக்கு ஆதரவளிக்கும் விதமாக பெர்லின் நகரில் உக்ரைன் கொடி வர்ணத்தை ஜேர்மனி ஒளிரச் செய்துள்ளது.

இதனிடையே, உக்ரைன் மீதான ரஷ்யாவின் போரால் மிகப்பெரிய சிக்கல் உருவாகும் எனக் கூறியுள்ள இந்தியா, போர்ப் பதற்றம் மிகுந்த கவலை அளிப்பதாகவும், இராணுவ நடவடிக்கைகளை கைவிட்டுவிட்டு, இரு நாடுகளும் இராஜாங்க ரீதியிலான பேச்சுவார்த்தையை முன்னெடுக்க வேண்டும் என கேட்டுக்கொண்டது.

**லிதுவேனியாவில் அவசரநிலை**

இதேவேளை, உக்ரைனின் அண்டை நாடான லிதுவேனியாவில் அவசரநிலை அமுல்படுத்தப் படுவதாக அந்நாட்டு ஜனாதிபதி கிடானாஸ் அறிவித்துள்ளார். உக்ரைன் மீது ரஷ்ய இராணுவம் தாக்குதல் நடத்தி வருவதையடுத்து அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

**ஜேர்மனி அவசர ஆலோசனை**

உக்ரைன் மீதான ரஷ்யா போர் தொடுத்து வரும் நிலையில், ஜேர்மனி அவசர ஆலோசனை நடத்தியுள்ளது. இதுதொடர்பில் விவாதிப்பதற்காக எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அனைத்துக் கட்சி கூட்டத்திற்கு ஜேர்மனி பிரதமர் அழைப்பு விடுத்துள்ளார்.

அத்தோடு ஐரோப்பிய கண்டத்தின் அமைதியை சீர்குலைக்க ரஷ்ய ஜனாதிபதி புட்டின் முயற்சிப்பதாக ஜேர்மனி குற்றஞ்சாட்டியுள்ளதுடன், ஐரோப்பாவின் அமைதிக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என எச்சரிக்கை விடுத்துள்ளது.



**ரஷ்யா மீது பொருளாதாரத் தடை**

ரஷ்யா மீது மேற்குலக நாடுகளும் ஏனைய சில நாடுகளும் பொருளாதாரத் தடை உள்ளிட்ட பல்வேறு தடைகளை விதிப்பதாக அதிரடியாக அறிவித்துள்ளன.

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், பிரித்தானியா, அவுஸ்திரேலியா, கனடா, ஜப்பான் ஆகிய நாடுகள் பல்வேறு தடைகளை விதிப்பதாக அறிவித்துள்ளன. ரஷ்யாவுக்கான எரிவாயு விநியோகத் திட்டத்தை இடைநிறுத்துவதாக ஜேர்மனி அறிவித்துள்ளது.

ரஷ்யா மீது பொருளாதாரத் தடை விதித்த ஆவணத்தில் நேற்று கையொப்பமிட்ட அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், அனைத்துவிதமான நிதித் தொடர்பாடல்களையும் இடைநிறுத்துவதாக அறிவித்தார்.

இதேவேளை, ரஷ்யாவின் அரச வங்கி உள்ளிட்ட ஐந்து பிரதான வங்கிகளுக்கும் அந்நாட்டின் மிகப்பெரிய பணக்காரர்கள் மூவருக்கும் பிரித்தானியா தடைவிதித்துள்ளது.

மேலும், 351 ரஷ்ய அரசியல்வாதிகளுக்கும் 27 அதிகாரிகளுக்கும் ஐரோப்பிய ஒன்றியம் தடைவிதித்துள்ளது.

ரஷ்யாவின் பாதுகாப்புச் சபையை தடைசெய்வதாக அவுஸ்திரேலிய பிரதமர் ஸ்கொட் மொரிசன் அறிவித்துள்ளார். அத்துடன் ரஷ்யா, தனது நாட்டில் முதலீடு செய்துள்ள முறிகளுக்கான காப்பீட்டை இடைநிறுத்துவதாக ஜப்பான் அறிவித்துள்ளதுடன், ரஷ்யர்கள் பலரின் சொத்துகள் முடக்கப்பட்டுள்ளதுடன் நாட்டுக்குள் நுழைவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

# ஆப்கானுக்கு அதிர்ச்சி கொடுத்த பங்களாதேஷ் சாதனை வெற்றி




ஆப்கானிஸ்தான் அணிக்கெதிரான முதலாவது ஒருநாள் சர்வதேச போட்டியில் 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் த்ரில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி சாதனை வெற்றி ஒன்றை பதிவுசெய்தது.

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியானது மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள்கொண்ட ஒருநாள் மற்றும் இருபதுக்கு 20 கிரிக்கெட் தொடர்களில் விளையாடுவதற்காக பங்களாதேஷுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இதன் முதல் போட்டி நேற்று முன்தினம் சட்டாக்ராம் விளையாட்டரங்கில் நடைபெற்றது.

ஆப்கானிஸ்தானினால் நிர்ணயிக்கப்பட்ட 216 ஓட்டங்களை வெற்றி இலக்காகக்கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ், 12ஆவது ஓவரில் 6ஆவது விக்கெட்டை இழந்தபோது வெறும் 45 ஓட்டங்களை மாத்திரம் பெற்று திணறிக்கொண்டிருந்தது. எனினும், அபிப் ஹொசைய்னும், மெஹிதி ஹசன் மிராஸும் அற்புதமாகத் துடுப்பெடுத்தாடி தனிநபர்களுக்கான தத்தமது அதிக ஓட்டங்களைப்பெற்று 49ஆவது ஓவரின் 5ஆவது பந்துவீச்சில் பங்களாதேஷின் வெற்றியை உறுதிசெய்தனர்.

நியூசிலாந்துக்கு எதிராக கார்டிவ் அரங்கில் 2017இல் நடைபெற்ற சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் போட்டியில் ஷகிப் அல் ஹசன், மஹ்முதுல்லா ஆகிய இருவரும் சதங்கள் குவித்து பகிர்ந்த 224 ஓட்டங்களின் மூலம் ஈட்டிய வெற்றி பங்களாதேஷ் கிரிக்கெட்டில் மிகச் சிறந்த வெற்றியாக வரலாற்றில் பதிவாகியிருந்தது.

இந்நிலையில், ஐந்து வருடங்களின் பின்னர் சட்டாக்ராம் விளையாட்டரங்கில் ஆப்கானிஸ்தானுக்கு எதிராக அபிப் ஹொசைய்ன், மெஹிதி ஹசன் மிராஸ் ஆகிய இருவரும் முறியடிக்கப்படாத 7ஆவது விக்கெட்டில் 174 ஓட்டங்களைப் பகிர்ந்து பங்களாதேஷுக்கு ஈட்டிக்கொடுத்த வெற்றி மற்றொரு வரலாற்றுச் சாதனையாக பதிவானது.

22 வயதான அபிப் ஹொசைய்ன் 115 பந்துகளை எதிர்கொண்டு ஆட்டமிழக்காமல் 93 ஓட்டங்களைப் பெற்றார். 24 வயதான மெஹிதி ஹசன் மிராஸ் 120 பந்துகளை எதிர்கொண்டு ஆட்டமிழக்காமல் 81 ஓட்டங்களைப் பெற்றார். போட்டியின் ஆட்டநாயகன் விருது மெஹிதி ஹசன் மிராஸுக்கு வழங்கப்பட்டது.

## விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

## சுதந்திரக் கிண்ண உதைபந்து தொடரின் அரையிறுதிச் சுற்று இன்று ஆரம்பம்




(ஏ. அகீல் சிஹாப்)

இலங்கை உதைபந்து சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் மாகாண அணிகளுக்கிடையிலான சுதந்திரக் கிண்ண உதைபந்து தொடரின் அரையிறுதிச் சுற்றுப் போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன.

சொந்த மண், அந்நிய மண் என்ற அடிப்படையில் அரை இறுதிப் போட்டிகள் இரண்டு கட்டங்களாக நடைபெறவுள்ளன. லீக் போட்டிகள் நிறைவில் அணிகள் நிலையில் முதலாம் இடத்தைப் பெற்ற சப்ரகமுவ மாகாணத்துக்கும், நான்காம் இடத்தைப் பெற்ற தென் மாகாணத்துக்கும் இடையிலான முதலாம் கட்ட முதலாவது அரை இறுதிப் போட்டி இன்று காலியில் நடைபெறவுள்ளது.

இரண்டாவது அரை இறுதிப் போட்டி யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நாளை மாலை 3.30 மணிக்கு நடைபெறுகிறது. இதில் வடமாகாண அணியும், கிழக்கு மாகாண அணியும் மோதுகின்றன. வட மாகாணத்துக்கும், கிழக்கு மாகாணத்துக்கும் இடையிலான இரண்டாம் கட்ட அரை இறுதிப் போட்டி மார்ச் முதலாம் திகதி தென்கிழக்குப் பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறுகிறது.

தென் மற்றும் சப்ரகமுவ மாகாண அணிகளுக்கிடையிலான இரண்டாம் கட்ட அரை இறுதிப் போட்டி மார்ச் 2ஆம் திகதி இரத்தினபுரி சீவளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த இரண்டு கட்ட அரை இறுதிப் போட்டிகளிலும் ஒட்டுமொத்த கோல்கள் அடிப்படையில் வெற்றிபெறும் இரண்டு அணிகள் இறுதிப் போட்டியில் விளையாட தகுதிபெறும். ஒட்டுமொத்த கோல்கள் சமநிலையில் இருந்தால் வெற்றி அணி அல்லது அணிகள் பெனல்டி முறையில் தீர்மானிக்கப்படும்.




## நடுவரை மிரட்டிய ஸ்வெரவ் நீக்கம்



ஏ.டி.பி. 500 மெக்ஸிகன் ஓபன் டென்னிஸ் தொடர் தற்சமயம் நடைபெற்றுவரும் நிலையில், நடுவரை அச்சுறுத்தும் விதத்தில் மோசமாக நடந்துகொண்டதற்காக உலகின் மூன்றாம் நிலை வீரரான 24 வயதுடைய ஜேர்மனியைச் சேர்ந்த அலெக்ஸாண்டர் ஸ்வெரவ் நீக்கப்பட்டுள்ளார்.

மெக்சிக்கோவில் நடைபெற்றுவரும் ஏ.டி.பி. 500 மெக்ஸிகன் ஓபன் போட்டியின் இரட்டையர் போட்டியில் பிரேஸிலைச் சேர்ந்த மெலோவுடன் இணைந்து பங்கேற்றார் ஸ்வெரவ். 6-2, 4-6, 10-6 என முதல் சுற்றில் இருவரும் தோற்றார்கள். இந்த ஆட்டத்தில் நடுவர் ஒரு தவறான முடிவை அறிவித்தார் என்று அவர் மீது கோபமாக இருந்தார் ஸ்வெரவ்.

8-6 என டை பிரேக்கரில் இருந்தபோது நடுவர் அறிவித்த முடிவை ஸ்வெரவ் ஏற்கவில்லை. இதனால் ஆட்டம் முடிந்த பிறகு போட்டியாளர்களிடம் கைகுலுக்கிவிட்டு வந்த ஸ்வெரவ், திடீரென தனது ராக்கெட்டால் நடுவர் அமர்ந்திருந்த இருக்கையை ஓங்கி பலமுறை அடித்தார். நடுவரை அச்சுறுத்தும் விதமாக இருக்கையை ஓங்கி அடித்ததால் பாதுகாப்புக் கருதி உடனடியாக அங்கிருந்து வெளியேறினார் நடுவர்.

நடுவரிடம் கோபமாகப் பேசி அவரை மிரட்டும் விதத்தில் நடந்துகொண்டார் ஸ்வெரவ். அரங்கில் இந்தப் பரபரப்பான சம்பவத்தைப் பார்த்த ரசிகர்கள் கரகோஷம் செய்தார்கள். இதையடுத்து ஏ.டி.பி. 500 மெக்ஸிகன் ஓபன் போட்டியிலிருந்து ஸ்வெரவ் நீக்கப்பட்டுள்ளார். ஸ்வெரவின் இந்த மோசமான செயலுக்குப் பலரும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். ஸ்வெரவ் 2020 யு.எஸ். ஓபன் போட்டியில் இரண்டாம் இடம் பிடித்தார். டோக்கியோ ஒலிம்பிக்கில் தங்கம் வென்று அசத்தியமை குறிப்பிடத்தக்கது.

## பஞ்சாப் அணியின் தலைவராகும் அகர்வால் ?



இந்தியன் ப்ரீமியர் லீக் தொடரில் பங்கேற்கும் அணிகளில் ஒன்றான பஞ்சாப் கிங்ஸ் அணியின் புதிய தலைவராக இளம் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் மயங்க் அகர்வால் நியமிக்கப்படவுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பஞ்சாப் கிங்ஸ் அணிக்கு கடந்த சில வருடங்களாக லோகேஷ் ராகுல் அணித் தலைவராக செயற்பட்டார். இந்த ஆண்டுக்கான ஐ.பி.எல். தொடரில் புதிய வரவாக வந்துள்ள லக்னோ சுப்பர் ஜயண்ட்ஸ் அணிக்கு லோகேஷ் ராகுல் சென்றுவிட்டார். அவர் அந்த அணிக்கு தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், பஞ்சாப் கிங்ஸ் அணிக்கு தலைவராக யாரை நியமிப்பதென்பது தொடர்பாக அணி நிர்வாகம் ஆலோசித்து வந்தது. இதில் அந்த அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரரான மயங்க் அகர்வால் அணித்தலைவராக நியமிக்கப்படவுள்ளார் என்ற தகவல் வெளியாகி இருக்கிறது.

பஞ்சாப் அணி நிர்வாகம் மயங்க் அகர்வாலை தக்கவைத்துக்கொண்டது. அணித்தலைவராக மயங்க் அகர்வால் இந்த வார இறுதியில் அறிவிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பஞ்சாப் அணியில் ஷிகர் தவான், ஜொனி பேர்ஸ்டோவ், ககிஸோ ரபடா உள்ளிட்ட முன்னணி வீரர்கள் உள்ளனர். இதில் ஷிகர் தவான் தலைவராக நியமிக்கப்பட வாய்ப்பு உள்ளதாக தகவல் வெளியாகி இருந்தது. ஆனால், மயங்க் அகர்வால் பஞ்சாப் அணியில் கடந்த தொடர்களில் சிறப்பான ஆட்டங்களை வெளிப்படுத்தி உள்ளதால் அவருக்கு தலைமை பொறுப்பு வழங்கப்பட இருக்கிறது. கடந்த 2011ஆம் ஆண்டு ஐ.பி.எல். போட்டிகளில் அறிமுகமான மயங்க் அகர்வால் இதுவரை 100 போட்டிகளில் விளையாடியுள்ளார்.

## சாய்ந்தமருது பிளைங் ஹோர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் ரி–20 சுற்றுப்போட்டி

(எஸ்.அஷ்ரப்கான்)

சாய்ந்தமருது பிளைங் ஹோர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் 40ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மர்ஹூம் பௌஸி ஞாபகார்த்த பிளைங் ஹோர்ஸியன் சுப்பர் ஸ்மாஸ் ரி-20 சுற்றுப்போட்டிக்கான நிரல்படுத்தல் மற்றும் வெற்றிக்கிண்ணங்களை அறிமுகம் செய்து வைக்கும் நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணிக்கு சாய்ந்தமருது அல்-ஜலால் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மிகப் பிரம்மாண்டமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இச்சுற்றுத்தொடரில், பங்குபெற விரும்பும் கழகங்கள் நாளை மாலை 6 மணிக்கு முன் நுழைவுக் கட்டணத்தை செலுத்தி தங்களது அணியின் வருகையை உறுதிசெய்துகொள்ளுமாறு சுற்றுப்போட்டி ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

## அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையிலான விளையாட்டு விழா இன்று ஆரம்பம்




அம்பாறை மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையிலான விளையாட்டு பெருவிழா இன்றுமுதல் ஞாயிற்றுக்கிழமை வரை அம்பாறை நகரில் இடம்பெறவுள்ளது. வரலாற்றில் முதல் தடவையாக இவ்வாறான விளையாட்டுப் போட்டி ஒன்றினை அம்பாறை மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கமல் நெத்மினி ஏற்பாடு செய்துள்ளார்.

இவ்விளையாட்டு பெருவிழாவின் ஆரம்ப வைபவம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு அம்பாறை நகரசபை மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இறுதிப்போட்டி நிகழ்வுகளும் பரிசளிப்பு வைபவமும் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெறவுள்ளன.

இறுதிப்போட்டி நிகழ்வுகளில் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மணிவண்ணன் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார். உதைபந்தாட்டம் மற்றும் கரப்பந்தாட்டப் போட்டிகள் இன்று ஆரம்பமாகி முடிவடையவுள்ளன.

உதைபந்தாட்ட போட்டியில் அட்டாளைச்சேனை பிரதேச சபை அணி, இறக்காமம் பிரதேச சபை அணி, நாவிதன்வெளி பிரதேச சபை அணி, அம்பாறை நகர சபை அணி என்பன போட்டியிடுகின்றன. சனிக்கிழமைமுதல் ஞாயிற்றுக்கிழமை வரை கிரி க்கெட், எல்லே, நீச்சல், பெட்மின்டன் போட்டிகளும் இடம்பெறவுள்ளது.

அம்பாறை மாவட்டத்திலுள்ள 18 உள்ளூராட்சி மன்றங்கள் இவ்விளையாட்டு விழாவில் கலந்துகொண்டு போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. விசேடமாக பெண்களும் இப்போட்டிகளில் இடம்பெறுகின்றனர். குறிப்பாக, கிரிக்கெட் போட்டியில் 9 ஆண்களும், இரண்டு பெண்களும் விளையாடுகின்றனர். அதேபோன்று எல்லே போட்டியில் 12 ஆண்களும், 4 பெண்களும் விளையாடுகின்றனர்.

பெட்மின்டன் போட்டியில் ஆண், பெண் தனி பிரிவாகவும், ஆண், பெண் கலப்பு இரட்டையர் பிரிவாகவும் போட்டிகள் இடம்பெறவுள்ளன. இவ்விளையாட்டு பெருவிழாவில் வெற்றி பெறுகின்ற அணிகளுக்கும், வீராங்கனைகளுக்கும் பரிசுகளும், கிண்ணங்களும் வழங்கப்படவுள்ளன.

அம்பாறை நகர சபை பொது விளையாட்டு மைதானம் மற்றும் வீரசிங்க விளையாட்டு மைதானங்களில் இவ்விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

## ரடுகானு மீது காதல் கொண்ட இளைஞன் சிறையில்!



பிரபல டென்னிஸ் வீராங்கனை எம்மா ரடுகானுவை காதலித்த 35 வயது இளைஞர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரிட்டனைச் சேர்ந்த 19 வயதான பிரபல டென்னிஸ் வீராங்கனையான எம்மா ரடுகானு கடந்தாண்டு அமெரிக்க ஓபன் பட்டத்தை வென்று சாதனை படைத்தார். பார்ப்பதற்கு ஆண்களை கவரும் வண்ணம் இருக்கும் அவரது தோற்றம் பலரையும் ரசிகர்களாக மாற்றியது.

இந்நிலையில், 35 வயதான அம்ரித் மகர் என்பவர் ரடுகானுவை கடந்த 8 மாதமாக உயிருக்கு உயிராக காதலித்து வந்துள்ளார். மேலும் ரடுகானுவை பார்ப்பதற்காக சுமார் 23 கிலோமீற்றர் நடந்தே வந்த அம்ரித், அவருக்கு காதல் தொல்லை கொடுத்துள்ளார். காதல் அட்டை, ரோஜா பூ, விதவிதமான பூங்கொத்து என தினமும் வீட்டு முன்பு வைக்க கிறிஸ்மஸ் அன்று அனுமதி இல்லாமல் வீட்டுக்குள் நுழைந்து பரபரப்பை ஏற்படுத்தினார்.

இதனை ரடுகானும், அவரது குடும்பத்தினரும் கண்டுகொள்ளாத நிலையில், அம்ரித் வீட்டின் முன்பு அசுத்தம் செய்ததாகவும், தொடர்ந்து இதேபோன்று தகாத செயலில் ஈடுபட்டதாகவும் கூறி ரடுகானுவின் தந்தை அந்த இளைஞர் மீண்டும் வீட்டிற்கு வந்தபோது பொலிஸாரிடம் கூறவிட்டார். இதனையடுத்து அந்த இளைஞரை லண்டன் பொலிஸார் அழைத்துச் சென்றனர். அதேசமயம் இளைஞரின் அத்துமீறல் தொடர்பான ஆதாரங்கள் வழங்கப்பட்டதையடுத்து அவர் வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7